# சிவருத்ர புராணம்







367
OFFICE OF THE ... MADRAS
SCANNED
1-49
O33:38
N4P
110748

# சிவருத்ர புராணம்

(செய்யுட்களும், வசனமும் அடங்கியது)

இஃது

மூல ஏடுகளையும் மற்றும் பல பிரதிகளையும்

பரிசோதித்து

மதுரை

**வரகவி மு. கணபதியா பிள்ளை அவர்களாலும்**

பாளையங்கோட்டை

**G. S. செல்லையா பிள்ளை F. B. I., அவர்களாலும்**

இயற்றப் பெற்றது.

—**—

(முதற் பதிப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

லக்ஷ்மி-பிரசுராலயம்,
சிவருத்ர வீதி, களக்காடு.

பதிப்புரிமை] 1948 [விலை ரூ. 1-4-0

முதற்பதிப்பு, டிசம்பர், 1948

உரிமை பெற்றது

பாளையங்கோட்டை:
ராஜா பிரஸில் பதிக்கப்பெற்றது,
(காப்பிகள் 2000.)

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை, முகவுரை, மதிப்புரை, அணிந்துரை முதலியன. | I—VII |
| 2. | சிவருத்ரபுராணம் (காப்புவாழி நீங்கலாக) அந்தாதி 1—183. செய்யுள் பக்கம் | 1—31. |
| 3. | சிவருத்ரபுராண வசனம். | |
| | அத். 1. வீரபத்திரர் திருமணமும், சிவருத்ரர் ஜனனமும். | 1 |
| | ,, 2. வீரபத்திரரின் துறவறமும், கச்சி யாத்திரையும், | 5 |
| | ,, 3. கயல்மணிதேவியின் ஆப்பனூர் வாழ்க்கையும், சிவருத்ரரின் கலைப் பயிற்சியும். | 8 |
| | ,, 4. சிவருத்ரரின் போர்த் திறமையும், நள்ளி அரசரால் கௌரவிக்கப்படுதலும். | 11 |
| | ,, 5. மூவேந்தரின் முற்றுகையும், சிவருத்ரரின் வெற்றியும். | 15 |
| | ,, 6. சிவருத்ரரின் திருமணங்களும் கயல்மணிதேவியின் விஜயமும். | 20 |
| | ,, 7. சிவருத்ரரின் மகுடாபிஷேகமும், மதிமங்கையின் திருமணமும். | 25 |
| | ,, 8. சிவருத்ரர் தமது மனைவிகளுக்கு இல்லம் வகுத்தலும், அவரது முதற் புதல்வனின் துறவறமும். | 29 |
| | ,, 9. சிவருத்ரரின் குலஉற்பத்தி உபதேசமும், அவரது மக்களின் திருமணங்களும். | 33 |

பக்கம்

,, 10. ஈழநாட்டில் காளகேது மன்னரின் அரசாட்சியும், அவரது புதல்வியின் சுயம்வரமும். 38

,, 11. காளகேது அரசர் கயல்மணிதேவி யைச்சந்தித்தலும், ஐந்தில்லகிறைவும். 42

,, 12. புரந்தரசிங்கன் ஈழநாட்டின் அரசனு தலும், நான்கு மக்களின் திக்கு விஜயமும். 44

,, அநுபந்தம். 51

படங்கள் செய்யுள்பக்கம்

1. இராமராஜர் வீரபத்திரருக்குக் கயல்மணிதேவி யைத் தாரைவார்த்தளித்தல். 3
2. வீரபத்திரர் கயிலையேகத் துறவறம் பூண்டு கயல்மணி தேவியைப் பிரிதல். 5
3. கயல்மணிதேவியின் பிரார்த்தனை (அட்டைப்படம்)
4. பரமசிவன் சிவருத்ரருக்குக் கலை பயிற்றுவித்தல். 6
5. பளிங்குமாளிகையில் மங்கையர் கலைப் பயிற்சி. 10
6. சிவருத்ரர் முகுடாபிஷேகம். 16
7. சிவருத்ர குல உபதேசத்தில் தருமகூத்தன் வினவுதல். 21
8. மித்திரசேனையின் சுயம்வர மண்டபம். 24
9. புரந்தரசிங்கனின் சுவீகாரம். 26
10. சிவருத்ரரின் மந்திரோபதேசமும், தீர்த்த யாத்திரையும். 30
11. வீரபத்திரரின் திருவுருவப்படம். வசன பக்கம் 55
12. ஆப்பனூர் ஆலயமும், புராணப்பட விளக்கமும். (அட்டைப்படம், முன்புறம்.)

# சிவருத்ர புராணம்



செய்யுள் ஆசிரியர்:
வரகவி மு. கணபதியா பிள்ளை,
மதுரை.

வசன ஆசிரியர்:
G. S. செல்லையா பிள்ளை, F. B. I.
பாளையங்கோட்டை.

சிவருத்ர புராணம்

# முன்னுரை.

உலகத்திற்கே இருதயம்போன்ற இந்தியாவிலே, முகமண்டலமாகத் திகழும் சென்னை மாகாணத்தின்கண், நேத்திர ஸ்தானமென விளங்கும் தென்னாட்டில், நீர் நில வளச் செழிப்பும் வனப்பும் பொலிந்து, இயற்கை அன்னை இன்னிசை நடனம் புரியும் திருநெல்வேலி ஜில்லா, பனையூரென்னும் க்ஷேத்திரத்திலே, வேண்டுவோர் வேண்டுவன அருளும் தவப் பெருமையும், வரப்பிரசாத மகிமையும் பெற்று, அறுவகைச் சமயத்தோர்க்கும் ஆறுமுகச் சுவாமியாகி, 'திருக் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் மகானுபவன் ஸ்ரீமத். தெக்ஷிணாமூர்த்தி சுவாமிகளுக்கு, பனையூர்ப் பன்மணி மாலை என்னும் நூலியற்றிக் குன்றக்குடி மகா சன்னிதானம் ஸ்ரீமத். கணபதி சுவாமிகள் முன்னிலையில், பக்த கோடிகள் குழுவில் அரங்கேற்றி, அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்ட காலத்திலே, மை ஸ்ரீமத். கணபதி சுவாமிகள், சிவருத்ர புராண ஏட்டுப் பிரதிகளையும் பரிசோதித்து வெளியிடவேண்டுமென்று என்னிடம் தெரிவித்தார்கள். "பெறுமின் பெரியோர் வாய்ச் சொல்" என்ற வாக்கியப் படியே, அப் பெரியோரின் அபிப்பிராயத்திற்கிணங்க, சிவருத்ர புராணத்தின் பழங்கால ஏட்டுப் பிரதிகளைத் தேடிக் கொண்டு வந்து, அவற்றை முழுவதும் ஆராய்ந்து, முரண்பாடுகளைத் திருத்தம் செய்து, அந்தாதித் தொடைகளையும் வரிசைப்படுத்திப் புதுக்கியும் விளக்கியும் தொகுத்து வைத்தேன். இந்நூல் காப்பு வாழி நீங்கலாக நூற்று எண்பத்துமூன்று அந்தாதிச் செய்யுட்களோடு சம்பாகமாகத் திகழ்வதை இந் நூன் முகப்பில் வெளியிடப் பெற்றிருக்கின்றது.

ஆதி வீரபத்திரர் குமாரனான இச் சிவருத்ர புராணம் பிரபஞ்ச உற்பத்தி, தேவகாண்டம், போகர் ஏழாயிரம், வாயு சங்கிதை முதலிய நூல்களிலும் கூறப்பட்ட வீரபத்திரர் உற்பத்தி காலந்தொட்டு, நரசிம்ம சங்கார காலத்தை ஆதியாகக்கொண்டு தோன்றிய சரித்திரம் என்று தண்டகாரண்ய வாசியும் அனந்தம் கிரந்த கர்த்தாவுமான சூத மகரிஷியே கூறியிருக்கின்றார். இன்னும்வேண்டும் ஏதுக்கள் சிவனடி பாதம் ஆதிகாண்டம், பிரமோத்திர காண்டம், தைத்திரியோபனிஷத்து முதலிய நூல்களிலும், ஸ்ரீரங்கப் பட்டய முதலிய சாசனங்களிலும் உண்டு.

சிவ குமாரனான வீரபத்திர மூர்த்திக்கும், ஈழ நாட்டு அரசர் குமாரி கயல்மணிதேவிக்கும் உற்பவித்த இச் சிவருத்ரர், தம் வரப் பிரசாத மகிமையால், அக் காலத்து அரசர்கள் வியக்கப் போர்முதல் போதகம் வரையில் பிரக்கியாதி பெற்ற வீரராய் அரச குமாரர்முதல் அநேகருக்குக் குருவாகி, உலக ஞானமுதல் பிரம ஞானம்வரை உபதேசித்து, ஒருதலைக் காதல்கொண்ட பஞ்ச சத்திகளை மணந்து, பன்னிரு மக்களைப் பெற்று, ஓர் தனிச் சமுதாயத்தையும் சிருஷ்டித்துச் சிறுவை மா நகரில் நீதி வழுவா நெறி முறையில் அரசு புரிந்து வந்தார். தம் மக்களும்

தம்மைப்போலவே வீர தீரர்களாக வாழும் வண்ணம் சகல கலைகளும் அனுக்ரகித்தார். அம் மக்கள் தனித் தனியே தம்பதிகளாக நாலா திசைகளுக்கும் விஜயம் செய்து, ஆங்காங்கு அரசர்களைக் கண்டு, தம் திறமைகளைக் காண்பித்து அவர்களால் வியந்து புகழ்பெற்று அளித்த அரசுரிமையோடு வாழ்ந்து எங்கும் பெருகினூர்கள் என்பதே இந் நூலின் கருப் பொருளாகும்.

தவிரவும், 'சிவருத்ர குலவழித் தோன்றலார்' தங்கள் சம்பந்தங்களில் அநுசரித்துவரும் 'இல்லம்' என்ற உண்மையானது, தொன்று தொட்டு இந் நாள் வரையிலும் கர்ண பரம்பரையாகக் கதை ரூபமாக இச் சமுகத்தார்க்குத் தங்கள் முன்னோரால் அறிவிக்கப் பட்டு வருகின்றது. ஆனால் அதைப் போதிய அளவில் தெரிந்து கொள்வதற்கு ஏட்டுச்சுவடிகளேயன்றி புத்தக ரூபமாக இந்நாள் வரையிலும் யாதொரு நூலும் பிரசுரிக்கப்படாமற் போய்விட்டது. சம்பந்தங்களில் வகை, வழி, வம்சம், கிளை, கோத்திரம் என்ற கட்டுப்பாட்டிற்குள் அமைந்து விளங்கிவரும் பிராமணர், கார்காத்தார் முதலிய சமூகத்தாரைப் போலவே, சிவருத்ரர் சந்ததியாரும் இந் நாள் வரையிலும் முறை பிறழாது விளங்கி வருகின்றனர்.

இப் புண்ணிய நூல் வெளிவருவதற்கு அடிகோலிய ஸ்ரீமத். கணபதி சுவாமிகள் மறைவுக்குப்பின், இதுவரையிலும் இந் நூல் வெளி வராம லிருந்துவிட்டது. இக்குறையை நிறைவேற்றுவதற்கு, ஓடம் நிறையச் சிப்பிகளிருந்தபோதிலும் ஒவ்வொரு சிப்பிகளில் மட்டும் உயர்ந்த முத்துக் கிடைப்பதுபோலவும், வானம் நிறைய நட்சத்திரங்களிருந்தாலும் ஒரு சந்திரனுலேயே நல்ல வெளிச்சம் கிடைப்பது போலவும், நன்மைக்குப் பாடுபடுவதில்விடா முயற்ச்சி யுடையவரான பாளையங்கோட்டை திரு. G. S. செல்லையா பிள்ளை அவர்கள் என்னிடம் செய்யுட்களுக்குப் பிரசுர உரிமை பெற்று, அவைகளுக்குத் தெள்ளிய உரை எழுதி, சிறந்த சித்திரங்களுடன் அழகு படுத்தி, அவற்றை அச்சிட்டுப் புத்தக ரூபமாக இந் நூலை வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுதற் குரியதே.

தேன் மலரில் மொய்க்கும் வண்டுகள் தேனைமட்டும் கிரகித்துக் கொண்டு, மற்றவைகளை விட்டுவிடுவது போலவும், சீனியும் மணலும் விரவி யிருந்தாலும், எறும்புகள் சீனியைமட்டும் எடுத்துக்கொண்டு மணலை நீக்கிவிடுவதுபோலவும், இந் நூலைக் கண்ணுறும் அறிவாளிகள், இந் நூலின் குணத்தையேகொண்டு குற்றங்களை க்ஷமித்துவிடுவார்கள் என்றே நம்புகின்றனன்.

இந் நூலின் தலைவரான சிவருத்ரர், தமது மக்களுக்குப் பலதரப்பட்ட அனுபவத் தொழிலின் முறைகளையும் கற்பித்திருப்பதாக இந் நூலிற் கூறப்படுகிறதேயன்றி, தொழில் முறைகள் கூறப்படாதிருக்கின்றமையால் யாவரும் மற்றவருதவியின்றி,எந்தொழிலையும் அனுபவ

மாகக் கற்றுக்கொள்ளும் வண்ணம் கைகண்ட முறைகளான வைத்தியம், சோதிடம், வர்மம், மந்திரம், தாள சங்கீதம், தேகப் பயிற்சி, சிற்றிலக்கணம், நீதிகள், வேதாந்த சித்தாந்த மதரகசியங்கள், அநேகம் கைத்தொழில்கள், சீர்திருந்த ஆராய்ச்சிகள், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு,பாதாதி கேசவர்ணனைகள், உபமான உபமேயங்களோடு பல சித்திரப் பந்தப் படங்களும் சேர்த்துப் படிப்பவருக்கு எளிதில் விளங்கக்கூடியதாய் சிவருத்ரர் சரித்திரத்தையே அழகு படுத்தும் படி எம்மால் எழுதப் பெற்றிருக்கும் 'சிவருத்ரர் கலிவெண்பா' என்னும் நூல், இதற்குப்பின் வெளிவரும். இங்ஙனம்,

மதுரை, சர்வதாரி ஸ்ரீ. } வைத்திய ஜோதிட வரகவி,
**மு. கணபதியா பிள்ளை.**

——:O:——

# சிவருத்ர புராண வசனம்

## முகவுரை

"நீதி சேரும் நெறிச் சிவருத்ர புராணம்" என்ற ஏட்டுச் சுவடி நூலைப் புத்தக ரூபமாக வெளியிடச் செய்துள்ள இப் பணியில் என்னை ஈடுபடுத்தி, யான் எழுதத் தொடங்கிய காலம் முதற்கொண்டு அச்சியற்றிப் பிரசுரிக்குங்காறும் எனக்குத் தோன்றாத் துணையாக நின்று அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன்.

1913ம் வருடத்தில் சி. எம். எஸ். அச்சகநூல் நிலையத்தில் யான் குமாஸ்தாவாக அமர்ந்தபோது, நெல்லை மா நகரிலுள்ள ஓர் பெரியார் பல நூற்றாண்டுகளுக்குமுன் எழுதப்பட்டதும், செய்யுட்களும் வசனங்களும் அடங்கியதும், 'சிவருத்ர புராணம்' என்று தலைப்பிடப்பட்டதுமான பனையோலைச் சுவடி ஒன்றைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து, அதனை அச்சிட்டுத் தரவேண்டுமெனக் கேட்டார். யான் சிறுவனாயிருந்தபோதே சிவருத்ரரைப்பற்றியும், சிவருத்ர புராண ஏடுகள் இருந்து வருவதைப்பற்றியும் சிறிதளவு பெரியோர் சொல்லக் கேள்விப் பட்டிருந்ததினாலே, அதன் முழு விபரமும் அறிந்துகொள்ள அரிய சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக எண்ணி மகிழ்வுற்றேன். ஆயினும், அச் சுவடிக் கட்டைப் பிரித்துப் பார்த்தபோது, சிற்சில ஏடுகள் பழுதுபட்டனவாயும், தேய்ந்தும், குறைந்தும், முன்னுக்குப்பின் முரணாகக் கோர்க்கப்பட்டனவாயும் காணப்பட்டன. ஆதலின் அவற்றை ஒப்புநோக்கி பேர்த்தெழுதி அச்சியற்றுவதற்கு அதைப்போன்ற வேறொரு சுவடி அவசியமெனத் தெரிவித்தேன். ஆனால் அன்னாரால் அதன்பின் வேறொரு சுவடி சேகரித்துக் கொண்டுவரக் கூடாமற் போயிற்று. அக் காரணம்பற்றியே 1913ம் வருடத்தில் வெளிவந்திருக்க வேண்டிய இந் நூல் இதுகாறும் தாமதித்துவிட்டது.

மூன்று வருடங்களுக்கு முன் 'சிவருத்ர புராணம்' என்று தலைப்பிடப்பட்ட இரண்டு சுவடிக் கட்டுகள் யான் கிடைக்கப்பெற்றேன். அவைகளும் மிகவும் பழமையா யிருந்தபோதிலும் ஒப்பு நோக்கிப் பேர்த்தெழுதுவதற்கு மிகப் பிரயோஜனமாயிருந்தன. எனது ஓய்வு நேரங்களை யெல்லாம் அவற்றை ஊன்றிப் படிப்பதில் செலவிட்டேன். ஆயினும், அவற்றை எழுதி முடிப்பதில் யான் அநுபவித்த கஷ்டங்கள் பல. ஒவ்வொரு வரியிலும் பிழைகள் நிறைந்திருந்தன. குறியீடுகள், கொம்பு, கால், புள்ளி முதலியன அவைகளில் இல்லை. குறிலுக்கும் நெடிலுக்கும், வல்லினம் மெல்லினங்களுக்கும் வேறுபாடு தெரியாமல் எழுதப்பட்டிருந்தன. உபயோகமற்ற ஏடுகளும் முரண்படச் சேர்க்கப்பட்டிருந்தன. அடிகளின் வரையறைகளும் அவைகளில் இல்லை. இது செய்யுள் இது வசனம் என்று அறிய இயலாமல் எல்லாம் ஒன்றாகவே எழுதப்பட்டிருந்தன. இவ்வித கஷ்டங்களை யெல்லாம் யான் பொருட்படுத்தாது உபயோகமான ஏடுகளை வரிசைக் கிரமமாக சீர்படுத்தி எழுதியபோது எக் குலத்தவரும், எம் மதத்தினரும் எவ்வித துவேஷமுமின்றிக் கற்றுணரவேண்டிய அறத்தின் மாட்சியும், அரிய தத்துவங்களும் அதனுள் அமைந்திருப்பதை அறிந்து அதை அச்சியற்ற வேண்டிய அத்யாவசியத்தையும் உணர்ந்தேன்.

பின்னர், மதுரை வரகவி திரு. மு. கணபதியாபிள்ளை அவர்கள் என்னைப்போலவே தாமும் வெகு நாள் சிரமப்பட்டு எழுதி வைத்திருந்த சிவருத்ர புராணச் செய்யுட்களும், வசனங்களும் அடங்கிய கைப்பிரதியொன்றை எனக்குக் கொடுத்து அச் செய்யுட்களுக்குப் பிரசுர உரிமையும் எனக்கு எழுதித் தந்துதவினார்கள். அன்னாரின் பேருதவிக்கு யான் என்றும் நன்றி பாராட்டக் கடப்பாடுடையேன்.

ஆகவே, மேற்சொல்லியவைகளைத் தழுவியும் அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட மற்றும் புராணங்கள், அகராதிகள், இதிகாசங்கள், தலயாத்திரை நூல்கள் முதலியவைகளை ஆராய்ச்சி செய்தும், கருத்துக்கள் எளிதில் விளங்குமாறும் பலருக்கும் பயன்படுமாறும் செவ்வியுறச் சிறிய வாக்கியங்களில் அமைத்துக் கூடியவாறு சுவைபட இவ்வசன நூலை நல்லியற் றமிழில் எழுதி முடித்தேன். யான் எழுதியதை மூல செய்யுட்களோடும் வசனங்களோடும் ஒப்பு நோக்கி, ஆராய்ச்சி செய்து, வழுக்களைக் களைந்து, செப்பஞ் செய்து, மாணவருக்கும் பயன்படுமாறு எளிய நடையுடையதாக எழுதித் தந்துதவிய ஆசிரியர் திரு. N. கிருஷ்ணய்யர் அவர்களுக்கும், வித்துவான் S. பேதரு செல்வநாயகக் கோனார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்திடக் கடமைப்பட்டுள்ளேன். தவிரவும், இந் நூலை அழகு பெறச் செய்வதற்கு இன்றியமையாதனவையான மிகவும் சிறந்த சித்திரங்களை வரைந்து கொடுத்தும் பல்லாற்றானுந் துணைபுரிந்த திரு. செ. ஈச்வரமூர்த்திப்பிள்ளை (ஓவியக்கலைமன்றம், பாளையங்கோட்டை) அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகின்றது.

என் பார்வைக்குக் கிட்டிய சிவருத்ர புராணச் சுவடிக் கட்டுகள் முழுவதும் ஊன்றிப் படித்து ஆராய்ச்சி செய்ததில், சிவருத்ரர் கி. பி. ஏழாவது நூற்றாண்டில் பிறந்தார் என்று துலங்குகின்றது. ஆயினும், அவர் பிறந்த வருடம், மாதம், தெய்தி திட்டமாக எந்த ஏட்டிலும் எழுதப்படவில்லை. "திருக்குறள்" என்னும் அரிய நூலை அருளிய திருவள்ளுவ நாயனார் பிறந்த காலம், இடம், குடிப் பிறப்பு முதலியவைகளுக்குச் சான்று இதுகாறும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும், உலகம் அன்னாரைப் போற்றுகின்றது. கபிலர், கம்பர் முதலிய அநேக ஞானிகள் வரலாறும் அவ்விதமே இருக்கின்றன. உயர்ந்த முத்தானது எக் கடலில் விளைந்திருப்பினும், எக்காலத்தில் கிடைக்கப் பெறினும், முத்து முத்துதான். அதுபோன்று, பரிசுத்தம், ஞானம், மகத்துவம் என்னும் விழுமிய துறைகளில் மேம்பட்டு மிளிர்ந்து விளங்கியவரான சிவருத்ரர் எவ் வருடத்தில் தோன்றி யிருப்பினும் சகல மதிப்புகளுக்கும் அவர் உரியவரென அங்கீகரிப்பது அறிவின் மிக்க பெரியோர் கடமையாகும்.

சரித்திரக் கிரந்தங்களின் முதற் பதிப்பில் பிழைகள் சில ஏற்படக்கூடியது இயல்பு என்பது அறிஞர் அறிந்ததே.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" (குறள்)

ஆகவே, இந் நூல் முதன் முதலாக இப்பொழுதுதான் ஏட்டுச் சுவடிகளினின்றும் பெயர்த்தெழுதி அச்சிட்டு வெளிவந்திருப்பதால், அதிற் காணப்படும் பிழைகளையும் குற்றங் குறைகளையும் விவேகிகள் பொறுத்துக் கொள்வதுடன், அவற்றை அன்பு கூர்ந்து எனக்கு அறிவிப்பார்களாயின் அவை வந்தனத்துடன் அங்கீகரிக்கப்பட்டு மறு பதிப்பில் செம்மை செய்யப்படும்.

இந் நூலுக்குச் சிறந்த அணியாக அமைந்துள்ள மதிப்புரையை அன்புடன் எழுதிக் கொடுத்துபகரித்த, உயர் திரு. மேடை தளவாய் குமாரசுவாமி முதலியார் அவர்களின் பெருந்தகைமை மிகப் பாராட்டப்படும் பான்மைத்தாகும். அப் பெரியார் தமக்குள்ள பல்வேறு கடமைகளுக்கிடையே இந் நூலினையும் வாசித்து இதற்கொரு மதிப்புரை கொடுக்க முன்வந்த அன்புடைமையை யான் நெஞ்சார நினைந்து அவர்களுக்கு எனது பெருநன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிரவும், இந்நூலின் சிறப்புபற்றி அணிந்துரை, புகழுரை, சாற்றுக் கவி முதலியவைகளை அன்புடன் அளித்துதவிய அறிஞர்கள் அனைவருக்கும் என் நன்றியறிதலை மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூல் இக் காலத்துலகில் சிறந்த இடம் பெறுதல் வேண்டுமென்னும் பெரு விருப்பங்கொண்டு இதனை அச்சியற்றி வெளிப்படுத்தியுள்ளேன். ஆகவே, நீதிநெறி ஒழுக்கம் என்பவைகளின் அரிய

தத்துவங்களடங்கிய இச் சிவருத்ர புராணம் என்ற நூலையும், அவைகளைத் தழுவி விரிவுரையுடன் அடுத்து வெளிவரவிருக்கும் ஏனைய நூல்களையும் தமிழ் உலகம் ஆதரித்து, பேர் ஊக்கம் அளித்திடுமென நம்புகிறேன். எனது நோக்கம் நிறைவேறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் முன்னின்று காத்தருள்வாராக.

"கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கேரபுரம் கோவில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள். (பாரதியார்)

*1948, டிசம்பர் மீ*
*பாளையங்கோட்டை.*

இங்ஙனம்,
G. S. செல்லையா பிள்ளை.

——:O:——

*சிவருத்ர புராணம்*

## மதிப்புரை.

"சிவருத்ர புராணம்" என்னும் நூலின் செய்யுட்களும் அவற்றிற்கு நண்பர் ஸ்ரீ G. S. செல்லையாபிள்ளை அவர்கள் எழுதியுள்ள உரையும் படித்துப்பார்த்தேன். தமிழில் வழங்கும் பண்டைக்கால நூல்களில் இதுவும் சிறந்ததெனச் சொல்லலாம். மறைபட்டுக் கிடக்கும் பண்டைய இலக்கியங்கள் திரும்பவும் ஆற்றல் பெற்று உயர்வடைய வேண்டியது மிக அவசியமே. ஆதலின், நண்பர் செல்லையாபிள்ளை அவர்கள் தமிழுக்குப் பெரிய தொண்டே செய்துள்ளார்கள். இந்நூலின் செய்யுட்கள் கவி யின்பமுடையன. உரை மிகத் தெளிவாயும் அரிய கருத்துக்கள் அடங்கியனவாயும் இருக்கின்றன. ஆகவே, இவ்வுரை யாசிரியர் மேற்கொண்ட பேருழைப்பையும் அவர்களின் ஆராய்ச்சித் திறனையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். இத்தகைய நூல்கள் தமிழ் நாட்டில் மிகுந்து மக்களுக்கு இன்பம் தரவேண்டுமென்ற ஆர்வமுடையார்க்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். இந்நூலை யாவரும் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

*நெல்லை*
*16—12—'48*

(கை ஒப்பம்) மேடை தளவாய்
குமாரசாமி முதலியார். (M.L.A.)

# அணிந்துரைகள் அளித்த பேரறிஞர்கள்.

உயர்திரு : *திவான்பகதூர்* P. ஆவுடையப்பபிள்ளை அவர்கள்,
B. A. B. L., *அட்வகேட்.*

,, ராவ் சாகிப் M. V, சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
M. A. L. T. *தி-லி.*

,, முனையதிரை, S. மகராஜபிள்ளை அவர்கள், B. Sc. B. L.,
டிஸ்ட்ரிக்ட் முன்சிப்

,, P. A. தங்கசாமிநாடார்அவர்கள், B. A., M. L., M. L. A.

,, G. துரைசாமிபிள்ளை அவர்கள், M. A. L. T , நெல்லை.

,, S. பாக்கியமுதலியார் அவர்கள், B. A. L. T.
*ஜில்லா விவாக ரிஜிஸ்ற்ரார்,*

,, S. செல்லப்பாண்டியன், B. A. B. L. *அட்வகேட்.*

,, *வித்வான்* வ. தங்கையாநாடார் அவர்கள், *தமிழாசிரியர்.*

,, *வித்வான்* S. பேதறு செல்வநாயகக்கோனர் அவர்கள்.

,, சிவருத்ரகுலப்புராணப் பிரசாரக்கமிட்டியார், *தி-லி. மதுரை.*

,, K நடேச பிள்ளை அவர்கள், B. I. D. S.,
*தனலக்ஷிமி பாங்கு, உறையூர்.*

,, *வித்வான்* P. S. தெக்ஷணாமூர்த்தி அவர்கள், *சிவகங்கை.*

,, K. M. செல்லையா அவர்கள், B.A. (Hons.) B.L.,
*டிப்டி தாசில்தார்.*

,, *டாக்டர்* M. தங்கவேலு அவர்கள் M. D., *சென்னை.*

,, S. குமாரவேலு M.A.,L.T., S. L. B. *உயர்தரக்*
*கல்லூரி, நாகர்கோவில்.*

,, S. பல்பு அவர்கள், B. A., *டிப்டி தாசில்தார்,*

,, A. பல்பு அவர்கள், B. A., B. L., *மார்த்தாண்டம்.*

,, Lieutenant P. சுப்பிரமணியன், G M. V. C.,
*மிருக ஆஸ்பத்திரி டாக்டர்.*

,, K. பூதலிங்கம் B. A., B. L., *முனிசிபல் கமிஷனர்.*

மேற்சொல்லிப பெரியார்களின் அணிந்துரைகள் பிரத்தியேகமாக அச்சியற்றப்பட்டிருக்கின்றன. அதன் விலை அணு 2.

# சிவருத்ர புராணம்.

(அந்தாதி)

கடவுள் வணக்கம்.

ஆதி வேத வியாசநற் சூதனு
ரோது பாடற் பதினெண் புராணத்துள்
நீதி சேரும் நெறிச்சிவ ருத்ரரின்
காதை கூறக் கடவுளுங் காக்கவே.

நூல்

விருத்தம்

மாற்றினுக் கரிய பொன்னின் வரையுறை சிவனை மாலைந்
தோற்றுவித் தயன் வியாதன் துணையடிக் கருத்தில் வைத்தே
நாற்றிசை யுலகுங் காக்கும் நங்கையைத் திருவை நாவில்
வீற்றிருந் தவளை வாழ்த்தி விளம்பினன் சூத னாதி. 1

வேறு

ஆதி மாதவ னிரணிய வதைசெய்த வன்னாட்
சூத மாகிய வுதிரத்தை யருந்தாற் சுவைத்தே
காத லாகிய கடலொரு மூன்றினிற் களிக்குங்
கோதை சேகரன் குவலயங் குலுங்கிடக் குதித்தான். 2

குதித்த மாதவன் குவலயம் பலப்பல குலுங்க
மிதித்த நான்முகன் விபுத ரானவ ருளமெலிந்தும்
பதித்த தேவதா சங்கமோ டுயிர்களும் பயந்தே
துதித்து மீசனைத் துணைபுரிந் தருள்கெனத் தொழுதார். 3

தொழுத தேவரை யமர்த்தியே சொன்மினென் றிறைவன்
பழுது தீவினை யேதெனப் பயந்தனர் பூமி
யுழுத நாயக னுலகமீ ரேழுயிர் மடியப்
பழுது செய்பவர் நாரண னென்றவர் பகர்ந்தார். 4

பகர்ந்த தேவர்கள் வினையற விமலைநன் பாக
னுகந்து நான்மறைக் குரிசிலாந் தக்கனு டுயிரைக்
கவர்ந்த வீரனை யவனருட் புரிந்திடக் கடிதாய்ந்
திகழ்ந்த விச்சகம் நடுங்கிடச் சரபநேர் செனித்தான். 5

வேறு

தானவர் வானவர் தரும யோகியர்
வானவர் கோனுடன் மறை வல்லாளனு
மானவர் முதலினேர் மருண்டு மஞ்சவே
கானவெம் புயலெனக் கடந்து கொத்தினன். 6

கொத்தலுஞ் சினத்தலுங் குருவை தன்சிர
மற்றதுங் கணைத்தினி லரியு மாண்டிடச்
சித்தனுஞ் சென்னியை மாலை சேர்த்தபின்
நத்தெனத் தொண்டைவாய் வாம மூதினன். 7

வேறு

வாம பாகத்திற் கவுரியை வைத்தருள் வள்ளல்
சோம வாரணக் குரிசிலை நோக்கியே சொல்லும்
வீம னென்பவன் வீரபத் திரன்றனக் கன்பாய்க்
காம லாகிரி தீர்ந்திட நின்னருட் கருதாய். 8

கருது மிந்திரன் வானவர் குழாங்களைக் கடவு
ளரிய வானவ ரவனியர் குலங்களி லழகா
யுரிய தூதரை யழைத்துநீ யனுப்பியே வுலகிற்
றிருவை யொப்பதோர்த் தேவியைத் தேடிவந் திடுமே. 9

தேடு மாதவன் மறையவன் றெரிகிலா வடிவைச்
சூடு வாசவன் தொழுதுமே பொன்னுல கேகி
நீடு லோகத்திற் றூதரை நிரைநிரை விடுப்ப
வோடி யோடியே வுலகெலா மும்பர்தே டினரே. 10

தேடு மூவுல கெங்கணுந் தேவர்க டிகைத்துக்
கோடு மூதெழிற் குஞ்சரக் குழுநிறை விரை
நாடு புக்கியந் நரபதி யீழநாட் டிராம
வீடு கற்புடை மாதுபெற் றநடயா நிதியே. 11

நிதியை யொப்பதோர் கயல்மணி தேவியை மலைமேன்
மதியை யொப்பவுப் பரிகைமேற் கண்டுவான் றூத
ரதிக கற்புடைத் திருரதி யமைவென வமரர்
பதியி லிந்திரன் பக்கல்போய்த் தனித்தனிப் பகர்ந்தார். 12

பகரத் தூதுவர் பாகசா தனன்மிக மகிழ்ந்து
நகர்விட் டேகியே நண்ணின னிழமா புரிக்குப்
புகர்வெண் யானைமேற் பொருந்தியவ் வரண்மனை புக்கான்
மகர கேதன னிராமனும் வந்தனை புரிந்தான். 13

வேறு

வந்தநற் றூதரும் வணங்க விந்திரன்
மந்திரி தானைசூழ் மன்னனை வாழ்த்தியே
யுந்தனி னெண்மகள் கயல்மணி தேவியைக்
கந்தன்பின் றோன்றிய காஅனைக் கீகென்றான். 14

ஈகென்ற வம்மொழிக் கிசைந்து ராமனு
மாமன்ற லென்றரண் மனைதன் னுடெல்லாம்
பூமன்றன் சிருட்டிமேற் பொலிந்து மின்னவே
தாமலங் கரித்தனன் சபைசொன் முத்தனே. 15



படம் 1. இராமராஜர் விரபத்திரருக்குக் கயல்மணிதேவியைத் தாரைவார்த் தளித்தல்.

வேறு

முத்திக்கு வித்தாம்வேத முதல்வனு ரருளினாலே
நற்றவப் பேறுமுள்ள ராமனு மரசர்கோமான்
பெற்றநற் கன்னியாரைப் பிரமனும் புகழவீசன்
புத்திரன் கமலக்கையிற் பொங்கவே தாரைவார்த்தான். 16

வார்த்தநல் லரசனை மகிழ்ந்து மீசுரன்
பார்த்துமுள் ளன்பொடு பரிதிப் பொன்முடிக்
கீர்த்திய நின்புவிக் கிளர்ந்த நல்வளம்
பூர்த்தியாய் வாழ்கெனப் புகன்று போயினன். 17

வேறு

நான்முகன் படைத்தவிழ நரபதி புதல்வியோடு
மான்மழுத் தரித்தவீரன் மைந்தனும் வீரபத்ரன்
தேன்கனி யமுதையுண்டு திசைதொறு மக்கள்போற்ற
நூன்முறை தழுவிவாழ்ந்தா னுவலருள் பொங்கத்தானே. 18

பொங்கர வணிந்தநாதன் புதல்வனும் வீரபத்ரன்
அங்கயல் மணியோடன்பா யில்லறம் நடத்துங்காலைச்
செங்கதிர்ப் பிழம்புபோலச் செனித்தது கருப்பம்நன்னாட்
டிங்களோர் கோடிக்கொப்பா யுதித்தனன் சிறுவனம்மா. 19

உதித்தநற் பாலனுக்கு முகந்தநாள் ராமவேந்தன்
மதித்திடு நாமஞ்சூட்ட மறையவர் பெரியோர்சூழத்
துதித்துல கோர்கொண்டாடச் சொல்சிவ ருத்ரனென்றே
விதித்திடும் வீரபத்ரன் விளம்பினன் சிறுவனுக்கே. 20

சிறுவனே ராண்டுசெல்லத் துறவுரு வீரபத்ரன்
மருவிலா மகனையேந்தி மதித்தொரு குலமுண்டாக்கும்
குருமுனிக் கனையவித்வான் குகற்கிணைப் பலவானென்று
மருங்கயல் மணிக்குமாசி யருளிப்பின் கயிலைநோக்கான். 21

நோக்கிய கணவன்போக நுண்மதிக் கயலின்றேவி
யாக்கிய விதியையுன்னி யருமந்த மகனையேந்தி
வூக்கிய கணவன்பின்னுள் ளுலைந்திராத் தொடரக்கண்டு
வாக்குயர் வீரபத்திரன் வாரிதிக் கரைபோய்நின்றான். 22

நின்றதோர் கணவனுரை நேரிழை வணங்கியேங்கி
நன்றுகொன் மணந்தமாதை நடுக்கடல் தன்னில்விட்டு
துன்றுமால் பிரமனீசன் துறவறஞ் சென்றிலாரே
யென்றுமென் கதிநீரென்றே யியம்பினள் கிலேசத்தோடும். 23

தோடணி விமலன்பாலன் றுணையென நடந்துகச்சி
நாடுசென் றனேகநூலின் ரகசிய முரைத்துச்செல்வம்
வீடதுந் தருமாவீசன் மெய்த்துணை யென்றுசாற்றிச்
சூடக மணையாட்காரி சொற்றலன் வீரபத்ரன். 24

பத்திரன் சொற்றகாலைப் பலப்பல வையந்தோற்ற
வெத்திற மியம்புமென்று விறைவர்தம் மியல்பும்பூவிற்
றத்துறு சிருட்டிதன்னிற் றகவறு வேற்றத்தாழ்வும்
வித்தக மதங்கள்வேறும் விளக்கிடச் சேர்ந்தார்கச்சி. 25



படம் 2. வீரபத்திரர் கயிலையேகத் துறவறம் பூண்டு
கயல்மணிதேவியைப் பிரிதல்.

கச்சியில் மனையைவிட்டுக் கடவுள்சேய் கயிலைபுக்கான்
மச்சமில் பசும்பொன்மேனி மாதவள் சிசுவை யேந்தி
உச்சிவே ளையில்மெய்வாட வம்பர னருள்பெற்றுங்கே
பச்சிளங் கொடிநடந்தாள் பல்காதங் கச்சின்றென்பால். 26

கச்சிதக் கயலின்றேவி கணவர்சொற் றிறம்பாமங்கை
அச்சமிற் கச்சின்றென்பா லாப்பனு ரடைந்து மீச
னர்ச்சனைப் பூவெடுத்தோ ரவ்வையோ டதிதிபோல
வர்சுநன் மாதுக்கொப்பா ளையிரண் டாண்டுவாழ்ந்தாள். 27

வேறு

வாழ்ந்திடு மந்தனுள் மைந்த னுக்கருள்
சூழ்ந்தநற் கல்விபோர்ச் சுரிகை வேண்டியே
தாழ்ந்திறை சம்புவின் சன்னிதா னத்திலே
வீழ்ந்திறைஞ் சினளுமை வாமன் மெச்சவே. 28

வேறு

வாம பாகத்திற் கவுரியு மலரரா பிறைநீர்
சாம கானமும் சபைதிகழ் மான்மழுக் கையன்
காம னுவிபை யெரிசெய்த நுதல்விழிக் கருணைப்
பூம னேவர விருத்தராய்க் கயல்மனி கண்டான். 29



படம் 4. பரமசிவன் சிவருத்ரருக்குக் கலை பயிற்றுவித்தல்.

வேறு

கயல்மணிற் றவசியோதக் கடவுளா மடிகளேக்கிப்
புயல்வணன் றனக்கொப்பாகப் போர்த்திறந் தொழிலின்கல்வி
செயல்புரி மந்த்ரம்வில்வாள் சிவருத்ரன் றனக்கேயீந்து
அயலறி யாதவண்ண மருள்புரிந் தவரும்போனர். 30

போனபின் வீரபத்ரன் புத்திரன் புதுமையாக
மாநிலத் தவர்பாராட்ட வல்லமை காட்டிவாகைக்
கோனுரை வாளிற்றுக்கிக் குருமனித் தாயைப்போற்றிப்
பானுவின் குலத்துநள்ளிப் பார்த்திப னவைமுற்சார்ந்தான். 31

சார்ந்தசே யாண்மைகண்டு சம்புவின் குலத்துவேந்தன்
வாய்ந்தநீ யாரோவென்ன வரசிவ ருத்ரன்சொல்வா
னேய்ந்தமுக் குணத்தோர்க்கெல்லா மிசைந்தசற் குருவாய்த்தேசஞ்
சேர்ந்திட வுரைத்தானம்மைத் தில்லையம் பலத்துந்தேவன், 32

தில்லையம் பலவனீன்ற தேசிகன் வீரபத்ரன்
வல்லமைப் புதல்வன்மன்னர் மகிழ்சிவ ருத்ரனென்பேர்
வல்லிய விருதாயுந்தன் வாட்டொழில் வீரர்தம்மை
வெல்லுதற் கெந்தன்மீதிற் விரைவுட னேவுமென்றான். 33

என்றவன் கூறநள்ளி யிறைவனுச் சரியமுற்று
நன்றுநன் றெனவேவீரம் நல்கிய பலரையேவ
துன்றிய வீரர்பொங்கிச் சூழ்ந்தனர் ருத்ரன்றன்னை
யொன்றுகண் ணிமைக்குமுன்னே யுருட்டினன் பறித்தவாளால். 34

வாளர வொத்தமல்லர் மடிந்ததை மகிபன்பார்த்து
ஆளரி யிவன்றானென்ன வதிசயஞ் சினமுங்கொண்டு
வேளரி யனையமன்னன் விறற்படைத் தலைச்சேயோடு
மீளவுஞ் சேனையேவி வெல்லென்று னள்ளிவேந்தன். 35

வேந்தனைப் பணிந்துமுக்ர வீரசேய் வினையாதையா
வாய்ந்தவர் சேரசோழ மராடரோ தென்னர்கொல்லோ
காய்ந்தவவ் வீரனுரோ கணத்தினி லுரைப்பீரென்னப்
பாய்ந்தநற் பாலன்செய்தி பகர்ந்தனன் மைந்தனுக்கே. 36

மைந்தனுந் தந்தையார்முன் மனதினி லிகழ்ந்து சொல்வா
னெந்தனுக் கெதிரியாகு மிந்திரன் றானைவேம்புச்
சுந்தரப் புயத்தான்மாரன் சூரனும் விக்ரன்வீர
ரிந்தவோர்ச் சிறுவற்கென்னை யெதிரியா யேவலாமோ. 37

ஏவினே னென்றுநீயு மீட்டுறு வசனஞ் சொற்றாய்ப்
பாவிபோ லிவன்றனுண்மை பகரவும் படுமோ திக்கு
நாவுயர் பலத்துவீர மல்லரை வதைத்தா னன்று
மாவியைக் கொணர்திபோவென் றதட்டினு னரசன்றானே. 38

அரசர்கோ னேவலாலே யாத்திர மூண்டசேனைப்
பொருமமர்க் களத்துமென்மேற் பொலிந்தணி வகுத்துச்சூழப்
பிரசமார்க் கொன்றைத்தார னுருத்திரன் பிறைசிபோல
வரவர நகைத்துநின்ருன் மன்மக னார்ப்பரித்தான். 39

ஆர்ப்பரித் தரசர்கோமா னணியணி யாகப்பாய
மாப்பரி தேர்கள்மோத மந்திரந் தரசர்வீரர்
நாற்புவிப் பலபேரஞ்ச நடுங்கிடச் சேடன்சென்னித்
தீப்புகை வானமேகச் சிதைத்தனன் சிவருத்ரன்ருன். 40

ருத்திரன் பருந்தாய்ப் பாய்ந்து நொறுக்கிட ருத்ரன்மீது
சத்திய நாகவிட்டி தாக்கின னரசன் மைந்தன்
பத்திகொள் பதாதியாங்கே பலதரப் பட்டபாணந்
தத்திய மழைபோற்பெய்தார் தடுத்திட்டார் சிறிதுவாளி. 41

வேறு

வாளியும்வாளு முறித்தவர்மாவொரு கோடிதுணித்துமீள
வாளிதொடுத்தடர் மல்லர்கள்விழ வதைத்துமுதைத்திடவே
கூளிநாயோரி கழுகுடல்கோலி விரட்டியருந்திடவே
நாளதுமூன்று நடத்தினர்போர்க்கொடி நாட்டுநிலத்தினிலே. 42

நிலத்தகுவாளி சிரத்தெழநீள்புகை மேகமுகட்டுடனே
புலத்துறமாக்கள் முறித்தெழப்பேதையர் கையைநெறித்தழவே
சலத்திடைமேவு கயற்றிரள்தசையு முண்டுதயங்கிடவே
குலைந்திடுகுமலி கூடிடப்பிணமே குவிந்துகிடந்ததுவே. 43

வேறு

ததுபரி பத்துநூறு சகடொடு பத்துநூறு
மதகரி கடகமொன்று மன்னவ னென்றுசேனை
யதிவிதுக் குலத்தினூறு மமரிலே மாண்டால்ருத்ரன்
கதிபெறு காண்டீபத்திற் கணீரென மணியினேசை. 44

வேறு

ஓசையாய் மணிகள்கூவ வோரரைக் கடிகைமட்டும்
மாசுற மயக்கமாக வந்தநற் சேனையெல்லாங்
கேசரிக் குழவிகண்ட களிறெனக் கதிகெட்டோடி
யோசையா யிராசனீன்ற வதிபனை யகன்றுபோனர். 45

போனபின் நள்ளிமைந்தன் போர்க்களந் தன்னினின்று
பானுவின் குலத்துமுன்னோர் பழிப்பரென் றுருக்கமாக
வானவர் கோனைத்தாங்கு மதகரி முழங்குமாப்போல்
வானவர் வெருவியோட மழையெனக் கணைகடுவும். 46

தூவிய கணைகளெல்லாஞ் சோர்வறத் தடுத்துருத்ரன்
றேவர்கள் பணியும்பானு சிறந்தநற் குலத்துமன்னே
யாவதே துன்னையீன்ற வரசனுக் குரைபோவென்னப்
பூவன மைந்தனுங்கே யோர்மொழி புகல்வதானுன். 47

புகலுறு பரிதிமுன்னே பொலிவதோ காந்திமின்மின்
ககனவர் வரிமுன்னுண்மை காட்டுமோ நரியின்குட்டி
மகபதி வச்சிரத்தோர் பாயமற் றெருவாளுண்டோ
செகமதி லும்போல்வீரத் தேசிக ருண்டோவையா. 48

தேசிகா கரிகள்கோடி திரண்டதிற் சிறுவாற்குஞ்சக்
கேசரி யொன்றுவந்தாற் கெழுங்களி றென்னவாகு
மீசனுர் பேரனும்மோ டிரவிதன் மைந்தனீடோ
தேசுளா யுமக்கேயானுஞ் சிறுதொழி லாளனென்றுன். 49

என்றுதான் றுதித்தபின்பு மிரவிதன் குலத்துமைந்தன்
துன்றுபே ருவகையாகித் தொழுதரன் குலத்தினனை
முண்டகக் கரத்தாற்பற்றி முழுமணி யழுத்தும்பொன்னின்
றண்டிகை மீதுவைத்துத் தன்பதி தஞ்சைபுக்கான். 50

புக்கலும் நகரிலெங்கும் புகழ்விழாப் பவனிசெய்து
பக்கல்வந் தரசனிற்கப் பரிதிசேய் சிவருத்ரன்றன்
சக்தியை வியக்க மன்னன் றடக்கையால் ருத்ரன்றன்னை
யக்கணந் தழுவச்சேயு மன்புடன் தழுவினனே. 51

தழுவியே முகமன்கூறித் தனிச்சிவ ருத்ரன்றன்னை
முழுமன தோடுபோற்றி முதன்மையாங் குமாரனுக்கும்
பழுதறக் கலைகளெல்லாம் பயிற்றுவீ ரென்னப்பன்னுள்
வழுவற வுரைத்துவந்தான் மகிழ்ந்திட மன்னன்நள்ளி. 52

நன்விமா வள்ளலீந்த நறுமலர்த் தத்தையாளை
வொள்ளியா ளாக்குமாறு வுடனிசை நடனமாதித்
தெள்ளறுங் கலைகள்சான்ற தேவிகண் டிகையாளோடு
மெள்ளறு முமையாளோடு மெழில்மிகு சோலைபுக்கி. 53

புக்கவ ரிருக்குங்காலைப் புரந்தரன் றன்னைவென்றக்
கொற்கையம் பதியில்மாரன் கோனுடன் வீரகோனு
மொக்கமு வரசுங்கூடி வந்துநற் றஞ்சைசூழ்ந்துந்
திக்கற வளைந்துகொண்டார் செய்தரை மதியமொன்றே. 54



படம் 5. பளிங்கு மாளிகையில் மங்கையர் கலைப் பயிற்சி.

ஒன்றிய சேரன்சேனை யுவந்தநற் றஞ்சைபுக்குச்
சென்றுமவ் வணிகமாதுஞ் செய்தவப் பாணமாது
மன்றலன் மகளுங்கன்னி மாடத்திற் றுயிலுங்காலைக்
கன்றிடக் கன்னிமாராற் கவர்ந்துபொற் சிவிகைபோனர். 55

போனவர் தந்தைதாயும் பூபதிக் கோவிலேகிப்
பானுவின் மன்னன்முன்னே பரதவித் தழுதுசொல்ல
யானுமும் நிலையிலுள்ளோ முருந்திரர்க் கறைவிரென்னச்
சேனைவெங் கரிதேர்கொண்டு சிவருத்ரன் தொடரலுற்றான். 56

உற்றமூ வரசர்சேனை யுறுதியாய்ப் பூசல்செய்ய
ருத்திர குலத்துருத்ர னுமையொரு பாகனீந்த
பத்திர மதனினாலும் பலப்பல வாளியாலும்
வெற்றிகொண் மாதர்மூவர் மீட்டபின் வனைத்தார்மன்னர். 57

மன்னவர் மூவர்சேனை வாரிதித் திரைநேர் சீறிப்
பன்னிருப் பகுதியாகப் பரியொடு பாய்ந்துமோதிக்
கன்னிகை வியூகமாகப் பாலனைக் கண்டுசுற்றித்
தென்னவன் வீரன்சேரன் திரும்பவு மெதிர்க்கலுற்றார். 58

வேறு

எதிரிடுமருவலர் முடியதுசிதறியோ ரிமைப்போதி
லதிர்படுமிடலவ ரடலுறுமொழிபல படக்கூறித்
ததிவிதசரபம் தனுமுதலெனவவ ரமர்தேர்விற்
சதிமடன்முறியவே சமரதுசெய்தனன் சிவருத்ரன். 59

ருத்திரனென்பான் றராளிளமாற னிகல்சேரச்
சத்துருவீரன் சரபதிசேரன் சமர்யானை
மத்தகமேறி ருத்திரபூமனை மழைபோல
மெத்தழலாகிய சரமொருகோடி மிகவெய்தான். 60

ஏய்திடும்வீர ரலமரக்கோடி யிடருற்றே
கைதவர்வேல்வாள் கழுமுட்குந்தகக் கரவீரர்
ஐயிருகோடிய ருத்திரர்மீதினி லமராடி
மெய்தெரியாதுமுன் றவரவர்பொருதே மெலிவானார். 61

வானவரீசன் வடிகணைதென்னன் முடிசாய
வானவரீசன் வடிவுளசேரன் வடுவாக
வானவரீசன் மநிலையின்செல்வன் சிவருத்ரன்
வானவரீசன் வாளியதாலே மழைபெய்தான். 62

தானவர்போரிற் போனவர்வீழ்ந்துந் தள்ளாடுங்
கானவர்போரில் மெய்த்தொழில்வீரர் கரமாயு
மானைகள்கோடி கூடிநின்றுலு மமரேசன்
வானவர்பேரன் றன்னுருக்கண்டால் மருண்டோடும். 63

ஓடுவர்வீரர் கவசமிழந்தே வுள்ளத்து
வாடுவர்வீரர் தனுவையிழந்தே வனுமாண்டு
நாடுவர்வீரர் தன்பதிதேடி நடைநாணி
வேடுவர்கோனும் வீரர்சரத்தால் மெலிவானுர். 64

ஆவகைவில்லிய மாமகன்மைந்த னமரத்தே
தானுறுமரசர் சாபமும்சரமும் கைதவற
வானவரிசைமீட் டனரவரவர்கெம் பீரமகிழ்ளா
லானையுமாவு மிரதமுமறத்தனி யபார்வாரே. 65

வேறு

ஆர வாரத் துலகெலாம் புரந்திடு மரசர்
பார மாமுடி யொடுதுவசமும் பலவிருதுங்
கார லாவிய கவிகையும் கவசமு மிழந்தே
வீர ரோடினர் வரவரப் பதிதனின் மெலிந்தே. 66

மெலிந்த வீரர்தங் கடானையி லானைகள் புரண்டு
மலிந்த தந்தமோர் வரையினு மதிகமாங் குருதி
கலந்த பொன்னியின் புனலெனப் பரவைபோற் சிவப்ப
நலிந்த கூளியும் ஞமலியுங் கணங்களுஞ் செருக்கும். 67

செருக்கு மூவர்கள் போனபி னிரவிதன் செல்வன்
குகற்குச் சோதர ருதவிய குரிசிலை மகிழ்ந்து
மகத்து வானவர்க் கரசனை வென்றவ னிற்ருய்
செகத்து மன்னர்தங் குடோரிநீ தெரிதர வென்ருன். 68

வேறு

என்றவ னுரைத்தபோது யிரவிதன் குலத்துமன்னை
யண்டினே னுன்னைவந்து மையனீ ரஞ்சவேண்டா
மண்டர்கோன் வெருளுமார னைம்பொன்மா முடியீதென்று
சென்றவன் முன்னேகாட்டித் தேசிகன் தழுவினனே. 69

தழுவிய சிவன்சேய்த்தாவிற் றன்மகன் றடக்கைபற்றிப்
பழுதறப் பணிநீயென்று பாலனை முனைந்துசொல்வான்
முழுதுறப் பரிசைவாளின் முறைத்தொழில் பத்தோடெட்டுஞ்
செழுமதிக் குலனைவெல்லச் சிறுவருக் குரைப்பிரென்ருன். 70

என்றசொல் லரசன்கூற யிறைவன்சேய் மைந்தன்பின்னே
சென்றுநும் குலத்துப்பாலர் சேரவே யழையுமென்ன
நன்றெனப் புகழுந்தஞ்சை மன்னவன் குலத்துப்பால
ரன்றொரு நூற்றுப்பத்தோ ரழைத்துமுன் கொணர்ந்துவிட்டார். 71

வேறு

விட்டிடு பாலகர் மேன்மையதாக விரல்வேந்தர்
பட்டுடைக் கச்சை பலகையும்வாளும் பணியமைத்துக்
குட்டொடு மோதக மாங்கனிநல்கிக் குகன்முன்னோன்
திட்டம தாகும் பூசைகள்செய்தார் சிறியோர்கள். 72

சிறியவர் நூற்றுப் பத்தொடுவாழ்ந்து சிவருத்ர
னுறுதிகொள் படைத்தொழிற் கலைபலகற்பித் தோராண்டி
லறிவுறு மன்னன் கோவில்முன்னேகிக் கலைபாவும்
பரிவுறு சிறியவர் காட்டிடச்செய்தான் பரன்மைந்தன். 73

மைந்தரை யீன்ற தந்தைதாய்தமரோர் சிவருத்ர
னைந்தரு வானவர் வீரரென்றேதுதித் தரசோடு
முந்திய வேட்ட முடித்தேதேசிகர் முறையோடு
மந்திரி யாகவும் வைப்பதுநல்லது மகிழ்வென்பார். 74

பாரது வாழுஞ் சோதிமகுடன் பரிவோடு
நாரிய ரான நங்கையர்மூன்றை நலிவேகப்
போரது வென்று சிறையதுமீட்ட புண்ணியனார்
தார மிவர்க்கே யல்லதுவேறு தகையுண்டோ. 75

தகைபெற மூன்று தையலர்ருத்ரன் காதலினான்
மிகைபெற மேனி மெலிவுறக்கண்டவ ரன்னையரும்
பகையறத் தத்தங் கணவர்முன்நொந்தே பரிந்தோத
வகைபெறச் சொற்று னரசனிடம்பண் டிதசாமி. 76

வேறு

பண்டித சாமியென்னும் பாணவிந் வான்புதல்வி
கண்டிகை யானைருத்ரர்க் கல்யாணஞ் செய்வானெண்ணி
உண்டியற் றந்தனுந்தம் முயர்மக ளுமையம்மாளை
அண்டரு மதிக்கருத்ரர்க் கரசன்முன் மணஞ்செய்வித்தான். 77

வேறு.

செய்திடுவேனையில் நள்ளிமன்னீன்ற திருதத்தை
மெய்தடுமாறி யணிபணியாமல் வேந்தன்முன்
கையருநீட்டிக் கண்ணீர்பெருகக் கடுஞ்சொல்லா
லுய்குவனேயான் ருத்ரர்க்கெனையு முநவாயால். 78

ஆலமதுண்டவ ரென்னநடுங்கியு மலமந்து
கோலமழிந்திட வேந்தர்கள்மூவர் கொடுபோங்கால்
ஞாலமதிர்ந்திட வேந்தர்கள்தன்படை நடுவந்து
சீலமுடன்சிறை மீட்டவரன்றே சிவருத்ரர். 79

ருத்ரர்க்கெனையும் வதுவைசெய்பா விடினும்மீதிற்
செத்தொருபாதக லோகவதூறு திறஞ்செய்வேன்
மெய்த்திருமாதர்கள் மூவரிலிருவரை வேட்டலிட்டார்
தென்றிசைக்காரனுக் கீயாளொருவளைச் சிறையென்றுள். 80

வேறு

என்றுதம் புநல்விகூற யிரவிதன் குலத்துநள்ளி
யண்டர்தன்குலத்தின்பின்னு மரசினர் குலத்துமாதைக்
கண்டுளங் கசிந்துமிக்க கடவுளா ரருளிதென்று
மன்றுணர் வதுவைசெய்தா ரரன்மகன் மைந்தனுக்கே. 81

அரன்மகன் மைந்தன்மிக்க வாயிழை மூவரோடும்
வரிமிகு பளிங்குமாடம் வாழ்ந்திட வோர்நாள்ருத்ர
னுரமுற வன்னையென்ன முதிக்கவுட் டுடித்திராச
னருகுதன் விரைந்துசென்று னரன்மகன் மைந்தனம்மா. 82

அரன்மகன் மைந்தன்நோக்கி ஆதவன் குலத்துமன்னே
டொருமொழி புகல்வான்றன்னை யுதவிய வன்னையாரை
அரனுரை யாப்பனூரில் வைத்தன னரசரேறே
திரமுட னவளைக்கண்டு திரும்புமா விடையீகென்றுன். 83

என்றவன் மொழியநள்ளி யிறைவனற் கரங்கள்பற்றி
நல்றுநன் றும்மையீன்ற நாயகி யெம்மோடுற்று
வின்றுயெங் குலத்திலுள்ள யிரவிதன் மைந்தர்போற்ற
நின்றுநங் குருவுமாக வாழுதீ ரையாவென்றுன். 84

ஐயநின் னன்னையாரைக் கணத்தினி லழைப்போமென்று
மெய்தவ ருதமன்னன் விளங்கரண் மனைக்குளுள்ள
செய்தவத் தொழிலின்மிக்க சேடியர் சிவிகையோடும்
பையர வுயர்த்தோன் சேயின் பாலன்முன் னேவலுற்றான். 85

உற்றநற் றுதிபாரை யுந்தம ருத்ரன்கூவி
வித்தகத் திருவையன்ன மெல்லிய லாரேயென்னைப்
பெற்றநல் லன்னமன்ன பேதைபூப் பணிசெய்சாந்த
யுத்தமி யவரைநீவி ருணர்ந்தீடி ரெனமொழிந்தான். 86

மொழிந்தசேய் முகத்தைநோக்கிச் செவிலியு முன்பின்காணுச்
செழுந்திரு வனையாளெங்கட் செய்தியை நம்பிக் கூட
வெழுந்தரு ளுவளோவென்று மேந்தலே நின்றாய்கண்ட
செழுங்கதிர் நிதியினுழித் திருக்கரத் தருள்விரென்றாள். 87

என்றவள் கூறவாழி யீந்துநல் ருத்ரன்சொல்வான்
சென்றுநற் றிரைசூழ்பழத் திரவலர் ராமன்செல்வி
யின்றுதேன் னுப்பனூரி லிருப்பளென் னன்னையென்ன
நன்றுநன் றென்னப்போனார் நாரிய ராப்பனூரில். 88

ஊரினி லேகியந்த வொண்ணுதற் றன்னைக்கண்டு
காரிய முள்ளவெல்லாங் கயல்மணிக் கெடுத்துச்சொல்ல
நாரியர் சிவிகைநூழ நற்றஞ்சை நகரம்புக்கி
வீரிய மைந்தன்றன்னை மெய்முகந் தன்னைகூறும். 89

கூறின தானைப்போரிற் குகன்றனை யோனும்லோக
மாரண மின்றிக்கண்போல் வயிரவி காத்தநல்லால்
வேறிவண் சார்பேதென்று மெல்லிய லுருகுங்காலைக்
காரணச் சிறுவன்மாதர் கயல்மணி மலர்த்தாள்போற்றும். 90

போற்றுமும் மாதர்தம்மைப் புகழ்ந்தவ ளணைத்துப்பூவிற்
வீற்றிருப் பவனைப்போல மேதினி யெங்குங்காக்கும்
பார்த்திபர் வணங்கநல்ல பாலனைப் பெறுவிரேன்றே
கார்த்திகை மைந்தன்மாதுங் களிப்புட னரனுட்புக்காள். 91

புக்குமேழ் பரியோன்மைந்தன் புகழ்ந்தரன் மைந்தன்சேயை
நற்குண மநுகாநீவிர் நம்மிராட் சியத்திலுள்ள
மிக்கநற் பதிகேண்மென்ன வேந்தனும் விரும்பிக்கூற
முக்குண ரறிந்தருத்ரன் மொழிந்தனன் சிறுவையூரே. 92

ஊரது சிறுவைகேட்க உதயவன் குலமன்னன்பாய்ச்
சீரதி மறையோர்வாழ்ந்துஞ் சிறுவைநன் னகரிதன்னில்
தேரகழ்க் கோயில்செய்து திருச்சிவ ருத்ரர்மூன்று
நசரிய ரன்னையோடும் நல்லநாட் கூட்டிச் சென்றார். 93



படம் 6. சிவருத்ரரின் மகுடாபிஷேகம்

சென்றவக் கணத்திலாங்கே சீருற மகுடஞ்சூட்டித்
துன்றுல கோர்கொண்டாடத் திருவுலாப் பவனிசெய்தான்
மன்றமும் மனையார்தாயார் மாநில மக்கள்போற்ற
நன்றுறு செங்கோலோச்சி நற்சிவ ருத்ரன்வாழ்ந்தான். 94

தானவ னுனநள்ளிச் சம்புவின் குலத்துமன்னன்
பானுவின் குலத்தோர்க்கெல்லாம் பார்த்திப னீரேயென்னத்
தானெரு வாழிகூறித் தஞ்சைமா நகரிபுக்கான்
வானவர் நாடும்ருத்ர மகிபனை வழுத்தலுற்றார். 95

உற்றமா புலவரெல்லா முருத்திரர் செங்கோன் மெச்சி
மத்தகக் களிற்றேனென்று மாலைபா மடல்கள்பாட
வத்திரஞ் சுவர்ணமாதி வழங்கிட ருத்ரன்றன்னை
உத்தம ரிவரேயென்று வழுத்தின ருலகிலுள்ளோர். 96

உலகுள்ள பூமிபாலர் சிவருத்ரர் முன்னிலேகி
யிலகுமுங் குலம்யாதென்றே யிறைவனே யருளுமென்ன
நலமுட னிமையோரென்ன நவின்றவன் வில்லிமைந்தன்
அலகைவெம் படையுயர்த்த அண்ணறன் பாரிகங்கை. 97

கங்கையின் மக்கள் மூவர் கணபதி முருகனுக்ரன்
நங்குலம் புயந்துவில்லி குமரன்யான் நலமென்கங்கை
எங்கணு முசாவுமென்ன யிசைந்த நற்பூமிபாலர்
அங்கசன் புதல்விகாத லணிகொளு மதியையீந்தார். 98

ஈந்தநற் காதலானை யிசைந்தலக் கனந்தில்வேட்டுக்
காந்தனும் ரதியுமென்னக் கலந்தவர் வாழும்நாளில்
சேந்தனுக் கொப்பாயிரண்டு சிறுவரை யீன்றபின்பு
வாய்ந்தநற் சசிக்கீடாக மதியொரு கன்னியீன்றாள். 99

ஈன்றநற் சிறுவர் பேரு மிராவணன் லவனென்றேந்தி
ஈன்றநற் கன்னியாட்கு யிந்திரை யென்றேசாற்றி
ஈன்றநற் புதல்வர்தம்மை யின்புற வழுத்தும்நாளில்
ஈன்றநற் புதல்வரோடு கண்டிகை யினிதுகொஞ்சும். 100

இனிதுகண் டிகையாள்கொஞ்ச வின்புற மக்கட்பேறு
தனில்மிக வாசைநோற்ற தந்தையா ளுமையாளோடு
முனிவறு நோன்பு கூட்ட முன்னவன் முன்புசென்று
கனிவுடன் வேண்டக்காந்தன் தத்துவம் பகர்ந்து கொஞ்சி. 101

கொஞ்சியே மயிலிலேறுங் குகனடி பணிந்துமாதர்
மிஞ்சிய நோன்புசெய்ய வேள்சுதர் வரங்களீயக்
கஞ்சமில் லணங்குக்கொப்பாய் மாதர்கள் கருணைகூற
வெஞ்சினங் கவிநேடொத்த வீரரைப் பெறுவதானர். 102

தானவர்க் கதிகசாமி தனையள்சேய் தருமகூத்தன்
வானவர் மகளிர்க்கொப்பா முமைமகன் தருமனென்னுந்
தேனுரை நள்ளிதத்தைச் சிறுவனைக் கலுழனென்றும்
மாநிலம் பிறந்தபின்பேர் வைத்தன ளரன்சேய்மைந்தன். 103

மைந்தரை யீன்றபின்னு மாதர்கள் மறுசூல்தன்னிற்
சந்திர னுதயம்போலுந் தாமரைக் கன்னிபோலு
மைந்தருக் கிழத்திபோலு மீன்றமும் மகவுக்கன்பாய்
மந்திரை யெனவேநாமம் வழுத்தின னுமைசுதைக்கே. — 104

சுதைதிரு தத்தையீன்ற செல்வியைச் சுதையென்றேதிக்
கதிதரு திருவுக்கொப்பாங் கண்டிகை மகனைக்காந்தி
மதியென நாமங்கூறி வைபவம் நடத்திப்பின்னர்
பதிதனிற் படித்தார்யாவும் பாலர்பத் தாண்டுமுற்றார். 105

உற்றனர் பூமிபால ருருத்திரர் முன்னிலேகி
யித்திசை மகிழவேந்த னியற்குலப் பாலர்க்கெங்கட்
சித்திர மடநல்லாரைத் திருமண முடிக்கவென்று
துத்திய மாகக் கூறித் தோகையர் தம்மைக்கேட்டார். 106

கேட்டநற் பூமிபாலர்க் கிளர்சிவ ருத்ரன்சொல்வான்
நாட்டினி லிவையாரை நாமணஞ் செய்வதல்லாற்
கேட்டவர் குலங்கட்கீயேன் பெண்ணெனக் கிளத்தலோடுந்
தாட்டிகப் பூமிபாலர் தகைந்தவர் சங்கைபேசும். 107

பேசிய பின்னுங்கேளும் பித்தனுர் பெற்றேன்மைந்தே
ஆசையா யாங்களீன்ற வருந்தவப் பாலர்க்குந்தன்
நேசமா மகவையீந்து நுந்தவப் பாலர்க்கெங்கண்
மாசிலாக் கன்னிமாரை மணப்பதே முறைமையென்றார். 108

என்றவ ரவைகள்கூற விராகவன் மருகன்சேயும்
நன்றுநன் றுங்கள்கன்னி நயப்பினு மெமதுமின்கள்
மன்றினி லொருவர்க்கீயே னென்முனோர் வழியிதென்னத்
துன்றினர் நகைத்துநள்ளி யரசர்பா லுரைத்தாரன்றே. 109

அன்றவர் கூறக்கேட்டு மரன்சிவ ருத்ரன்முன்போய்
நன்றுநன் றுவப்பீரென்ன நாதனும் நள்ளிமன்னே
டின்றுமென் குலத்திற்கீடு யிருந்திடி னுரையுமென்ன
அன்றிதை யுழவ நக்கே யரசனு முரைப்பீரென்றான். 110

என்றுமென் நந்தைமூவர் யாவர் தங்குலங்களென்ன
அன்றவர் வதுவைசெய்தா ரச்சுத னயனுமற்றோர்
கன்றவர் குலங்கட்கீயக் காண்கில மெனவேசொல்லக்
குன்றிய பூமிபாலர் குறைவுறப் போனார்தம்மூர். 111

ஊரினில் மறைவல்லாரை யுயர் சிவருத்ரன்கூட்டிப்
பாரியர் நால்வர்வாழப் பகுத்தமைத் திலங்குகோயில்
நேரிடைப் பாகந்தன்னை யன்னைக்குந் தனக்குமாக்கி
நாரியர் குலங்கள்தோற்றி நான்கில்லம் நாட்டல்செய்தான். 112

செய்தவப் பாணர்செல்வி கண்டிகைக் கில்லம்மூடு
உய்தவ மஞ்சநாட்டு யில்லமே யுமையவட்கு
பைதவக் கோளிவேந்தன் பகர்மகள் பளிங்குயில்லம்
மெய்தவத் துழவர்செல்விக் கில்லமே விளங்குஞ்சோழி. 113

விளங்கிய யில்லமாதர் துலங்கிட நல்லோர் துப்பம்
பழம்படு விதியேதென்ன பலகடவு ளுளர்தானேனே
களங்கறு மில்வாழ்தர்மம் கழறுவீ ரென்னருத்ர
னுளங்கவர் பிரமஞான முணர்த்திட மகிழ்ந்து வாழ்ந்தார். 114

வாழ்ந்தரா வணனும்பன்னுள் மனேலயம் விரும்பிவேலை
சூழ்ந்தநற் புவிகள்சுற்றித் துறவுகொண் டரியவுன்வி
வீழ்ந்தநற் தந்தைதாளிற் விடையரு ளெனவேபோற்றி
ஆழ்ந்திடும் ருத்திரன்ற னருள்செய்ய வரிபோற்போனன். 115

வேறு

செய்தநல் ராவணன் தீங்கு நீங்குக
மெய்தவம் புரிகென விமலி கூறலும்
மைதவர் வானச ரீரி வாக்கியம்
உய்தவர்க் குறுதியென் றார்விட் டோடினன். 116

ஓடின னற்பதிக் குலகில் யாத்திரை
நாடினன் றவம்செய் நகங் குகாவனந்
தேடினன் முனிவரைத் தெரிந்து போற்றினன்
வாடிநம் பதிவரு வகையென் நல்கென்றூர். 117

என்றவர் கூறலு மிறைஞ்சி ராவணன்
நன்றவக் கயிலையி னும்பர் சேய்மகன்
மன்றுணை ருத்திரர் மதியை வேட்டலின்
வன்றிற லவனுடன் சிறியன் ரேன்றினேன். 118

தோன்றின லவனுஞ்சொன் னகரி யாசையால்
மான்றகை மணக்கவே வாழ்கின் ருனியான்
ஈன்றிடு பிறப்பொழிந் தென்னை நண்ணவே
தோன்றளக் குருபாதந் தேடி வாய்ந்தனன். 119

வாய்ந்தன னென்னலும் பிருகு மாதவன்
சேர்ந்தநல் லிராவணன் றீமை நீங்கவே
ஆய்ந்தநன் ஓம்நம சிவாயபஞ் சாட்சரம்
சாய்ந்துண ராவணன் செவியுறச் சாற்றினன். 120

நான்மறை யகப்பொருட் பிருகு நாதனே
மான்மழுத் தரித்தகல் லாற்பர சிவமெனத்
தான்மனத் தெண்ணியே சம்பு ராவணன்
தேன்மலர்ச் சோலையிற் றவங்கள் செய்தனன். 121

செய்தநற் றவங்களோ ராண்டில் ராவணன்
மெய்தனைக் காணவும் விமல னெய்தினன்
உய்தன னென்றவ னுவந்து போற்றலும்
நைவினை தீர்த்தலும் நவரித் தாகினன். 122

வேறு

ஆகியோர் வேள்விசெய்து அறிஞரை ருத்ரர்கூட்டிப்
பூகமாய் மனைவிமக்க ளிருபுற மெதிரிருத்திப்
பாகமா யில்லறத்தின் பதிசதி பக்திகூறி
மாகனக் குலமோன்ருக்க மக்களுக் குபதேசித்தார். 123

தார்பெறுந் தருமகூடத்தன் தரும சாஸ் திரமுமன்று
பாரினில் பலர்பழிப்பர் பகர்வது தகாததென்ன
நாரியர் வழியேநன்று நாயகன் குலத்தை நோக்கே
லாரிடர் நதிகுலங்க ளற்பமா மவற்றின் மூலம். 124

மூலமாம் ப்ரமசிருட்டி முதலொரு வாண்பெண்ணேதான்
மாலுறு காதல்நோக்கின் மாதர்சோ தரியுமல்லர்
ஞாலநீர்த் தாவரம்பல் தன்மைவே றென்னருத்ரன்
கோலமாய்க் கூறத்தர்ம கூத்தனிந் திரையை வேட்டான். 125



படம் 7. சிவருத்ர குல உபதேசத்தில் தருமகூடத்தனின் கேள்வி.

திரைபுன லுலகிற்காந்தி மதியென்னுந் திருவொப்பாளைத்
தருமனும் மணந்தான்வீரத் தடம்புயர் கலுமன்மந்திரைத்
திருமண முடித்தான்செல்வ லவன்சுதை செல்விதன்னை
வரிசையாய் மணவிழாக்கள் வழங்கிட மகிழ்ந்துவேட்டார். 126

வேட்டாநற் சிறுவரோடு விபர்தர்பூ சுரர்கள்சூழத்
தோட்டர வணிந்தசோதிச் சுதன்மகன் தும்பியேறிப்
பாட்டிசை வாணர்கூறப் பலவன்னக் கவிகையோங்க
நாட்டியம் மாதராட நரபதி கோவில்புக்கார். 127

புக்கலும் நள்ளிவேந்தன் புகழ்மண மக்கள் தம்மை
மிக்கவெங் களிற்றிலேற்றி வெண்மதிக் கவிகையோங்க
நற்கவி வாணர் வாழ்த்தத் தாதகி யவர்க்குநாற்றித்
திக்கெலாம் புகழத்தஞ்சைத் தெருமகிழ்ப் பவனிவந்தார். 128

வந்தநற் புலவரோடுஞ் சிவருத்ரர் தனக்குமன்பாய்க்
கந்தம்நல் மதுரங்கைப்பும் புளிப்பொடு துவர்த்தல்கார்த்தல்
அந்தமா மெரித்தலேரடு மறுசுவை விருந்துநல்கி
முந்தவந் தனுப்பிவைத்தார் முறைப்படி சிறுவையூர்க்கே. 129

ஊர்க்குவந் தந்தணர்க்கு முருத்திரர் நிலந்துசைம்பொன்
பார்ச்குயர் மேகமென்னப் பலருக்குங் கேட்டதீந்து
தீர்க்கமாந் தொழில்களெல்லா மக்களுக் குபதேசித்தான்
போர்க்குயர் மக்கள்வீரக் குமரனே போற்பேரானுர். 130

ஆனதோர் பாலர்க்கீந்த வணங்கினை வேட்டதுன்னி
மானிலத் துழவர் மீண்டும் வந்துமன் கோவிலெய்திப்
பானுவின் குலத்துநள்ளி வேந்தனைப் பணிந்துநின்று
மானிட ரெவருமிந்த மணஞ்செய்வார் கொல்லோவென்றுர். 181

என்றுவவ் வுழவர்கூற யிரவிதன் குலத்துவேந்தன்
நன்றல நுங்கள்கூற்றே நானிலத் தவர்கட்கெல்லாம்
பண்டிதம் விஞ்சைஞானம் படைத்தொழி லெவருங்கற்றுற்
குன்றிய மொழிசொல்லாமற் கும்பிடேன் றுரைக்கும்வேதம். 132

வேதநூல் வழுவாவேந்தன் விதியிதென் றிவ்வாறுேத
நாதனே சரணமென்று நமக்கரித் தவரூர்போனுர்
போதநற் றனுர்வேதம்போர் வாட்டொழில் புரிந்துநல்கும்
தீதிலாச் சிவருத்ரன்றுன் சிறுகுடி நகரில்வாழ்ந்தான். 133

வாழ்ந்திடும் ஈழநாட்டு மகிபனும் ராமநாதன்
சூழ்ந்திடு மிரவிற்காணுக் கயல்மணி துணைவர்க்கேங்கி
ஆழ்ந்திடுங் கவலையால்விண் ணடைந்தபின் ராச்சியத்தைத்
தாழ்ந்திடா வண்ணங்காத்த தனையனைக் கூறுவேமே. 134

கூறுதற் கரியசெல்வக் குரிசிலாங் காளகேதன்
பேறுறப் பின்னராளப் பிள்ளையில் லாததெண்ணி
ஈறுறத் தருமமென்னுங் கியற்றியே தானமும்புள்
ளேறுநா ரணனையெண்ணி நரபதி தவங்கள்செய்தான். 135

நரபதி தவங்கள்செய்ய நாரணன் சிந்தைகூர்ந்து
வரமுயர் மகவைவேண்டின் வண்டொலி கூந்தலெல்லாப்
பிரமணி யுருவாயோர்பெண் பெறுதியென் றரிதான் சொல்ல
நரபதி சிந்தை கூர்ந்தா னளித்தனன் மலரோனுரி. 136

நாரிய ரழகெல்லாஞ்சேர் கன்னியை நாதனீன்று
பாரினிற் குபேரன்போலப் பழுதற வாழும்நாளில்
வேரியந் தோளினனு மித்திர சேனையென்று
நாரியள் பிறந்தபின்பு நாமமே நவின்றனன்றுய். 137

நன்றுறு பேதையென்னும் பருவமும் நாரிக்கேகி
மன்றலங் குழலினளும் பெதும்பைநற் பருவமாகத்
துன்றிளந் தோழிமாருட் சுகிக்கும்நா ளவளுக்கேற்ற
மன்றனை யவ்வேதோர்ந்து மகிழ்மண முடிக்கவென்றே. 138

வென்றிகொள் மாலைமார்பன் மேதினி யரசர்க்கெல்லாம்
நன்றுசோ பனப்பொன்னோலை சுயம்வர மென்னநல்க
மன்றுநா டலங்கரித்தான் மன்னர்க ளிழும்வந்தார்
தென்றலார் தஞ்சைமன்னும் சிவருத்ரன் றனும்வந்தான். 139

வந்தநல் வேந்தர்க்கெல்லா மகிழ்வொடு காளகேதன்
அந்தமா முவ்றினல்கி யமுதளித் தமரச்செய்தா
னிந்திரன் மனைவிக் கொப்பச் சிவிகையில் மித்ரசேனை
வந்தனள் மன்னர்சூழ்ந்த சுயம்வரம் வஞ்சிமாதோ. 140

மாதர்க ளருகேநின்று மன்னர்தம் பெயரூர் கூறத்
தீதிலா மடவாளொன்றுஞ் செவிக்கொளா தெங்கும்பார்த்துச்
சீதரன் மருகனீன்ற சிவருத்ரன் தன்னைநோக்கிக்
காதலா லருகுசெல்லக் கண்டனன் ரதிபோற்காமன். 141

காமனே ரனையருபன் ருத்ரனைக் கருத்திலுன்னிப்
பூமகட் கிணையாமித்ர சேனைதோ ரணப்பூமாலை
யாமெனும் ருத்ரன்றேள்மே லளித்திட வரசரெல்லாம்
தாமுறை வாள்களோங்கிச் சமர்த்தொழில் தொடங்கலுற்ருர். 142

உற்றபோர்க் களமதேசி யுறுதியாய்ப் பூசல்செய்ய
ருந்திர குலத்துருத்ர னெடியிற்றேர் துரகம்சாய
எற்றலு மாரன்சோழ னிடைமறித் துருத்திரர்க்கே
மித்திர சேனைதன்னை மிகமணஞ் செய்துபோனர். 143



படம் 8. மித்திரசேனையில் சுயவரமண்டபம்

போனபின் சிவருத்ரன்ருன் பொன்னகர்க் கிறைவனீந்த
வானனர் மவுலிவேந்தை வணங்கியே மகிழ்ந்துசொல்வான்
யானுமென் பதிக்கணேகு வையநீ ரருடாவென்ன
மானிலம் புகழுமீழ மன்னவன் மதித்துக் கூறும். 144

கூறிய மருகன்றன்னைக் குரிசிலு மகிழ்ந்துநோக்கி
சீறிய வரியோடொத்தச் செல்வநீ குரைத்ததேனே
வீறுயர் கயந்தின்வைகி வெண்மணிக் கவிகையோங்கக்
கூறுமிவ் வீழநாட்டுக் குரிசிலாய் வாழ்விரென்ருன். 145

என்றுமன் மொழிந்தமாற்ற மிசைவுரு வினையோர்கன்பாய்
நன்றுநற் கரிதேர்மாபொன் நவ்விசீர் சுரபிநல்கி
துன்றவே கொடுத்துமித்ர சேனையுந் தானுமாக
வன்றன்னட் படகிலேறி யருட்பெறுஞ் சிறுவைசென்றான். 146

அருட்பெறு காளகேத னதிவர வேற்பதோடு
விரைவுடன் குனைபானீங்கி விளங்கும்நற் சிறுவைசென்றான்
திருவுருக் கமலமென்ன மித்திர சேனையோடு
யிருநிதி மருகன்சூழ யிராசமா ளிகைமுன்நின்றான், 147

நின்றதன் முன்னேன்தன்னைக் கயல்மணி நேரில்நோக்கி
சென்றவள் பிரலாபித்துத் திருவிழி பொழியக்கண்டு
மன்றன துளம்நெக்காகி வாய்விட்டுத் தழுவியேநின்
கன்றையெம் மகடான்வேட்ட காட்சிநம் றவப்பேறென்றான். 148

அருட்பெறு மாமனிழ மகன்றபின் சிவருத்ரன்றான்
திருவள மித்ரசேனை சேர்ந்துற வாழும்நாளில்
மருவிய மற்றைநால்வர் மகிழ்ந்திடச் சூல்களுற்று
யிருநிதி யனையசரா னேரேழிற் பெண்ணுமீன்றாள். 149

ஈன்றநன் மக்கட்கன்பா யிசைவுரு நாமஞ்சாற்றக்
தூண்டிப் புயத்துவில்லி காளகே தனனுக்கன்பு
பூண்டநல் லழைப்பினாலே போக்கிடச் சிறுவையூர்ந்தான்
ஆண்டகை மருகன்போற்ற வவன்கரம் தவழ்ந்தார்பாலர். 150

தவமுயர் காளகேதன் றன்மகள் மக்கட்கன்பாய்ப்
புவனமே மதிக்குமாறு புரந்தர சிங்கனென்றும்
கவனவெம் பரியின்மன்னன் காரணச் சாமியென்றும்
பவமறு மதியேயென்றும் பகர்ந்தவ னிழுஞ்சேர்ந்தான். 151

சேர்ந்தபின் சிவருத்ரன்றன் தேவிமா ரைவருக்கும்
வாய்ந்திடுங் குலத்துமூடு மஞ்சள்முன் வணிகஞ்சோதி
தோய்ந்திடும் பளிங்கில்வாசத் தோல்ஜமு படைகள்சோழி
சூழ்ந்திடும் மித்திரசேனை தோரணத்தில்லந் சொன்றான். 152

சொன்னவை தவறாவேந்தன் துரந்தரன் காளகேதன்
பின்னரும் படகிலேறிப் பேர்பெறுஞ் சிறுவையுற்றா
னன்னவ ரருகேருத்ர னமைவுடன் பணிந்துநிற்க
நந்நகர் புரக்கவோராண் மகவேனக் கருள்வீரென்றான். 153

என்றம்மான் மொழிந்த மாற்ற மிசைசிவ ருத்ரன்கோயிற்
சென்றுதா னீன்ற நல்லீர் சிறுவரைக் கொணர்ந்துவிட்டான்
புன்றொளி லில்லாவேந்தன் புரந்தர சிங்கன்றன்னை
அன்றுநீ ரேரடேற்றிழுத் தரசென மவுலி வைத்தான். 154



படம் 9. புரந்தரசிங்கனின் சுவிகாரம்

வைத்தபின் காளகேதன் மாதவன் தன்னைநோக்கி
நற்றவ முனிவோர்வாழும் நைமிசா வனத்திற்சேர்ந்து
புற்றரை சருகுமூலம் புனல்வளி யருந்திப்பின்னும்
நற்றவ முனிவனாகிநாரணன் பதமடைந்தான். 155

அடைந்தனன் காளகேத னருணிலை மன்னர்மெய்க்கப்
புடைந்தசொற் றவறாநீதிப் புரந்தர சிங்கனென்பா
னிடைந்தவர்க் கருள்கூர்ந்தெங்கு மிராசகோ ளரியாமென்னத்
திடந்தவெண் கவிகையொன்றாற் செலுத்தினன் புரக்கவிழும். 156

புரந்தர சிங்கன் காந்தி மதிமகள் மணந்தான்வல்லக்
கரமுடைக் காரணன்ருன் கலைசுதைப் புதல்விவேட்டான்
வரமுயர் மித்ரசேனை வளர்செல்வி மதியம்மாளைத்
திறம்பெறு லவனிரண்டாந் தாரமாய் மணந்துகொண்டான். 157

கொண்டபின் குந்ரரோர்நாள் கோமர் தம்மைக்கூட்டி
விண்டன ரன்புமார்க்கச் செம்பொருட் சிந்தாந்தங்கள்
பெண்டிரா மக்கள் கேட்ட வாழ்க்கையின் விதிகளோதி
யண்டர்கள் போற்றுங்காசி யடைகுவனென்று ளாழ்ந்தான். 158

வாழ்கையிற் றருமகூத்தன் றந்தைதாய் மலர்நாள் போற்றி
யேழ்புவி புகழுஞ்சேர நரபர கேயிலேகிச்
சூழ்மணிப் புயயான்கற்ற தொழிலன்னுர் மரபுக்கோதித்
தாழுவில்லா திருக்கநீவிர் தருவிடை தருவீரென்ருன். 159

என்றுதன் றனையன்கூற யின்பமா யவனைநோக்கி
நன்றுநன் றெனவே ருத்ரர் நாரியர் விடைகள்கூறச்
சென்றுடன் தருமன்யானும் வழுதியூர் செல்வேனென்ன
அன்றவன் தனக்குமன்ன லன்புட னருள்கொடுத்தான். 160

அருள்பெறு தருமகூத்தன் தருமனு மிருவராங்கே
பொருளெனத் தம்மையீன்ற புண்ணியர் தாய்தாள்போற்றிக்
குருபதத் தருமகூத்தன் கொங்கண நாடுபுக்கான்
றிருநிறை தருமனென்பான் செழியநற் கொற்கைபுக்கான். 161

புக்கலும் வழுதிவேந்தன் புனிதநீ யாரோவென்னத்
திக்கெலாம் புகழுந்தஞ்சைச் சிறுகுடி யூரன்யானும்
முக்கண னருள்சேய்மைந்தன் குலவழித் தருமனென்பேர்
மிக்கவில் வாளின்விஞ்சை நின்மகர்க் குரைப்பேனென்ருன். 162

என்றசொற் றருமன்கூற யிந்துநல் வழிசேர்மாரன்
நன்றுநன் றுருத்ரர்சேயே நல்வழி வருகவென்றே
அன்றவன் தடக்கைபற்றி யாசனத் திருத்தியன்பாய்
அன்றிலார் பொழில்வான்மேவு மாப்பனூ ரவனுக்கீந்தான். 163

சந்தபின் வழுதிமன்ன னிந்துநல் வழியில்வந்தே
சார்ந்தநாற் றெட்டுப்பாலர் தம்மன விருப்பங்கண்டு
சேந்தனுக் கொப்பதாக வாட்டொழில் பயிற்றுச்சென்று
வாய்ந்தசீர் மதுரைதன்னில் வழுதிமுன் கொணர்ந்துவிட்டான். 164

விட்டபின் வழுதிவேந்தன் வெண்களி றதனிலேற்றிப்
பட்டுநற் கவிகையோடும் பன்மணிக் கவிகை சூழச்
சிட்டர்கள் போற்றக்கூடற் றெருவினிற் பவனிசெய்து
பட்டகசாலை யீந்தும் படைக்குரு வாக்கிவாழ்ந்தான். 165

வாழ்தரும் தருமகூத்தன் வஞ்சிய னூரிற்சென்று
சூழ்தரு நகரிலேகக் கொற்றவ னியாரென்ன
யேழ்புவிக் கரசேயானே யிந்திர லோகம்போல
வாழ்புவி யாவதஞ்சை மகிபர்சொற் குருநானென்றான். 166

என்றபின் கொல்லிவெற்ப னிறையவர் வழியில்வந்தே
ஒன்றிய சிறுவை மன்னனுருத்திரா மதலைநீயோ
யின்றுநீர் சொல்கவென்ன வெதிரிலாத் தருமகூத்தன்
அன்றுமுக் கவிகைவேந்தோ டடல்செய்தோன் மைந்தனென்றான். 167

என்றலுந் தருமகூத்த னெழில்மணிக் கரங்கள்பற்றித்
துன்றுநல் வஞ்சிவேந்த னுசனத் தமர்த்தியென்பா
யின்றுநங் குலத்தோர்க்கெல்லா மிசைந்த நற்குருவுமாகி
யென்றும்நீர் வாழ்கவென்று மீந்தனன் கொழுமமூரே. 168

கொழும மூரோகித்தர்ம கூத்தன்மா விகைகள்செய்து
முழுநவ நிதியம்பூமி முறையுடன் மறையோர்க்கீந்து
முவிடை யோனுக்கன்பாய் மலர்கொடு பூசைசெய்து
பழுதறும் திருவாசானுய்ப் பார்த்திப னுகவாழ்ந்தான். 169

தானவ னனசேரன் தன்குலப் பாலர்க்கெல்லாம்
வானவ ரீசன்மைந்தன் மதலைசேய் பயிற்றல்மெச்சி
யானைகள் பிளிறும்கொல்லி வெற்பின னகத்தேயன்பாய்ச்
சேனையின் தலைவனென்று தேசிகன் தன்னை வைத்தான். 170

வைத்தபின் கலுழன்தானு மனமகிழ்ந் தொழிலால்மின்னி
மெய்த்தவம் புரியுஞ்சோழ வேந்தர்நன் நகரிலேகி
உத்தமர் போற்றும்ருத்ர ருதவிய தொழிற்செருக்கால்
மெத்தவெள் ளானையுள்ள வீரமண் டலத்திற்சேர்ந்தான். 171

வீரமண் டலத்தில்மிக்காம் ராஜகெம் பீரமென்னும்
பாரரு ணகரிலேகிப் பார்த்திபன் கோயில்செல்ல
வீரனென் றரசர் கோமான் வியந்துநீ யாரோவென்னச்
சூரனுக் கதிகத்தீரத் தொழிலுடைக் கலுழனென்றான். 172

என்றசொற் கலுழன்கூற இராஜகெம் பீரவூரின்
மன்றனின் குலந்தான்யாது வழுத்தென வழுத்திரத்னப்
பொன்றிரு வெயினின்றாடும் புனைமுடி யரசைப்பார்த்துச்
சென்றெரி தக்கன்வேள்வி சிதைத்தவன் மைந்தன் கோத்ரன். 173

மைந்தனென் றுரைத்தமாற்றம் வழுத்தலும் வீரகோமான்
முந்தவ னருகில்வந்து படைத்தொழில் மொழியக்கேட்டுச்
சிந்தைதான் மகிழ்ந்துசெல்வ மாங்குடி யெயின்னூரு
முந்தவர்க் கருளிச்சேனை முதல்வனென் றுயரச்செய்தான். 174

செய்தவத் தரசநின்ற சிறுவர்க்குங் கலுழவீரன்
மெய்தவத் தனுவின்வேதம் படைத்தொழிற் பயிற்றிநீர்சூழ்
வையகம் புகழும்வீரவ் மரபின்மன் னவர்கள்போற்றத்
தெய்வசித் துடையோன்பாலன் தேசிக னுகவாழ்ந்தான். 175

வாழ்வுயர் வீரநாட்டில் மாங்குடி யதனில்வீர
வேளெனுங் கலுழனேகி விருத்தியாய் வாழ்ந்துவந்தான்
கோளரி ராசதீபன் கொடுத்தநல் விடபனூரிற்
காளமா முகிலுக்கொப்பாங் காரண சாமிவாழ்ந்தான். 176

சாமியாம் ருத்ரர் பின்னுந் தனையர்கள் மன்னர்கூட்டி
நாமிகுஞ் சிறுவைதன்னை லவனுக்கு மகுடஞ்சூட்டி
நேமிடா நள்ளிமன்றஞ் சேயர்வா ழூர்கட்கேகி
ஓமெனு மந்திரந்தா னுரைத்தருட் காசிசென்றான். 177

வாரணக் காசிபுக்கி வரநதி தன்னில்மூழ்கிக்
காரண விசுவநாதன் கழலிணைப் பணிந்துபூசை
நாரண னயனுக்கொப்பாய் நடத்தியே தானம்நல்கி
மாரண நிலையுங்காக்கும் மத்திரஞ் செபமுஞ்செய்தான். 178



படம் 10. சிவருத்ரரின் தீர்த்த யாத்திரை.

செய்தபின் பிரமஞானம் சேரவே பிரயாகைக்குப்
போய்நவி ருநந்ரன்சென்றே புனிதநீர் வணங்கிமுன்ன
மெய்திய தனுவும்வாளு மிருங்கரை யிழந்தேறிற்க
மெய்தவப் பிரியமாதா விமலன் ருள்சேர்தியென்ருள். 179

என்றிசை முனிவர்தேவ ரிராக்கதர் மனிதர்மன்னர்
குன்றன வினையர்பாவக் குரவையாழ் பவர்மெய்யினர்
மனறருட் புனலிற்ருேய வானுல களிக்குந்தாயே
யின்றேனை யானேகாண யிரண்டறக் கலந்தியென்ருர். 180

என்றவர் பலகாலோதிப் பிரயாகைப் படிந்துவந்து
ஒன்றிய கடாகாயத்தின் உபாதிபோய் மகாகாயத்தில்
நின்றநேர் சொருபமானுர் நிதிக்கயல் மணிமாவாலை
நன்றியை வியந்து காசி நதிக்கரை தன்னிற்சார்ந்தாள். 181

சார்ந்தவ ளாற்றின்மூழ்கித் தவமிகு மறையோர்க்கெல்லாம்
வாய்ந்தமா மணிபொன்னுடை வழங்கியே தானம்நல்கிக்
காந்தனை யெரித்தநாதன் கழலிணைக் கருத்தில்வைத்தே
போந்திடும் பிரயாகைப்பூம் புனல்குளித் தைக்யமானுள். 182

ஆனநாய் மகனும்பூத வுடலீத்த செய்திகேட்டு
மான்விழி யைந்துமாதர் மக்களுங் கிரியைசெய்து
மானிலச் சீர்பேர்பெற்று வகைவழி யில்லம்பார்த்து
வானுயர் பிறைபோற்கூடி மணந்தெங்கு மிகவாழ்ந்தாரே. 183

(முற்றுப்பெற்றது).

வாழி

வாழ்கவீச னுமை வீர பத்திரர்
வாழ்கமா சிவருத்ரர் கயல்மணி
வாழ்கவைந் தில்லமாதர் கொடிவழி
வாழ்கநூல் சொற்றேர் கற்றோரும் வாழ்கவே.

சுபம்.

# சிவருத்ர புராணம்.

(வசனம்)

ஆதி நூல்களாகிய ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் இயற்றியவரான வியாஸ மா முனிவர் பதினெண் புராணங்களையும், பிரம சூத்திரங்களையும், மனு தர்ம சாஸ்திரத்தையும், மகாபாரதத்தையும் இயற்றுவித்தார். அவர் தமது மாணக்கர்களில் சிரேஷ்டரான சூத மகரிஷிக்கு அவை அனைத்தையும் உபதேசித் தருளினார். அவற்றுள் ஒன்றாகிய நீதி மார்க்கமும் நெறியும் தங்கிய சிவருத்ரர் சரித்திரத்தைக் கூறுவதற்கு, எல்லாம் வல்ல இறைவன் முன்னின்று காத்தருள்வாராக.

## அத்தியாயம் 1. (செய்யுள் 1-20)

## வீரபத்திரர் திருமணமும், சிவருத்ரர் ஜனனமும்.

மாற்றுகளுக் கெல்லாம் மேலான பசும்பொன் மயமாகிய பரலோகத்தில் வீற்றிருந்து, உலகங்கள் அனைத்தையும் காத்து ரட்சிக்கும் இறைவனான சிவபெருமானின் திருப் பாத கமலங்களைப் பணிந்து, சிந்தனை செய்து, கருத்திலுன்னி, இப் பூலோகத்தில் ஜீவ கோடிகள் யாவருடைய நாவுகளிலும் வீற்றிருந்து கடாக்ஷிக்கும் மகாலெக்ஷிமியையும், சரஸ்வதியையும் வாழ்த்தி, சூத மகரிஷி விளம்பியதாவது :—

பல் வளங்களும் நிறைந்த இப் பாரத நாட்டிலே தெய்வ பயமற்று, ஆக்கிரமித்து, அரசாண்டு வந்த இரணியனை அடக்குவதற்காக, ஆதி மாதவனாகிய மகாவிஷ்ணுவானவர் நரசிம்ம மூர்த்தியாக அவதாரம் செய்தார். இரணியன் வதை செய்யப்பட்ட பின்னரும் அந் நரசிம்மம் அமைதியின்றி அதிக்கிரமித்து, ஜீவ கோடிகள் நடுநடுங்க பித்தன்போல் தீங்கிழைத்து வந்தது. அதற்கு அஞ்சிய ஜீவ கோடிகள் தங்களைக் காத்து ரக்ஷிக்கும்படி

தேவ தேவனாகிய பரமசிவனைத் தொழுது விண்ணப்பித்தனர். அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி இறைவன் அபயமளித்தார். தமது மூன்றாவது குமாரனும், முன்னொரு காலத்தில் தக்கன் வேள்வியை அழித்தவருமான வீரபத்திர மூர்த்தியை, இறைவனான பரமசிவனவர் அழைத்து, நரசிம்மத்தின் அட்டகாசத்தை ஒடுக்கி ஜீவர்களின் துயர் களையும்படி ஆஞ்ஞாபிக்கவே, வீரபத்திரர் சரபட்சியின் சக்தியைப் பெற்றார். தமிழ் மறையின் பெரும் பொருளான வீரபத்திரர், சராசரங்கள் நடுங்கும்படி வீர கர்ஜனை செய்து, நரசிம்மத்தின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அதன் சென்னியைக் கொய்து, தூக்கி வானத்தில் எறிந்தார். அது கீழே விழும்போது ஆவேசங் கொண்ட வீரபத்திரர், திருகிய நரசிம்மத்தின் சிரசை மாலை கோர்த்ததுபோல் குரல்வளையின் மூலமாக சங்கநாதம் ஊதி வீரத் தாண்டவம் புரிந்தார்.

வாம பாகத்தில் கௌரியாகிய ஈஸ்வரியை வைத்தருளிய பரமசிவனார் அதைக் கண்டு மகிழ்ந்து, சோமவாரன் என்னும் தேவர் மன்னனும், வெள்ளை யானையையுடையவனுமான தேவேந்திரனை அழைத்து, மகா புஜபலமுடைய வீரபத்திரருக் கேற்ற சகல ரூபலாவண்யங்களும் குண நலங்களும் அமைந்த ஓர் யுவதியைப் பார்த்துத் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார். அப்படியே தேவேந்திரன் பரமசிவனை வணங்கி விடை பெற்றுப்போய், தமது தூதர்களை அழைத்து எண்டிசையும் சென்று சகல குண நலங்களும் அமைந்த பெண் தேடி வரும்படி கட்டளையிட் டனுப்பினர். பெண் தேடிச் சென்ற தூதர்கள் பற்பல தேசங்களில் அலைந்தும் வீரபத்திரருக்கேற்ற சகல லக்ஷணங்களுமுடைய பெண் கண்டு பிடிக்க முடியாததால் மனம் வருந்தினர். கடைசியாக; இயற்கை யன்னை எழில்பெற இலங்கிய, நீலத்திரைக் கடல் சூழ்ந்த, மஞ்சுசூழ் மலைத்தொடர் மருங்கிய ஈழ நாடு என்ற வீரை நாடு போய், கோட்டை கொத்தளங்கள் நிறைந்த,

மதயானைகள் அணி அணியாகக் கட்டியிருக்கும் விரையம் பதி என்னும் தலை நகரை யடைந்தனர். அந் நகரின் அரண்மனை உப்பரிகையின் மீது அந்தி நேரத்திலே, நக்ஷத்திரக் கூட்டத்தின் மத்தியில் பூரணச் சந்திரன் போலும், மாணிக்க விக்கிரகம்போலும், பொலிவுற்று விளங்கிய ஓர் யுவதியைக் கண்டு களிப்பெய்தினர். அவள் இராம ராஜாவின் அருந்தவப் புதல்வியாகிய கயல்மணி தேவியென அறிந்தனர். அவளுடைய அழகைக் கண்டு ரதி தேவியோ அல்லது மகாலெக்ஷிமியோ வென்று அதிசயித்த தூதர்கள், தேவேந்திரனிடம் போய், ஈழ நாட்டை ஆளும் இராம ராஜாவின் அருந் தவப் புதல்வியே வீரபத்திருக் கேற்ற பெண் எனப் பகர்ந்தனர். ஒவ்வொரு தூதனும், அவளுடைய அழகைத் தனித் தனியே வர்ணித்துக் கூறினர்.

அது கேட்ட தேவேந்திரன் பெரு மகிழ்ச்சியுற்று, அக்கணமே தமது ஐராவதம் என்னும் வெள்ளை யானை மீது ஆரோகணித்து, தேவர்கள் புடை சூழ ஈழ மண்டலத்தின் தலைநகராகிய விரை நகருக்கு எழுந்தருளினார். மீன் கொடியை யுடைய இராம ராஜ மன்னர், தேவேந்திரன் வருகையை அறிந்து, தமது சிம்மாசனத்தினின்று இறங்கிச் சென்று, தக்க மரியாதையுடன் அவரை உபசரித்து, தமது வலது பக்கத்தில் சிம்மாசனத்தில் அமர்த்தினர். தேவேந்திரன் மன்னனை மிகவும் புகழ்ந்து வாழ்த்தினர். பின்னர், அவரது அருமைப் புதல்வியைக் கைலாச நாதராகிய பரமசிவனரின் மூன்ருவது புதல்வனும், சுப்பிரமணியருக்குப் பின் உதித்தோனுமாகிய வீரபத்திரருக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். இராம ராஜர் மகிழ்ச்சியுடன் அதற்கிசையவே, புரோகிதரை அழைத்து, சுபதினம் குறிப்பிட்டு, நிச்சய தார்த்தம் நடைபெற்றது. திருமணத்திற்கு வேண்டிய அலங்காரங்களுடன் மாளிகைகளும், பவழக்கால் மண்டபங்களும் நிறுவப்பட்டன. இந்திரலோகம் போல்

அலங்கரிக்கப்பட்ட ஈழ நாட்டரசன் அரண்மனையிலே குறித்த நாளில் திருமண வைபவம் சிறப்பாக நடைபெற்றது. பரத கண்டத்திலுள்ள ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும், தேவர்கள், மூவர்கள், மகரிஷிகள், மறையோர், பெரியோர் ஆகியோரும் முகூர்த்தப் பந்தலில் குழுமி யிருந்தனர். பதினெட்டு வாத்தியங்கள் முழங்க, தேவ துந்துபி கோஷிக்க, வானவர் பூமாரி பொழிய, கைலாச நாதராகிய பரமசிவனும், பார்வதியும் தங்கள் மகனாகிய வீரபத்திரருடன் மணப்பந்தலுக்குள் பிரவேசித்தனர். மண மகனாகிய வீரபத்திரர் ரத்னக்கசிதம் பொருந்திய மணவறையில் வீற்றிருந்து, கயல்மணி தேவிக்கு மங்கல நாண் பூட்டுவித்தார். பின்னர் மண மக்கள் எழுந்து நிற்க, இராம ராஜர் தமது புத்திரியின் வலக் கரத்தைப் பிடித்து, வீரபத்திரரின் கரத்தில் ஒப்படைத்து, ஆசி கூறி தாரை நீர் வார்த்தார். (படம் **1.**)

மங்கையர் மங்கள கீதம் பாடினர். பெரியோர் மன முவந்து ஆசி கூறினர். மணமக்களுக்கு ரத்ன கசிதமான கிரீடம் சூட்டப்பட்டது. சகல வரப்பிரசாதங்களையும் அளித்து விட்டு, தேவர்கள் மூவர்கள் மகரிஷிகள் யாவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

பிரமத்தவனின் அழகிய சிருஷ்டியான ஈழ நாட்டின் அரசரான இராம ராஜரின் புதல்வியுடன் கூட, மான் மழுத்தரித்த பரமசிவன் மைந்தராகிய வீரபத்திரர், பொன்னும் மணிகளும் இழைத்த அழகிய மாளிகையொன்றில், அன்பும் அருளும் உடையவர்களாய், தேனும் பாலும் போலவும், மலரும் மணமும் போலவும், சாஸ்திர ரீதியாக மிக்க ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர். இராஜ்ய விவகாரங்களிலும் மக்கள் மகிழ்வுற, வீரபத்திரர் பேருதவி புரிந்து வந்தார். இவ்வாறு தம்பதிகள் ஈருடலும் ஓருயிருமாகவிருந்து இல்லறம் நடத்தி வருங்காலையில் கயல்மணிதேவி கருத்தரித்து, உரிய காலத்தில் சூரி

யனை யொத்த சோபையுடன் கூடிய மன்மத ரூபமுள்ள ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். இராம ராஜர் மன மகிழ்ந்து பொன்னும் மணியும் தானம் செய்தார். குழந்தை பிறந்தது முதல், அரண்மனையில் விழாக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. மறையோரும் பெரி யோரும் குழந்தையை வாழ்த்தினர். பதினோராம் நாள் சிறுவனுக்கு நாமகரண வைபவம் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஆணிப் பொன் தொட்டிலிலே, பட்டுப் பீதாம்பரங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட மெத்தையின் மீது, குழந்தை யைப் படுக்கவைத்து, மாதர்கள் மங்கள கீதம் பாட, பெரி யோர்கள் நல்லாசி கூற, வீரபத்திரர் தமது குழந்தைக்குச் **சிவநந்ரர்** என நாமம் சூட்டினார். குழந்தை செல்வமும் சிறப்புமாக, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து வந்தது.

## அந்தியாயம் 2. (செய்யுள் 21—25)

## வீரபத்திரரின் துறவறமும், கச்சி யாத்திரையும்.

ஓராண்டு சென்றது. ஒரு நாள் அதிகாலையில் வெளி யே சென்ற வீரபத்திரர், இரவில் நெடு நேரம்வரை திரும்பி வரவில்லை. கயல்மணிதேவியார் கணவனைக் காணுமல் கலக்கமுற்றாள். சேடியர் எவ்வளவோ ஆறுதல் சொல் லியும், அறிவிலும் திருவிலும் சிறந்த கயல்மணிதேவி, ஒவ்வொருவருக்கும் தக்க பதில் சொல்லி அவரவர்கள் ஜாகைக்கு அனுப்பிவிட்டாள். ஆயினும், அவள் அன்று அதிகாலையில் கண்ட கனவின் காரணமாக, மனம் நிம்மதி யடையவில்லை. இரவு நெடு நேரமாகியும், கண் துயிலாது, கணவன் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தாள். அரண்மனை யெங்கும் நிசப்தமாகிவிட்டது. நடுச்சாமத் தில் வீரபத்திரர் அரண்மனை திரும்பினார். வில்லும்,

வேலும் கையில் ஏந்தியவராய், துறவுக் கோலத்துடன் கயல்மணிதேவியார் இருந்த அறைக்குள் பிரவேசித்தார். தொட்டிலினின்று சிறுவனைத் தூக்கி, மார்போடணைத்து, "சிவருத்ரா! நீ அகஸ்தியரை நிகர்த்த கல்வியும், முருகனை யொத்த பராக்கிரமும் உடையவனாய் ஓர் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிப்பாய்" என்று மனமுவந்து ஆசீர்வதித்தார். பின்னர், குழந்தையை மனைவியிடம் கொடுத்து அவளை நோக்கி, 'கயல்மணி! ஆண்டவன் ஆஞ்ஞைப்படி யான் கயிலாயம் செல்கிறேன்" என்று கூறி வெளிக் கிளம்பினார். (படம் 2.)

எதிர்பாராத இச் சம்பவம் நுண்மதியுடைய கயல் மணிதேவியைத் திடுக்கிடச் செய்தது. சிறிது நேரம் செய்வது இன்னதென்று தெரியாமல் கலங்கி நின்றாள். பின்னர் மனத் தெளிவுற்று, விதியை மதியால் வெல்லத் தீர்மானித்தாள். மனத்திடம் கொண்டாள். கையில் குழந்தையுடன் யாதொரு சந்தடியும் செய்யாமலும், காவலாளிகளின் கண்ணில் படாமலும் அரண்மனையை விட்டு வெளியேறி, வீதியை நோக்கினாள்.

வெகு தூரத்தில் சென்று கொண்டிருந்த வீரபத்திரரின் உருவம், நிலவொளியில் நன்கு புலப்பட்டது. அதை நோக்கி அவள் துரிதமாய் நடந்து சென்றாள். பஞ்சிலும் மெல்லிய அவளது பாதங்கள் கல்லில் நடக்கையில் காயமுற்றன. அவளது மெல்லிய ஆடைகள் அவள் வேகத்தைத் தடைப்படுத்தின. ஆயினும், மன உறுதியுடன் கயல்மணிதேவி, கடுவேகத்துடன் நாதனைப் பின் தொடர்ந்து ஓடினாள். கணவனாரைச் சமீபித்ததும், "நாதா! நாதா!" என அழைத்தாள். ஆனாலும், கயல்மணி தேவியின் மனத்திடத்தைக் கண்டு வியப்பும் ஆச்சர்யமுமுற்ற வீரபத்திரர், திரும்பிப் பாராமலே நடந்து சென்றார். அவள் அரண்மனை திரும்புவதையே வீரபத்திரர் விரும்பினார். ஆயினும், விடாமுயற்சியுடன் அவள் பின் தொடர

வதை வீரபத்திரர் கண்டு, கடைசியாக கடற்கரையில் போய் நின்றார். கணவனைத் தொடர்ந்து சென்ற கயல்மணி நாதன் அருகில் சென்று, பாதத்தில் விழ்ந்து மூர்ச்சை யுற்றாள்.

வீரபத்திரர் அவளுக்குக் கண் தெளிவித்து அவளைப் பார்த்து, "கயல்மணி! நீ அரண்மனையைவிட்டு என்னைப் பின்தொடர்ந்து வந்தது சரியல்ல; ஈசுவரன் கட்டளையை நான் நிறைவேற்றுவதில், நீ குறுக்கிடுவதால் பயனில்லை; ஆகவே, நீ குழந்தையுடன் மீண்டும் அரண்மனை செல்வாய்" என்று கூறினார். அது கேட்ட கயல்மணிதேவி, "நாதா, தாங்கள் சொல்வது என்ன நியாயம்? இது ஜீவ காருண்ய மாகுமா? தாலி கட்டிய மனைவியையும், தமக்குப் பிறந்த பிள்ளையையும் வைத்துப் பாதுகாப்பது கணவனின் கடமையன்றோ? கந்த மூலங்களை யுண்டு, காட்டில் வாழும் முற்றும் துறந்த முனிவரும் மக்கள் ஆசையை மறப்பரோ? பிரமன், திருமால், பரமசிவனாகிய மும்மூர்த்திகளும், மற்றும் தேவர்களும் துறவறம் பூண்டு செல்லவில்லையே? ஆதலால் அடியாள் மீதும், நம் பாலன் மீதும் கிருபை கூர்ந்து அரண்மனைக்கு வாரும்; அன்றேல் எங்களையும் தம்முடன் அழைத்துச் செல்லும்; தங்களைப் பிரிந்து நான் ஒருக்காலும் அரண்மனை செல்லேன்; இது சத்தியம்." என்று அழுதும், தொழுதும் கூறினாள். அம் மொழிகளைக் கேட்ட வீரபத்திரர், 'பெண்ணே! நீ விவேகி யாயிருந்த போதிலும் அனுபவ ஞானமில்லை; பொய்யான இந்த உலகில் ஸ்தூல உடலை நிஜமென நம்பி, மயங்கி யிருக்கும் நீ, அந்த மாயா சம்பந்தத்தினால் என்னைப் பிரிவதற்கு மனம் வருந்துகிறாய்; இவ்வுலகில் நான் வந்த காரியம் முடிந்து விட்டது; இனி நித்யானந்தத்தைத் தேடிப் போவதே எனது கடமை யாகும்; அதை நீ தடுத்தல் முடியாத காரியம்; இறைவனே இனி உனக்கு ஏற்ற துணை; ஆகவே, என்னை மேலும் தொடர்ந்து வராமல்,

அரண்மனைக்குத் திரும்பிச் செல்; அல்லது, கச்சி மாநகரமெனும் காஞ்சிபுரத்திற்குப் போய் அதற்குத் தென்புரத்திலுள்ள ஆப்பனூர் என்னும் கிராமத்தை யடைந்து, அங்கு கோயில் கொண்டிருக்கும் ஜம்புகேசுவரரைத் தொழுது வாழ்வாயாக; இறைவன் உனக்கும், உன் குமாரனுக்கும், உரிய காலத்தில் உதவி செய்வார்'' என்று தத்துவ உபதேசங்கள் செய்து, ஆசி கூறிக் கயிலையை நோக்கி எழுந்தருளினார். அப்போது கயல்மணிதேவி, ''சுவாமி! கடற்கரையில் என்னைத் தன்னந் தனியே விட்டுச் சென்றால், நான் கச்சி நகரம் போய்ச் சேர்வதெங்ஙனம்? ஆதலால், தாங்கள் மனமிரங்கி, கச்சி நகரத்தில் எங்களைச் சேர்த்து விட்டுத் தாங்கள் கயிலைக்கு எழுந்தருள்வீராக'' என்று வேண்டினாள்.

கருணாநிதியாகிய வீரபத்திரர் அதற்கு இணங்கி, கடலைக் கடந்து, கச்சி நகருக்குக் கால் நடையாய்த் தமது மனைவி பின் தொடரச் சென்றார். வழியில் கயல்மணிதேவிக்கு வீரபத்திரர் மானிட வாழ்க்கையின் தத்துவங்களை உபதேசித் தருளினார். கடவுளின் தன்மை, மதங்களின் உற்பத்தி, வாழ்கையின் ஏற்றத்தாழ்வுகள், சிருஷ்டி தத்துவம் ஆகிய பல விஷயங்களில் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டே கயல்மணிதேவி கணவனைப் பின்தொடர்ந்தாள். அவ் வுபதேசத்தினால் தனது கணவன் ஓர் சிறந்த மகான் என்று அறிந்து கொண்டாள். தனது ஞானகுருவாக அவரை வரித்தாள்.

## அத்தியாயம் 3. (செய்யுள் 26—30)
## கயல்மணிதேவியின் ஆப்பனூர் வாழ்க்கையும், சிவருத்ரரின் கலைப் பயிற்சியும்.

கச்சி நகரம் சேர்ந்ததும், வீரபத்திரர் கயல்மணி தேவியிடம் விடை பெற்றுக்கொண்டு, மானிட உருவகன்று, ஜோதி சொரூபத்துடன் காட்சி யளித்தார்.

அக் காட்சியைக் கண்ட கயல்மணிதேவி சிறிது நேரம் திக்பிரமையுற்று நின்ருள். மதிதெளிந்து பார்க்கையில் வீரபத்திரர் சொரூபத்தைக் காணவில்லை. அருமணி யிழந்த நாகம்போல் கயல்மணிதேவி கலக்கமுற்ருள். பின்னர் தேவியார் தனது ஞானத்தால் மனதைத் தேற்றிக் கொண்டு, அருகிலிருந்த சத்திரத்தை யடைந்தாள். சில தினங்கள் அங்கு தங்கிப் பின்னர், ஆப்பனூருக்குப் பயண மானுள். கல்லும் முள்ளும் கால்களில் குத்த, கானல் பறக்கும் கடும் வெயிலில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தனிமையாக நடந்து சென்ருள். வழியில் பசியும் தாகமும் மேலிட்டுக் களைப்பெய்தினுள். ஆயினும், கற்பின் திறத்தாலும், ஈஸ்வர கடாட்சத்தாலும் சகல கஷ்டங் களையும் சகித்துக்கொண்டு, ஆப்பனூரை நோக்கிச் சென்ருள். அகோரமான தாகத்தினுல் தானும் குழந்தை யும் கடுங் களைப்படைந்தபோது, கயல்மணிதேவியார் இறைவனை வேண்டினுள். அவளுடைய பக்திக் கிரங்கி வானம் பொழிந்தது; பூமி குளிர்ந்தது; கற்பரசி களைநீங்கப் பெற்ருள்.

இவ்வாறு தேவியார் பலநாள் நடந்து சென்று ஆப்ப னூரை அடைந்தாள். அங்கு கோயில்கொண்டு எழுந் தருளியிருக்கின்ற ஜம்புகேஸ்வரர் ஆலயத்திற்குச் சென் ருள். பூத் திருப்பணி வேலையை மேற்கொண்டாள். தனது விலையுயர்ந்த ஆபரணங்களை ஆலயத்திருப்பணிக்கு அர்ப் பணம் செய்தாள். கோயிலுக்கு அருகிலுள்ள ஓர் முதி யவளின் நட்பைப் பெற்ருள். அவளுடைய அன்பார்ந்த மொழிகளால் கயல்மணிதேவி ஆறுதல் அடைந்தாள். எனினும், கணவனுரின் நினைவு மனதை விட்டகல வில்லை. அவளுடைய குடிசையில் குடியிருந்து, கோயில் பிரசாதத்தை உண்டு, சதா ஈஸ்வர தியானத்தில் ஈடு பட்டுக் காலம் கழித்து வந்தாள். அக் குடிசையின் ஓர் அறையைத் தன் பூஜைக்காகப் பிரத்தியேகப்படுத்திக் காலையிலும் மாலையிலும் மெழுகிக் கோலமிட்டு, இறைவன்

திருவுருவப் படத்தை முன்னால் வைத்துத் தீப தூபங்க ளேற்றிப் பூஜித்துப் பிரார்த்தித்து வந்தாள். (படம் 3.)

இவ்வாறு பத்து வருடங்கள் கழிந்தன. சிவருத்ர ருக்கு உரிய காலத்தில் தக்க ஆசிரியரைக்கொண்டு வித்தியாப்பியாசம் செய்வித்தாள். சிவருத்ரர் சரஸ்வதி யின் பூரண கடாட்சம் பெற்றவராய், சங்கீதம், நாட்டியம், ஓவியம் ஆகிய இன்பக் கலைகள் தவிர, இயல், இசை, நாடகம், சோதிடம் ஆகிய அறிவியற் கலைகளிலும், அஸ்திர சஸ்திர வித்தைகளிலும் தேர்ச்சி பெற்று விளங் கினார். கயல்மணிதேவியார் ஈஸ்வர சன்னிதானத்திற்கு சிவருத்ரருடன் சென்று, தன் குமாரனுக்குச் சகல கலை களும், வித்தைகளும், படைக்கலப் பயிற்சிகளும் ஆசீர் வதித்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ் சினாள்.

வாம பாகத்தில் கௌரியை வைத்தருளிய சந்திர சூடரான பரமசிவனார், கயல்மணிதேவியின் உருக்கமான வேண்டுகோளுக் கிரங்கி, வயோதிக வடிவம் தாங்கிக் காட்சியளித்தார். கயல்மணிதேவியார் விருத்தனை வணங் கிப் போற்றினாள். சிவருத்ரரையும் அவருக்கு வணக்கந் தெரிவிக்கும்படி செய்தாள். விருத்தர் அவர்களை ஆசீர் வதித்தார். வில்லும் வாளும் சிவருத்ரருக்கு அளித்து, மகாவிஷ்ணுவுக்குச் சமானமாகச் சகல கலைகளும் வித்தைக ளும் அவருக்கு வரவேண்டுமென்று, அயலறியா வண்ணம் அவருக்குப் பேசாமல் பேசி அருள் புரிந்தார். (படம் 4.) பிரணவ ஸ்வரூபமும், சிவ மந்திரமும் அவருக்கு உபதேசம் செய்தருளி மறைந்தார்.

சாக்ஷாத் ஜம்புகேஸ்வரரே விருத்தர் வடிவில் வந்து உபதேசித் தருளியதை அறிந்த தாயும் மகனும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். சிவருத்ரரின் புத்தி சாதுர்யமும், வீரதீர பராக்கிரமங்களும் நாடெங்கும் பரவலாயிற்று. மதயானைகள் அவரின் ஆஞ்ஞைக்கு அடங்கி நடந்தன. விஷ சர்ப்பங்களுங்கூட அவர் ஆணைக்குக் கட்டுப்பட்

நின்றன. இறைவன் ஆசி பெற்ற வீரத் திருமகன் தமது தாயிடம் சென்று தாம் பிற நாடுகளுக்குப் போய், தமது திறமையால் புகழ்பெற்று வர உத்திரவு கோரினர். மகனுடைய அறிவுத் திறமையைத் தர்க்கத்தால் அறிந்த தாய் மகிழ்வுற்று, அவருடைய சிறந்த நோக்கத்தை அங்கீகரித்து, அவருக்குப் பல புத்திமதிகளைக் கூறி, வடதிசையை நோக்கிப் போய் நள்ளியரசரிடம் செல்லும்படி ஆசிர்வதித் தனுப்பினள். அங்கு குழுமி நின்ற மறையோரும் பெரியோரும் ஆசி கூறினர். மகனுடைய பிரிவாற்றுமை மனத்தை வருத்தியபோதிலும், க்ஷத்திரிய தருமத்தை உணர்ந்த தாய், கடமையே பெரிதெனக் கருதி மகனை விட்டுப் பிரிய இசைந்தாள். 'யாவும் நன்மைக்கே' என்றெண்ணி, இறைவனை இறைஞ்சி செந்நெறி வழுவாது செம்மாந்து வாழ்ந்திருந்தாள்.

## அந்தியாயம் 4. (செய்யுள் 31-52)

### சிவருத்ரரின் போர்த் திறமையும், நள்ளி அரசரால் கௌரவிக்கப்படுதலும்.

சிவருத்ர இளஞ்சிங்கேறு, மாதவன் அளித்த மந்திர வாளை யேந்தியவராய், காடு மலைகளைத் தாண்டி வழியில் பல காட்சிகளைக் கண்டு இன்புற்று, இறுதியில் சூரிய குல மன்னனாகிய நள்ளி யரசர் சபையை அடைந்தார். அரசர் அவருடைய பிறப்பு வளர்ப்பு விருத்தாந்தங்களை வினவினர். சிவருத்ரர், "நான் தில்லையம்பலத்தில் திரு நடனமாடும் பரமசிவனுடைய கடாட்சத்தாலே பஞ்ச லக்ஷணமும் மந்திரோபதேசமும் பெற்றவன்; முக் குணப் பிரதானமான யாவர்க்கும் இசைந்த குருவாக யிருந்து சகல கலைகளும் உலகிற்கு எடுத்துக் காட்டும்படி என்னை அவர் அனுப்பினர்; அத் தில்லையம்பலத்தவனது மூன்றாவது புதல்வரான வீரபத்திரர் என் பிதா; என் பெயர் சிவருத்ரன்; புலிக் கொடியையுடைய வல்லமை பொருந்திய வேந்தரே! எனது போர்த் திறமையை தங்கள் முன்

நிரூபிக்க விரும்புகிறேன்; தங்களது சேனையில் சிறந்த வீரர்களை என்னுடன் போர் புரியும்படி அனுப்பி வையுங்கள்" எனக் கூறினர்.

இவ் வீர மொழிகளைக் கேட்டதும், அரசரும், மந்திரி பிரதானிகளும் ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்து, பலத்திலும் படைக்கலப் பயிற்சிகளிலும் சிறந்த போர் வீரர் பலரைத் தேர்ந்தெடுத்து, சிவருத்ரருடன் போர் புரியும்படி அனுப்பினர். சிவருத்ரர் சிறிது நேரம் வேடிக்கையாகத் தற்காப்பு வித்தையைமட்டும் திறம்பட உபயோகித்து, எதிர்த்து வந்த வீரர்கள் தத்தம் கைத்திறமைகளைக் காட்ட இடம் கொடுத்தார். இறுதியில், சூறுவளி வேகத்துடன் எதிரிகளின் மத்தியில் பாய்ந்து கண் இமை கொட்டுமுன் வீராவேசத் தாக்குதல் செய்து அவர்களைச் சிதற அடித்தார்.

அதைக் கண்ணுற்ற நள்ளி யரசர், 'இவன் நரசிங்கமோ' வென ஆச்சரியமும், சினமுங் கொண்டு, ஆதிசேடனை நிகர்த்த பராக்கிரமம் பொருந்திய தமது குமாரனை உக்கிர இளவரசனை அழைத்து, சதுரங்க சேனைகளுடன் சென்று, சிவருத்ரரைத் தோற்கடித்து வரும்படி உத்திரவிட்டார். அதற்கு இளவரசன், "தந்தையே! இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவன் சேர, சோழ, பாண்டிய அரச குலத்தவனே?" என்று வினவினன். அதற்கு அரசர், "அவன் வீரபத்திரரின் குமாரன் சிவருத்ரன்" எனக் கூறவே, இளவரசன் அசட்டையுடன் நகைத்து, "இந்திரனும், சேர, சோழ, பாண்டியர்களுமே என்னை எதிர்த்துப் போர் புரிய முடியாத நிலைமையில், இச் சிறுவனே எனக்கு எதிரி? இவனுடன் போர் புரிவது எனக்கு அவமான மல்லவா?" என வீர மொழிகள் உரைத்தான்.

நள்ளி யரசர் சீற்றத்துடன் அவனை நோக்கி, "மகனே! நமது போர் வீரர்களில் பராக்கிரமசாலிகளான பலரை

அரைக் கணத்தில் அதம் செய்தவ னல்லவா அவன்? எதிரியின் பலத்தைக் குறைத்துக்கூறுவது புத்திசாலித் தனமல்ல; ஆகவே, நீ வெகு ஜாக்கிரதையுடன் நின்று போர் புரிந்து அவனை வென்று வா'' என்று உத்திர விட்டார். அரசருடைய கட்டளைப்படி உக்கிர இளவரசன் தனது சேனைகளை அணி வகுத்துச் சிவருத்ரரை எதிர்த்துப் போரிடச் செய்தான். சிவருத்ரர் வெகுண்டெழுந்து வீராவேசத்துடன் தாக்கி அவன் சேனைகளைச் சிதறடித்தார். சிங்கத்தைக் கண்ட யானைகள்போன்று, உக்கிர சேனரின் சேனுவீரர்கள் ஓட்டமெடுத்தனர். தம்மீது பொழியப்பட்ட அம்புமாரிகளைச் சிவருத்ரர் புஷ்பமாரி போல் அலக்ஷியம் செய்து, மாதவன் அளித்த மந்திர வாளால் எதிரிகளின் சிரங்களை ஏராளமாகக் கொய்து குவித்தார். பின்னர் தமது திரியம்பகத்தை வளைத்து நாணேற்றி எதிரிகளை நோக்கிச் சரமாரியாகப் பொழியவே குதிரைகளும் யானைகளும் வெருண்டு ஓட்டமெடுத்தன. சேனுவீரர்கள் நாற்புறமும் சிதறி ஓடினர். தனியாக விடப்பட்ட உக்கிர இளவரசன், தானும் அவர்களைப் போல் பின்னுேக்கி ஓடுவது தனது சூரிய குலத்துக்கே அவமானம் எனக் கருதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, வெகு ஆரவாரத்துடன் சிவருத்ரரைக் குறி வைத்து அஸ்திரங்களைச் சோனுமாரியாக விடுத்தான். அவன் விட்ட கணைகளை யெல்லாம் சிவருத்ரர் தடுத்து முறித்தார். பின்னர் தமது அம்பால் குறிவைத்து உக்கிர இளவரசனின் ஆயுதங்களைப் பரிகரித்தார். நிராயுதபாணியாக நின்ற இளவரசனை நோக்கி, "தேவர்கள் போற்றும் சூரிய குலக் குமரனே! இனிமேல் உம்மால் ஆவது ஒன்றுமில்லை; ஆதலால் உமது பிதாவிடம் சென்று நடந்தவற்றைக் கூறும்'' என்று கட்டளையிட்டார்.

இளவரசன் நிலைமையை யுணர்ந்து சிவருத்ரரிடம் சென்று தலைவணங்கி, "ஓ மகானுபாவா! நுமது வீரப் பிரதாபத்தை நான் இப்பொழுதுதான் உணர்ந்தேன்;

கதிரவன் முன் மின்மினி பிரகாசிக்குமா? சிங்கத்தினிடம் நரி வீரம் பேச முடியுமா? இந்திரனின் வஜ்ராயுதத்தின் மீது வேறு ஆயுதம் பாயுமோ? இவ்வுலகில் நும்மைப் போன்ற வீரரை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; யானைகள் ஆயிரமிருப்பினும் ஒரு சிங்கக் குட்டி எதிர்த்து வந்தால், அவைகளின் கதி என்னவாகும்? அதுபோன்று ஈஸ்வர புத்திரரின் மைந்தன் முன்பு சூரிய குல மன்னர் எம்மாத்திரம்? நும்மை நான் வணங்கித் துதிக்கிறேன்; எனக்குக் குருவாக அமைந்து ஆசீர்வதித் தருளவேண்டும்; என் பேரில் தயைபுரிந்து என்னுடன் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டும்." என்று வினய பூர்வமாகப் பிரார்த்தித்தான். சிவருத்ரர் அவன் வேண்டுகோளுக் கிணங்கி, இளவரசருடன் ரத்னங்கள் பதித்த தங்க ரதத்தில் அமர்ந்து, தலை நகராகிய தஞ்சை மா நகரை நோக்கிச் சென்றார்.

சிவருத்ரரின் விஜயத்தைக் கேள்வியுற்ற நள்ளியரசர் சகல ராஜ மரியாதைகளுடன் அவரை வரவேற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். சிவருத்ரர், மந்திரி பிரதானிகளால் வரவேற்கப்பட்டுக் கம்பீரமாக நகர் வலம் வந்து, அரண்மனையின் ஆஸ்தான மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். உக்கிர ராஜ தளபதி சிவருத்ரரின் வீரச் செயல்களைச் சபையோருக்கும், மன்னருக்கும் எடுத்துரைத்தார். அரசரும் சபையோரும் மகிழ்ச்சியுடன் சிவருத்ரரைப் போற்றினர். நள்ளி அரசர் சிவருத்ரரை அன்புடன் தழுவித் தமது வலது பக்கத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்தார். சிலகாலம் தமது ராஜ்யத்தில் தங்கியிருந்து, தமது குமாரன் உக்கிர இளவரசனுக்குப் படைக்கலப் பயிற்சியும், மற்றும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியும் அளிக்கும்படிச் சிவருத்ரரைக் கேட்டுக் கொண்டார். அவர் அதற் கிணங்கி இளவரசருடன் வசித்துவரலானார். சிவருத்ரரின் திறமையும், அன்பும், அனைவருடைய மனத்தையும் கவர்ந்தது.

## அத்தியாயம் 5. (செய்யுள் 53—75)

## மூவேந்தரின் முற்றுகையும், சிவநந்தரின் வெற்றியும்.

உக்கிர இளவரசருக்குப் பேரெழில் வாய்ந்த நந்தை யாள் என்னும் தங்கை யிருந்தாள். அவளுக்கு இசைப் பயிற்சியுடன், நாட்டியக் கலையும் பயிற்றுவிப்பதற்காக அவள் தந்தையான நள்ளியரசர், அவ்வூரில் பாண அரச மரபைச் சார்ந்த பண்டிதசாமி என்னும் புகழ்பெற்ற வித்துவானின் சுந்தரக் குமாரி அருங்கலைச் செல்வி கன்யுகை என்பவளையும், வணிகர் குலத் திலகமான தத்தன் செட்டியாரின் குமாரியும், நாட்டியக் கலையில் வல்லவளு மான உமையாள் என்பவளையும், அவர்களின் பெற்றோர் அநுமதி பெற்று, அரசகுமாரியுடன் ஓர் அழகான தனி மாளிகையில் வசித்து வரும்படி ஏற்பாடு செய்திருந்தார். நந்தவனம் சூழ்ந்த அப் பளிங்கு மாளிகையில் மூவரும் வெகு உல்லாசமாய் வசித்துவந்தனர். (படம். 5.) இம் மங்கையரின் எழில் நலத்தையும், அறிவுத் திறனையும் கலைச்சிறப்பையும் கேள்வியுற்ற சேர, சோழ, பாண்டிய வல்லரசர்கள் அவர்களைக் களவாடிச் சென்று, தமக் குரிமை யாக்கிக்கொள்ள விழைந்தனர். ஒரு நாள் திடீ ரென்று மா பெருஞ் சேனையைக் கொண்டுவந்து, நள்ளி நாட்டின் தலை நகராகிய தஞ்சை மா நகரத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் பாளைய மிறங்கினார்கள். நடுச் சாமத் தில் அச் சேனையின் ஒரு பகுதியையும், பெண்படை யொன்றையும் கூட அனுப்பி மாதர்கள் மூவரையும் சிறைப் பிடித்து வரும்படி கட்டளை யிட்டனுப்பினர். அவ்வண்ணமே சென்ற வீரர்கள், கோட்டை வாயிலில் நின்ற காவற்காரரைக் கட்டுவித்துச் சேடியர்களை அறை யிலடைத்துப் பெண் படைகளை மாளிகையினுள் அனுப் பினர். அவர்கள் மாளிகையின் அந்தப்புரம் சென்று மஞ்சத்தில் துயின்றுகொண்டிருந்த மூன்று கன்னிகை

களையும் துயிலெழுப்பி நயமாகவும் பயமுறுத்தியும் பேசி அவர்களைப் பலவந்தமாகப் பல்லக்குகளில் ஏற்றி விடியு முன்னர் கோட்டை வாசலுக்கு வெளியே கொண்டு சென்றனர். ஆசிரியாளாக அமைந்த கண்டிகையாள் மற் றிருவருக்கும் ஆறுதல் மொழிகள் கூறவே, மூவரும் இறைவனை நோக்கி இறைஞ்சினர்.

பொழுது புலர்ந்ததும், ராஜகுமாரியின் அரண் மனைக்கு வந்த சேவகர்கள் காவலாளிகள் கட்டுண்டு கிடப்பதையும், சேடியர்கள் அடைபட்டிருப்பதையும் கண் டனர். மூன்று மாதரசிகளும் எங்கும் காணப்படவில்லை. திகிலுற்ற சேவகர்கள் அரசரிடம் விரைந்து சென்று, செய்தியை அறிவித்தனர். கோட்டைக்கு வெளியே தூக் கிச் செல்லப்பட்ட பல்லக்குகளிலிருந்து பரதவித் தழுத மங்கையரைக் கண்ட மாந்தர்களும், ஓடோடியுஞ் சென்று அனைவருக்கும் ஆத்திரத்துடன் அச்செய்தியை அறிவித் தார்கள். கண்டிகையாள், உமையாள் ஆகியோரின் பெற் றோரும், நகர மாந்தர் அனைவரும் கன்றை இளந்த மான் போலக் கலங்கித் தவித்தனர். அரசரும் ஆற்றொணுத் துயரத்தில் ஆழ்ந்தார். அக்கணமே சிவருத்ரருக்கு அதை அறிவிக்கச் சொன்னார். நடந்தவற்றை அறிந்த சிவருத்ரர், அரசரைத் தேற்றித் தாம் எவ்விதமும், நீதி நெறி தவறிய அம் மன்னர்களுடன் போர் புரிந்து அவர்களை முறி யடித்து, மாதர்களைச் சிறை மீட்டு வருவதாக ஆறுதல் மொழிகள் கூறினார். அரசரும் தமது சேனைகளைத் திரட்டு மாறு ஆஞ்ஞாபிக்கவே, சிவருத்ரர் அச்சேனைகளை ஒழுங் காக அணி வகுத்து, அவற்றிற்குத் தாமே தலைமை தாங்கி நடத்திச்சென்றார். பல்லக்குகளுடன் சென்ற மூவேந்தர்களின் படை வீரர்களைச் சிவருத்ரர் வழி மறித்து அவர்களுடன் போர் புரிந்து மாதர்களைச் சிறை மீட்டார்.

இச் செய்தி யறிந்த மூவேந்தர்கள் பொங்கி யெழுந்து சமுத்திரம் போன்ற தங்கள் சதுரங்கசேனைகளோடு அங்கு சென்றனர். அதைக் கண்டு நிலை கலங்கிய நள்ளி யரசரின் சேனாவீரர்களுக்குச் சிவருத்ரர் வீர மொழிகளை யுணர்த்தி உற்சாக மூட்டிப் போரிடும் முறைகளைக் கற்பித்தார். மாதவன் அளித்த மந்திர வாளைக் கையிலேந்தி அசுவத்தில் ஏறி எதிரிகளின் சேனையின் மத்தியில் புகுந்தார். அவருடைய மின்வெட்டுத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் எதிரிகள் புறமுதுகு காட்டினர். மந்திர வாளுக்கு இறையான வீரர்களின் சடலங்கள் மலைபோல் குவிந்தன. மூவேந்தர் சேனைகள் சிதறியோடின. அது கண்ட மன்னர்கள் தங்கள் பின்னணிச் சேனைகளை ஒருங்கே திரட்டிச் சிவருத்ரர் முன்னணிக்குச் சென்று தாக்கினர். பன்னிரண்டு வியூகங்க ளடங்கிய மூன்று வல்லரசர்களின் சேனா சமுத்திரத்தால் நாற்புறமும் சூழப்பட்ட சிவருத்ரரின் சிறிய சேனை சற்றுத் தயங்கியது. சிவருத்ரர் அவ்வீரர்களைத் திடப்படுத்தி, தேசாபிமானத்துடன் நின்று போரிடும்படி தூண்டினார். இளஞ் சிங்கம் போன்று நள்ளி அரசர் சேனையின் முன்னணியில் நின்று போர் நடத்திய சிவருத்ரரை நோக்கிக் குறி வைத்து மதயானை மீது ஆரோகணித்த சேர மன்னன் அம்புகளைச் சரமாரியாகப் பெய்தான். சிவருத்ரர் அக் கணைகளைத் தமது மாற்றுக் கணைகளால் முறித்து, மூவரை நோக்கிச் சில கணைகளை எய்தார். குறி தவறாத அந்த அம்புகள் சேரனைத் தாக்கிப் படு காயப்படுத்தின. பாண்டியன் கிரீடம் தரையில் உருண்டது. அம்பு தாக்கிய சோழ மன்னன் குதிரையினின்று தரையில் வீழ்ந்தான். மன்னர்களின் நிலைமை கண்ட சேனாவீரர்கள் சிதறியோடினர். யானைகளும், குதிரைகளும் ஏராளமாகச் செத்து வீழ்ந்தன. ஈஸ்வர கடாட்சமும், போர்த்திறமையும் பெற்ற சிவருத்ரர் கணையிடுதல், விலக்கல், தன்னை மறைத்தல், தத்துதல் ஆகிய போர் முறைகளைக் கையாண்டு எதிரிகளைக் கதி

கலங்கச் செய்தார். இந்த வீரச் செயல்களைக் கண்ட மாந்தர்களும் தேவர்களும் மகிழ்ந்து ஆரவாரம் செய் தனர்.

போட்டது போட்டபடியே புறமுதுகு காட்டி மூவேந் தரும் தப்பி யோடவே, மாதரசிகள் மூவரையும் சிவருத்ரர் முத்துச் சிவிகைகளி லேற்றிக்கொண்டு, சேனு வீரர்கள் ஜெயகோஷம் முழங்கத் தஞ்சை நகருக்குத் திரும்பினர். இவ்வாறு மூவரசர்கள் தோல்வியுற்றதும், மும் மாதர்கள் சிறை மீட்கப் பெற்றதுமான சந்தோஷச் செய்தி காட்டுத் தீபோல் நள்ளி நாடெங்கணும் பரவியது. சிவருத்ரரின் சுந்தர ரூபத்தையும், இனிய மொழிகளையும், கண்ணியம் பொருந்திய நடத்தையையும், வீரச் செயல்களையும் நேரில் கண்டறிந்த கன்னியர் மூவரும், அவரிடம் காதல் கொண் டனர். அவரிடம் கொண்ட அன்பால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். நள்ளி இளவரசரும், மக்களும் வெற்றி வீரரை எதிர்கொண் டழைத்து, சகல ராஜோபசாரங் களுடன் நகர் வலம் வந்தபின் அரண்மனைக்கு அழைத் துச் சென்றனர்.

நள்ளி யரசர் தமது இருக்கையினின்றும் எழுந்து வந்து, சிவருத்ரரை எதிர்கொண் டழைத்து, அன்புறத் தழுவி அவர் கரங்கள் பற்றி வலக்கைப்புறம் ஆசனத் தமர்த்தி, வீரர் செய்த பேருபகாரத்தை விழுமிய மன துடன் புகழ்ந்து போற்றினர். சிவருத்ரர் பணிவுடன், தமது கடமையைச் செய்ததற்குப் புகழுரைகள் ஏதும் வேண்டாமென்று அரசரைத் தடுத்து நிறுத்தினர். நன்றி நிரம்பிய மனத்தினனுன நள்ளி யரசர் தமது குமாரனைச் சிவருத்ரரின் அடிகளில் பணியச் செய்து, சகல கலைகளை யும் அவனுக்கும், அரச குலச் சிறுவருக்கும் கற்பித்துக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். மேலும் அந் நாட்டி லேயே தங்கி யாதொரு தீங்கும் நேரிடாது பாதுகாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். சிவருத்ரரும்

அரசரது வேண்டுகோளுக்கு அன்புடன் இணங்கி அவர் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாமென்று கூறி, மூவேந்தர்களும் போர்க் களத்தில் விட்டுச் சென்ற கிரீடங்களையும் அரசரிடம் கொடுத்தார்.

சபா மண்டபத்தின் மேன் மாடியில் நின்று, வைத்த கண் மாறாமல் கீழே நடந்த காட்சிகளைக் கவனித்து வந்த கன்னிகா ரத்னங்கள் மூவரும், தங்கள் உள்ளம் கவர்ந்த சுந்தரனை எவ்விதம் அடைவது என்ற கவலையில் ஆழ்ந்தனர். ஆயினும், ஸ்திரீகளுக்குள்ள இயற்கையான நாணத்தால் தங்கள் உணர்ச்சியை வெளிக் காட்டாமல் மறைக்க முயன்றனர். தமது குமாரிகளைத் திரும்பவும் காணப்பெற்ற பெற்றோர்கள் கண்ணிழந்தவன் மீண்டும் பார்வை அடைந்ததுபோல் மிகவும் ஆனந்த சாகரத்தில் மூழ்கினர்.

நள்ளி யரசர் தமது குமாரனையும், மற்றும் நூற்றுப் பத்து அரசகுல இளைஞர்களையும் சிவருத்ரரிடம் வித்தை பயிலும்படி அவர்களுக்கென ஓர் தனி மாளிகையில் ஏற்பாடு செய்தார். தவிரவும், சிவருத்ரர் கல்வியின் பெருமையை நகர மக்களின் பொதுக் கூட்டங்களில் எடுத்துரைத்து, பள்ளி மாணவருக்கும் கல்வி கேள்விகளில் பயிற்சி யளித்து வந்தார். அவர்களுக்குக் கடவுள் பக்தியும், குருபக்தியும் ஏற்படும்படித் தினமும் தெய்வ வணக்கத்துடன் கலைப் பயிற்சி நடந்து வந்தது. மல் யுத்தம், சிலம்ப வித்தை, வாட் போர், சாரத்தியம் ஆகிய யுத்த தந்திரங்களைக் கற்பித்தார். மாணாக்கர்கள் இயல், இசை, நாடகம், நாட்டியம், மற்றும் பல கலைகளிலும் அரசரும், நகர மாந்தர்களும் கண்டு களிக்குமாறு சிறப்புற்று விளங்கினர். மூவேந்தர்களை முறியடித்த சகல கலா வல்லவரான சிவருத்ரருக்குத் திருமண முடித்து வைத்து, அவரை நாட்டின் பிரதம மந்திரியாகச் செய்ய வேண்டுமென்று அம் மக்கள் அபிப்பிராயம் கொண்டனர்.

மேலும், சிவருத்ரர் சிறை மீட்ட மாதரசிகள் மூவரையும் அவருக்கே மணம் செய்விப்பது நல்லது என்றும் மக்கள் பேசிக்கொண்டனர்.

## அத்தியாயம் 6. (செய்யுள் 76—91)

## சிவருத்ரரின் திருமணங்களும், கயல்மணிதேவியின் விஜயமும்.

சிவருத்ரர்பால் மங்கையர் கொண்ட காதல் வளர்ந்து வந்தது. காலையிலும் மாலையிலும் அரச குமாரர்களுடன் சிவருத்ரர் அசுவமீது ஆரோகணித்துப் பவனி வரும் காட்சி அவர்களுடைய காதலை அதிகரிக்கச் செய்தது. அவரைத் தவிர வேறு எவரையும் மணம் செய்வதில்லை யென்று அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் திட சங்கல்பம் செய்து கொண்டனர். தங்கள் எண்ணம் நிறை வேற வேண்டுமென்று பத்தினிக் கடவுளைப் பிரார்த்தித்து விரதம் இருக்க ஆரம்பித்தனர். நித்திரையிலும் சிவருத்ரரையே நினைந்து உருகினர். உணவு குறைந்து, உடல் மெலிந்தது. தங்கள் விரதம் கைகூடுமோவென்று இரகசியமாகக் குறி பார்த்தனர். அவர்களின் மனோ நிலையை யறியாத பெற்றோர்கள் தேவதோபாதை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாமோவெனக் கருதி மாந்தரீகர்களை யழைத்துப் பூசைகள் போட்டனர்.

கண்டிகையின் தாயார் ஒருநாள் அவளிடம் கலியாண விஷயமாய்ப் பேசினாள். பந்துக்களுக்குள்ளே அவள் மனதுக்குப் பிடித்த வரனைப் பார்த்து விவாகத்தைச் சிக்கிரம் முடிக்க அவளது தகப்பனார் முயற்சித்து வருவதாகக் கூறினாள். அதற்குக் கண்டிகையாள், "அன்னையே! என்னைச் சிறை மீட்டவராகிய சிவருத்ரருக்கே நான் கற்பில் கரையற்றவள் என்பது தெரியும்; வேறொருவரை மணந்தால், அவரது உறவினர் எப்போதாகிலும் என் கற்பைக் குறை கூறி, அவதூறு பேசவும் செய்யலாம்; அவ்வாறு நேரிடின், என் கதி என்னவாகும் என்பதை

உணர்ந்தீர்களா? வீண் அபவாதம் சகிக்க முடியுமா? ஆகவே, மணந்தால் சிவருத்ரரையே மணப்பேன்; இல்லா விடில், கன்னிகையாகவே காலங் கழிப்பேன்" என்று முடிவாகக் கூறவே, அவள் அதைத் தன் கணவரிடம் விபரமாய் அறிவித்தாள். அவர் தன் மகளின் புத்திக் கூர்மையை மெச்சினர். அக்கணமே அரசரிடம் சென்று தமது மகளின் மனோ நிலையை எடுத்துரைத்தார். எப்படி யாவது சிவருத்ரருக்குக் கண்டிகையாளை மணம் செய் விக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். அரசரும் அதற் கிணங்கி சிவருத்ரரை அழைப்பித்து பண்டிதசாமியின் வேண்டுகோளைத் தெரிவித்தார். கண்டிகையாளின் ரூப லாவண்யங்களையும், குண நலங்களையும் வெகுவாக எடுத் துரைத்து, அவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ளும்படி சிவருத்ரரை வேண்டிக்கொண்டார். கண்டிகையாளை நேரில் கண்டும் அவளது இசைக் கலைத் திறனையும், கல்வி யறிவையும், உயரிய குணங்களையும் கேள்விப்பட்டுமிருந்த சிவருத்ரர், அரசரின் வேண்டு கோளுக் கிணங்கினர். வித்வான் பண்டிதசாமியின் இல் லத்தில் கண்டிகையாளுக்கும் சிவருத்ரருக்கும் திருமண வைபவம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. மாலையில் மண மக்களின் ஊர்வலம் வெகு விமரிசையாக ரத வீதிகளில் நடைபெற்றது.

புஷ்ப ரதத்தில் ஆரோகணித்திருந்த மணமக்களா கிய சிவருத்ரரையும் கண்டிகையாளையும் மேன் மாடியின் சாளரத்தின் பக்கம் நின்று திடீரென்று கண்ட உமை யாள் திகைப்படைந்தாள். தன் மனோரதம் நிறைவேறுமல் போய்விட்டதே என்று வருந்தினுள். கண்டிகையாளின் அதிர்ஷ்டம் தனக்கும் கிடைக்குமோ என்று பெருமூச் செறிந்தாள். மூர்ச்சையுற்றுத் தரையில் வீழ்ந்தாள். அதை யறிந்த உமையாளின் பெற்றோர்கள் அவளுக்கு மூர்ச்சை தெளிவித்து, அவளது உள்ளக் கருத்தை வின வினர். "சிவருத்ரரைக் கணவனுக அடையும் பாக்கியம்

எனக்கும் கிட்டாவிட்டால் கன்னிகையாக இருப்பதையே விரும்புகிறேன்'' என்று உமையாள் புலம்பித் தவிப்பதைக் கண்ட அவளது தகப்பனார், அங்கு குழுமி நின்ற பெரியோர்களின் ஆலோசனைப்படி அரசரிடம் சென்றார். எப்படியாவது சிவருத்ரரிடம் சொல்லித் தமது குமாரியை அவர் இரண்டாவது தாரமாக மணம் செய்து கொள்ளும்படி செய்யவேண்டுமென்று அரசரை இறைஞ்சி நின்றார். அரசர் சிவருத்ரரை அழைத்து அது விஷயமாகக் கலந்து ஆலோசித்தார். எழிலுடைய உமையாளின் நாட்டியக் கலைத் திறனைப்பற்றி ஏற்கனவே அறிந்திருந்த சிவருத்ரர் அவளை மணந்து கொள்ளச் சம்மதித்தார். அரசர் அரண்மனைக் கொலுமண்டபத்திலேயே அவ் விருவருக்கும் மண விழா நிறைவேறியது.

அச் செய்தியைச் சேடியர் மூலமாக அறிந்த அரச குமாரியாகிய தத்தையாள், தன் தாய் இல்லாத குறையை நினைத்துக் கண்ணீர் வடித்தாள். தன்னுடைய மனோ நிலைமையை யாரிடம் சொல்வது என்று ஏங்கினாள். தன்னுடைய பிதாவே தன்னைப்பற்றிக் கவலைகொள்ளாமல் கண்டிகையாளையும் உமையாளையும் சிவருத்ரருக்கு மணம் செய்துவிட்டாரே என்று மதிகலங்கி மனம்நொந்து அழுது புலம்பினாள். பிறகு மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டு ஆபரணங்களையும் அணிந்துகொள்ளாமல் தகப்பனாரின் அரண்மனைக்கு விரைந்து சென்றாள். கல்யாண மண்டபத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த பிதாவின் பாதத்தில் விழுந்து கதறினாள். "பிதாவே! நான் அன்னையிழந்த அனாதைப்பெண் என்பதை நிரூபித்து விட்டீர்களல்லவா? மற்றிரு மாதர்களின் நல்வாழ்வைக் கருதியதும் என்னை மட்டும் தாங்கள் அலட்சியம் செய்ததும் தர்மமா? என் உள்ளக் கருத்தை எப்படி நான் தெரிவிப்பேன்? எங்களைச் சிறைப் பிடித்துச் சென்ற மூவேந்தரையும் எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற அவ் வீரச்சிங்கத்தை

நான் கண்டதுமே அவர் மீது காதல்கொண்டேன்; அவரையன்றி வேறு யாரையும் மணம செய்துகொள்வதில்லை யென உறுதி செய்து கொண்டேன்; சிறைமீட்கப்பட்ட மூவரில் இருவர் இன்புற்றிருக்க, நான் மட்டும் துயருற்றிருக்க வேண்டுமா? என்னையும் அவர் மூன்ருவது தாரமாக மணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்யுங்கள்; அன்றேல், நான் கணமும் உயிர் தரியேன்; அதனுல் தாங்கள்தான் அபவாதம் அடைய நேரிடும்; இது சத்தியம்'' என்று அவள் அழுதும் தொழுதும் கூறினுள். மகளின் மனத்தை யறிந்த நள்ளி யரசர், இது ஈசன் செயலேயன்றி வேறில்லை என்று மகளுக்கு ஆறுதலான மொழிகள் கூறினுர்.

பின்னர், நன்றி நிரம்பிய மனத்தினனுன நள்ளி யரசர் சிவருத்ரரை யணுகி "புருஷோத்தமரே! எனக்கும், என் குமாரிக்கும், என் நாட்டிற்கும் நேரிட்ட பேராபத்தினின்றும் எங்களைக் காத்து ரக்ஷித்த உமக்கு யான் யாது கைம்மாறு செய்யப் போகிறேன்; எனது குமாரி தத்தையாளை மூன்ரும் தாரமாக உமக்கு மணம் செய்விப்பதே தகுதியெனக் கருதுகிறேன்; தாம் சிறைமீட்ட மற்றிரு கன்னியர்களையும் மணம் செய்து கொண்டதுபோலவே, எனது குமாரியையும் உமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்வீராக; அவளும் உம்மையே மனமாரக் காதலிக்கிருள்'' என்று கூறினுர். அரசர் சொன்னது நியாயமே என்பதைச் சிவருத்ரர் ஒப்புக்கொண்டார். தேவலோகம் போல் சிங்காரிக்கப்பட்ட மணப் பந்தலிலே சிவருத்ரருக்கும், ராஜகுமாரி தத்தையாளுக்கும், திருமண வைபவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அரசர் சிவருத்ரருக்குச் சகலவிதமான ராஜோபசாரங்கள் செய்து அவரது மற்றிரு மனைவியாருடன் தமது குமாரியையும் பளிங்கு மாளிகையிலே வசித்து வரும்படி ஏற்பாடு செய்தார்.

சிவருத்ரரின் மூன்று மனைவியரும் மனவொற்றுமையுடனும, பரஸ்பர அன்புடனும், பதி பக்தியுடனுங் கூடி

இல்லறம் இனிது நடத்திவந்தனர். இவ்வாறு இன்புற்றிருக்க, ஒருநாள் சிவருத்ரருக்கு ஆப்பனூரில் அருந்தவம் புரிந்துவரும அன்னையாரின் நினைவு ஏற்பட்டது. உடனே அவர் அரசரிடம் சென்று தமது அன்னையைப் போய்ப் பார்த்து வர விடை தரும்படி வேண்டினர். நள்ளி யரசர் சிவருத்ரரை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் அவரது தாயார் தமது சகோதரி என்ற முறையைத் தெரிவித்து, அவளை யழைத்து வரத் தாமே ஏற்பாடு செய்வதாகவும் சொன்னர். தமது தாயாருடன்கூடத் தஞ்சை மா நகரிலே தங்கி, சூரியகுல ராஜகுமாரர்களின் குலக்குருவாக இருந்து வர வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக் கொண்டார். பின்னர் அரசர் மந்திரியை நோக்கி, சிவருத்ரரின் தாயாரைச் சகல சௌகரியங்களுடன் மேனுப்பல்லக்கில் அழைத்து வரச்சொல்லி தமது பிரதானிகளையும், படை வீரர்களையும், சேடியரையுங்கூட அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார். புறப்பட்டுநின்ற சேடியர் தலைவியைப் பார்த்துச் சிவருத்ரர், "எனது தாயாராகிய கயல்மணி தேவியார் ஈழநாட்டு இராமராஜருடைய புதல்வி; தற்போது ஆப்பனூரில் தவக் கோலம் பூண்டுத் தெய்வத் திருப்பணியில் ஈடு பட்டிருக்கிறர்; ஆலயத்துக்கு அருகாமையில் ஓர் ஔவையின் அகத்தில் வசித்துவருகிறர்" என்று அறிவித்ததுடன் தமது தாயாரால் அணிவிக்கப்பட்ட கணையாழியையும் அடையாளமாகக் கொடுத்தனுப்பினர்.

அதன்படியே நள்ளி யரசருடைய ஏவலாளர்களும், தாதியர்களும் ஆப்பனூரை யடைந்து கயல்மணி தேவியாரைக் கண்டு கணையாழியையும் அவரிடம் ஒப்புவித்தனர். தமது குமாரனின் வெற்றிகளையும், கீர்த்தியையும் கேள்வியுற்ற கயல்மணிதேவியார் இறைவனை வாழ்த்தினள். தமது கணவரை மனமாரத் துதித்தாள். பின்னர் தமக்கு அதுகாறும் உதவி செய்த ஔவையாரிடம்

110748



விடை பெற்றுத் தஞ்சை மா நகருக்குப் பயணமானாள். தாயாரின் வருகையை எதிர்பார்த்து நின்ற சிவருத்ரர் மகிழ்வுடன் அருகிற்சென்று வணங்கினார். மகனைக் கண்ட கயல்மணிதேவி மனமகிழ்ந்து ஆசீர்வதித்தாள். சிவருத்ரர் அன்னையைத் தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அவருடைய மனைவிகள் மூவரும் மாமியாரின் பாதம் பணிந்து வணக்கம் தெரிவித்தனர். தேவியார் அவர்களை நோக்கி, "பிரம தேவனைப் போன்ற உலகம் போற்றும் வீர ஆண்மக்களையும், மகாலெக்ஷிமி போன்ற பெண்மக்களையும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்வீராக" என்று மன முவந்து ஆசீர்வதித்தாள். பின்னர் நள்ளி யரசரும் கயல்மணி தேவியாருக்குரிய மரியாதை செய்தார்.

## அத்தியாயம் 7. (செய்யுள் 92—105)

### சிவருத்ரரின் மகுடாபிஷேகமும், மதிமங்கையின் திருமணமும்.

சிவருத்ரர்பால் தம் நன்றியைத் தெரிவிக்க விரும்பிய நள்ளியரசர் தம்முடைய ராஜ்யத்தில் ஏதாவது ஒருபகுதியைத் தெரிந்தெடுத்துக் கூறினால், அதற்கு அவரையே அரசராகச் செய்வதாகவும் வாக்களித்தார். சிவருத்ரர் சிறுவைப் பிராந்தியத்தைக் கோரவே, நள்ளியரசர் அதற்கிசைந்து, தமது மந்திரி பிரதானிகளை அழைத்து, அப்பகுதிக்கு எல்லைவகுத்து அகழ், அரண், கோட்டை, கொத்தளங்கள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், அரண்மனை, நந்தவனங்கள், வர்த்தகஸ்தலங்கள், நீராழி மண்டபங்கள் ஆகியவற்றை அழகாக அமைக்கும்படி ஏற்பாடு செய்தார். ஓர் சுபதினத்தில், சதுரங்க சேனைகளுடனும், நவ நிதிகளுடனும், பரி ஜனங்களுடனும் சிவருத்ரரை அவர் தாயார், மூன்று மனைவியர்களுடன் சிறுவை நகருக்கு அழைத்துச்சென்றார். சுப முகூர்த்தத்தில் அவருக்கு முடிசூட்டு வைபவம் நடத்திவைத்தார். (படம். 6.) யாவரும் கண்டு வியக்கத்தக்க விதமாய் நகர் பவனியும் நடைபெற்றது. சிவருத்ரர் நீதி வழுவா நெறி

முறையிற் செங்கோல் நடத்தி வரலானர். குடிகளின் குறைகளை விசாரித் தறிந்து, அவ் வப்பொழுது நீக்கி வைத்தார். அவருடைய நீதி ஆட்சியின் திறமையை நேரில் கண்ட நள்ளி யரசர், அவரைப் புகழ்ந்து வாழ்த் தினர். பின்னர் விடை பெற்றுத் தமது தலைநகராகிய தஞ்சை மா நகர் சென்றார். சிறுவை ராஜ்யத்தின் குடிகள் யாதொரு குறைவுமின்றி, மட்டற்ற மனமகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்திவந்தனர். மக்கள் தெய்வ பக்தியும், தேசபக்தியும், ராஜபக்தியும், அன்பும் உடையவர்களாய்த் திகழ்ந்தனர். புலவர்கள் எல்லோரும் சிவருத்ரரின் சபா மண்டபத்திற்குச் சென்று, "இந்திரனுக் கொப்பான பெருமை யுடையவர்; மதயானையை நிகர்த்த பலமுடைய வர்; இராஜ ராஜர்களுக்கெல்லாம் மேலானவர்" என்று பற்பல கவிகள் அமைத்து அவரைப் பாடிப் போற்றிப் புகழ்ந்தனர். அவர்களுக்குப் பொன்னும் மணியும் அரசர் சிவருத்ரர் அள்ளிக் கொடுத்தார்.

பின்னர் ஒரு நாள், அந் நாட்டின் பூமிபாலர்கள் சிவ ருத்ரரிடம் வந்து, "அரசே! தங்கள் குல விருத்தாந்தங் களை அறிய ஆவலுள்ளவர்களா யிருக்கிறோம்" என்று கூறினர் சிவருத்ரர் புன்முறுவலுடன், "அன்புடையீர்! யான் இமையவர் குலத் துதித்தவன்; கங்காதரனாகிய சாக்ஷாத் பரமசிவனின் மூன்று குமாரர்களாகிய கணபதி, சுப்பிர்மணியர், வீரபத்திரர் ஆகிய மூவரில் இளையோ னாகிய வீரபத்திரரின் புதல்வன் யான்; இங்கு என்னுடன் வசிக்கும் கயல்மணிதேவியார் என் அன்னை; ஆகவே, எமது குலத்தை இமையவர் குலம் அல்லது கங்கை குலம் என்றும் கூறலாம்" என மொழிந்தார். அது கேட்டுப் பூமிபாலர் மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் தங் கள் சமூகத்தின் திலகமபோன்று விளங்கிய பெரு நிலைப் பிரபுவான அங்கசன் என்பாரின் புதல்வி, அருங்கலைச் செல்வி மதி யென்பாள் அவாமீது காதல் கொண்டிருப்

பதாகவும், அவளை மணம் செய்து கொண்டு தங்கள் குலத்துக்குப் பெருமை யளிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தனர். பேரழகும் நற்குணமும் நிறைந்த மதி மங்கை தம்மீதில் காதல் கொண்டிருப்பதை யறிந்த சிவருத்ரர் அவளை மணம் செய்துகொள்ள இசைந்தார், ஓர் சுப தினத்தில் மதிதேவியின் மணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் இருவரும் மதனும் ரதியும்போல் இனிது வாழ்ந்து வரும் நாளில், மதிதேவியார் கருப்பமுற்று, உரிய காலத்தில் முருகனையொத்த அழகுடன் கூடிய ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். இரண்டாவது கருப்பத்தில், இராமனைப்போன்ற லட்சணமுள்ள ஆண் குழந்தையைப் பெற்றாள். மூன்றாவது பிரசவத்தில் ரதி போன்ற ரூபவதியான ஓர் பெண் குழந்தை பிறந்தது. சிவருத்ரர் ஓர் சுபதினத்தன்று, மதிதேவியின் மூன்று குழந்தைகளுக்கும் நாமகரணம் சூட்டுவிழா நடத்ினர். முதலாவது புத்திரனுக்கு இராவணன் என்றும், இரண்டாவது குமாரனுக்கு இலவன் என்றும், மூன்றாவது குமாரிக்கு இந்திரை எனவும் பெயரிடப்பட்டது. அக்குழந்தைகளை இசைக்கலைச் செல்வி கண்டிகையாள் அதி அன்புடன் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டி இனிது கொஞ்சி வந்தாள். ஆயினும், தங்களுக்குப் புத்திரப் பேறு இல்லாததுபற்றி, அம் மூவரும் மிகவும் மனம் வருந்தினர். கண்டிகையாளின் ஆலோசனைப் பிரகாரம், புத்திரரை வேண்டி நோன்பிருக்கத் தீர்மானித்து, அதற்குத் தங்கள் கணவரிடம் போய் மனக்குறையைத் தெரிவித்து அவரின் உத்திரவைக் கோரினர். சிவருத்ரர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கினர். பல தத்துவோபதேசங்கள் செய்து அவர்களை ஆசீர்வதித்தார்.

மூவரும் பக்தி சிரத்தையுடன் விரதமிருந்து, தங்கள் குறை தீர்க்கும்படி இறைவனை வேண்டிப் பூஜித்தனர்.

அவர்களின் பக்தி பூர்வமான வேண்டுகோளுக் கிரங்கிய இறைவன் நேரில் காட்சியளித்து, "சற் புத்திரர்களைப் பெற்றுப்பெருகி பெருவாழ்வு வாழக்கடவீர்" என்று ஆசீர்வதித்து மறைந்தருளினர். அவ்வாறே அம் மாதர்கள் மூவரும் கருவுற்று, உரிய காலத்தில் புத்திரரைப் பெற்றெடுத்தனர். பாணகுல வித்வான் பண்டித சாமியின் குமாரியான கண்டிகையாளின் குழந்தைக்குத் தருமகூத்தன் எனவும், வணிகர் குலச் சீமான் தத்தன் செட்டியாரின் குமாரியான உமையாளின் குழந்தைக்குத் தருமன் எனவும், சூரியகுல மன்னர் நள்ளியரசரின் குமாரியான தத்தையாளின் குழந்தைக்குக் கலுழன் எனவும் பெயரிட்டுச் சிவருத்ரர் விழாக்களை வெகு சிறப்பாக நடத்தினர். மறு வருடம் மாதர் மூவரும் மறுபடியும் கருப்பம் தரித்து பூரணச்சந்திரன் போலவும், லக்ஷிமி போலவும் சரஸ்வதி போலவும் தேஜஸுடன் விளங்கிய மூன்று பெண் மக்களைப் பெற்றெடுத்தனர். கண்டிகையாளின் குழந்தைக்குக் காந்திமதி யெனவும், உமையாளின் குழந்தைக்கு மந்திரை யென்வும், தத்தையாளின் குழந்தைக்குச் சுதை யெனவும் பெயரிட்டு, அவ் வைபவத்தை வெகு சிறப்பாக நடத்தினர். சிவருத்ரரின் ஒன்பது குழந்தைகளும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்தனர். இளம் பிராயத்திலேயே தக்க ஆசிரியர்களைக் கொண்டு, அவர்களை ஒரே இடத்தில் கல்வி பயிலும்படி செய்தார். அவர்கள் சங்கீதம், நாட்டியம், சித்திரம், யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை. முதலிய சகல கலைகளிலும் வித்தைகளிலும் தேர்ச்சி பெற்று வந்தனர். அன்பும், அறிவும், அழகும், ஒழுக்கமும், தகவலிமையும் உடையவர்களாய் விளங்கினர்கள். பத்து வருடங்கள் கழிந்தன. மக்கள் குழந்தைப் பருவம் தாண்டி யௌவனப் பருவம் அடைந்தனர்.

## அத்தியாயம் 8. (செய்யுள் 106—122)
## சிவருத்ரர் தமது மனைவிகளுக்கு இல்லம் வகுத்தலும், அவரது முதற் புதல்வனின் துறவறமும்.

மதியம்மாளின் சுற்றத்தாரான பூமிபாலர்கள் சிவருத்ரரிடம் வந்து வணங்கி, "அரசே! தங்களுடைய மக்கள் தற்போது மணப்பருவம் அடைந்திருக்கின்றனர்; ஆகவே, தங்களுடைய பராக்கிரமம் பொருந்திய ஆண் மக்களுக்கு எங்கள் பெண் மக்களையும், எங்களுடைய குல சிரேஷ்டர்களின் புதல்வர்களுக்குத் தங்களின் சுந்தரக் குமாரிகளையும் மணமுடிக்க இசையவேண்டும்" எனச் சலுகை பாராட்டி வேண்டி நின்றனர். அதற்குச் சிவருத்ரர், "பூமிபாலரே! எமது அபிப்பிராயம் என்னவென்று தெரிந்துகொள்ளாமலேயே நீங்கள் கொண்டு மாற்றுச் சம்பந்தங்கள் பேசத் தொடங்கிவிட்டீர்கள்; எந்தக் குடும்பத்தினின்றும் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற பெண்களை எடுத்துக்கொள்வோம்; ஆனால் எமது பெண்களை நீங்கள் கேட்கிறபடி கொடுக்க முடியாது" என்று கூறினார். இதைக் கேட்ட பூமிபாலர் வியப்படைந்து, "நீதிமானாகிய தாங்கள் சொல்லுவது விசித்திரமாயிருக்கிறதே! எங்கள் குடும்பத்திலிருந்து தாங்கள் பெண்ணெடுத் திருக்கிறீர்களே; மேலும் எங்கள் குலப் பெண்களைத் தங்கள் குமாரர்களுக்கு விவாகம் செய்து கொள்ளவும் சம்மதிக்கிறீர்கள்; தங்களுடைய பெண்களை மட்டும் எங்கள் குடும்பத்தில் கொடுக்க மறுப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினார்.

சிவருத்ரர் அவர்களை நோக்கி, "பூமிபாலர்களே! அக்கினிச் சுடராக விளங்கும் தெய்வ குலப் பெண்களை வேறு எக்குலத்திலும் கொடுக்கக் கூடாது; அது எமது முன்னோரின் வழக்கத்திற்கு விரோதம்" என்று கூறவே, அவர்கள் நகைத்து, கூட்டமாகத் தஞ்சை நகர் சென்று;

நள்ளியரசரிடம் முறையிட்டனர். பூமிபாலர் கூறியதைக் கேட்டு நள்ளியரசர், சிறுவைக்கு வந்து சிவருத்ரரைப் பார்த்து, "அன்பார்ந்த மருகரே! பூமி பாலர்கள் கூறுவதில் நியாயமில்லையா?" என்று கேட்டார். அதற்குச் சிவருத்ரர், "அரசே! எமது மூதாதையருக்கு நிகர்த்த பரிசுத்தமான தெய்வ குலத்திலேயே எமது பெண்களைக் கொடுக்கலாம்; அனலேறிய இரும்பைப்போன்று அக்கினிச் சுடராக விளங்கும் தெய்வகுலப் பெண்களைப் பழைய இரும்பென்றெண்ணித் தீண்ட நினைத்தால் சுட்டுவிடும்" என்று கூறினர். பூமிபாலருக்கு அதை நன்கு அறிவிக்கும்படி அரசர் சொல்லவே, சிவருத்ரர் அவர்களை நோக்கி, "பூமிபாலரே! எமது மூதாதைகளான பரமசிவன், மகாவிஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர் ஆகியவர்கள் பெண்கள் எடுத்திருப்பதன்றி இவ்வுலகில் யாருக்கும் பெண் கொடுத்திருப்பதாக நிரூபிக்கமுடியுமா? ஆகவே அந்த ஒழுங்கை நான் எவ்வாறு மீற முடியும்?" என்று கூறவே, நள்ளியரசரும் அதை ஆமோதித்தார். பூமிபாலர்கள் திருப்தி யடையாதவர்களாய், வீம்பு வார்த்தைகள் பேசிக்கொண்டு, தம் இருப்பிடம் திரும்பிச் சென்றனர்.

பின்னர் சிவருத்ரர் தமது அரண்மனையை ஐந்து பாகங்களாக்கி, நடுப்பாகத்தில் தாமும் தம் தாயாருமாக வசித்துவந்தனர். மற்றை நான்கு பாகங்களையும் வரிசைக் கிரமமாக தமது நான்கு மனைவியருக்கும் கொடுத்து, அவர்கள் தத்தம் பிள்ளைகளுடன் அந்தப் பாகங்களில் தனித் தனியே வசித்துவர ஏற்பாடு செய்தார். மறையோர், பெரியோர்களைக் கூட்டி வேள்வி வளர்த்து, தமது மனைவி மக்களைத் தம் அருகிலமர்த்தி, சபையோருக்கு வணக்கம் தெரிவித்து, தமது மைந்தரும் வணங்கும்படி செய்தார். பின்னர் மனைவியரின் தாரதம்மியங்களைக் காரணமாகக் கொண்டு நான்கு இல்லம் வகுத்தார்.

கண்டிகையாள் குடும்பத்திற்கு ஆதிமூடு என்ற காரணங்கொண்டு அவள் வீட்டிற்கு (மூடு இல்லம்) மூட்டில்லம் எனவும், உமையாள் மஞ்சக்குப்ப நாட்டினளாதலாலும், சுபகாரியங்களில் மஞ்சளையே பிரதானமாக எடுத்துக் கொள்ளும் வணிகரின் குமாரியானதாலும், அவளுடைய வீட்டிற்கு மஞ்சநாட்டு இல்லம் எனவும், தத்தையாள் அரசகுமாரியானதாலும், அவள் வசித்து வந்த பளிங்கு மாளிகையிலேயே தமது குடும்ப வாழ்க்கை ஆரம்பமான படியாலும், அவளுடைய வீட்டிற்குப் (பளிங்கு இல்லம்) பளிக்கில்லம் எனவும், உமையாள் சோழ நாட்டுப் பூமி பாலர் வம்சத்தவளானதாலும், அவர்களின் உழுபடைக் கருவிகளின் பெயரைக் காரணமாகக் கொண்டும் அவளுடைய வீட்டிற்குச் சோழி இல்லம் எனவும் பெயரிட்டார். அங்கு குழுமியிருந்த மறையோர் பெரியோர் சிவருத்ரரின் அறிவைக் கண்டு மெச்சினார்கள்.

சிவருத்ரர் தம் மனைவிகளுக்குப் பிரம ஞானோபதேசம் செய்தார். அதில் அவர்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேள்விகள் கேட்கலாம் என்றும் சொன்னார். நான்கு மனைவியரும் முறையே நான்கு கேள்விகள் கேட்டனர். "உத்தமர்களுக்குத் துன்பங்கள் ஏன் நேரிடுகின்றன? விதி எத்தன்மையது? கடவுள் ஏன் பல நாமங்களால் அழைக்கப்படுகிறார்? இல்லறம் மேலா, துறவறம் மேலா?" என்பதைப் பற்றிக் கேள்விகள் கேட்கவே, சிவருத்ரர் அக் கேள்விகட்கெல்லாம் திருப்திகரமாகப் பதிலளித்தார். சபையின் பெரியோர்களும், அறிஞர்களும் அவரது ஞானத்தையும், திறமையையும் பாராட்டினர்.

துறவறத்தின் மகிமையைக் கேள்வியுற்ற உமையாளின் ஜேஷ்ட புதல்வனான இராவணன், இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து, துறவறம் மேற்கொள்ளத் தீர்மானித்தான். அவன் தன் தந்தையாரிடம் சென்று, " பிதாவே! என் மனம் பேரின்பத்தையே நாடுகிறது; நான் துறவறம்

பூண்டு, தபோ முனிவர் வாழும் தண்டகாரண்யம் செல்ல விரும்புகிறேன்; ஆசி கூறி எனக்கு அனுமதி தரும்படி பிரார்த்திக்கிறேன்" என்று கூறினான். சிவருத்ரர் மைந்தனுடைய மனோ நிலைமையை யறிந்து, அவனைத் தடுப்பதில் பயனில்லையென்று கண்டு அவனுடைய விருப்பத்திற்கிணங்கினார். இராவணன் பெரியோரை வணங்கி, அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு நாட்டை விட்டுத் தபோ வனம் சென்றான். பல தினங்கள் காடெங்கும் அலைந்து கடுவழி நடந்து கடைசியில் முனிவர்கள் வசிக்கும் நகுங்காவனம் என்னும் தண்ட காரண்யம் அடைந்தான். அங்கு முனிவர் பெருமானாகிய பிருகு ரிஷியின் ஆசிரமத்தை அடைந்து அவரது பாத கமலங்களில் விழ்ந்து வணங்கினான். முனிவர் பெருமான் அவனுடைய தோற்றத்தை யறிந்து நல்வரவு கூறி அவன் அங்கு வந்த காரணத்தை வினவினார். இராவணன் விவரமாகத் தன் பிறப்பு விருத்தாந்தங்களைக் கூறிப் பின்னர், "என் மனம் அழியாப் பேரின்பத்தையே நாடுவதால், நான் கடைத்தேறும்படியாக உபதேசித் தருளும்படி வேண்டுகிறேன்" என்றான்.

அம் முனிவர் பெருமான் மனமுவந்து அவனை அருகிலமர்த்தி, அவனுக்கு 'ஓம்: நமசிவாய' எனும் பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசித்தருளினார். தவம் செய்யும் முறைகளையும், அதற்கேற்ற இடத்தையும் எடுத்துரைத்தார். நான்மறையும் உணர்ந்த பிருகு ரிஷியானவரின் உபதேசம் பெற்ற இராவணன், சாக்ஷாத் பரமசிவனே தனக்கு உபதேசித்தருளியதாக மனமகிழ்ந்து, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, தேன் மலர்ச் சோலை செறிந்த நைமிசாரண்யம் நோக்கிச் சென்றான். மனோரம்மியமான ஓர் இடத்தை யடைந்து, யோகாசனத்திலமர்ந்து, கண்மூடி மௌனியாகி, பசுபதியிடம் பக்தி பூண்டு பல காலம் தவம் புரிந்தான். இறைவன் அவன் பக்தியை மெச்சிக்

காட்சி யளித்து, 'என்றும் அழியாப் பேரின்பத்தை அடைவாயாக' என்று ஆசிகூறி மறைந்தருளினர். ஈசுவரனைக் காணப்பெற்ற இராவணன், ஆனந்த வாரிதியில் மூழ்கினன். இறைவ னருளால் நான்கு சாதனங்களும் அடையப் பெற்ருன். அகப் புறப் பற்றும் ஜீவப் பிராந்தியும் நசித்தன. ஒப்புவமை யில்லாத தேஜோ மயமாய் சுக வடிவாய் நீவாத தீபம்போல் நிலைபெற்று விட்டான்.

## அத்தியாயம் 9. (செய்யுள் 123 - 133)

## சிவருத்ரரின் குல உற்பத்தி உபதேசமும், அவரது மக்களின் திருமணங்களும்.

சிலகாலம் சென்ற பின்னர், சிவருத்ரர் ஓர் வேள்வி நடத்தினர். அதற்கு நள்ளி யரசரும், சிறுவை நாட்டுப் பிரமுகர்களும், மறையோர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். சிவருத்திரர் ஆண் மக்கள் நால்வரையும் தமது வலது பக்கத்தில் இருத்தி, அவர்களுக்கு நேர் எதிராக நான்கு பெண் மக்களையும் மிகப் பொருத்தமான முறையில் இருக்கச் செய்தார். பெண் மக்களுக்குப் பின்னுல் அவரவர்களின் அன்னையர்கள் அமர்ந்திருந்தனர். மக்களுக்கு இல்லற தர்மத்தைப்பற்றி எடுத்துரைத்தார். பதிபக்தி, சதிபக்தி என்னும் தத்துவத்தை விளக்கிக் காட்டினர். பெண்களைப்போலவே ஆடவரும் கற்பில் சிறந்து ஒழுகவேண்டுமெனக் கூறினர். ஸ்திரீகளுக்கும் ஆடவரைப்போலவே கல்வி மிகவும் அவசியம் என்பதை உணர்த்தினர்.

பின்னர் தமது மக்களை நோக்கி, "அருமை மக்களே! இன்று உங்கள் மூலமாக ஒரு தனிச் சமுதாயம் சிருஷ்டிக்கப்போகிறேன்; அதுவே எமது விருப்பமும் நோக்கமுமாகும்; உங்களை விவாகம் செய்து கொள்ளக்கூடியத் தகுதி வாய்ந்த தேவ குலத்தவர் இங்கு கிடைப்பது அரிது; அதற்காகவே உங்களை அவரவர் அன்னையாருடன் தனித்தனிக் குடும்பமாக வெவ்வேறு இல்லங்

களில் வாழும்படி செய்திருக்கிறேன்; ஆகவே, நீங்கள் தன்னில்லம் நீக்கிப் பிற இல்லங்களில் உங்கள் மனதிற்கிசைந்தபடி ஸ்திரீ புருஷர்களைத் தெரிந்து மணஞ்செய்து கொள்ளவேண்டும்; இதற்கு உங்களின் மனப்பூர்வமான சம்மதத்தை எதிர்பார்க்கிறேன்" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் கண்டிகையாளின் குமாரனை தருமகூத்தன் எழுந்து நின்று வினய பூர்வமாகப் பிதாவை வணங்கி, "தந்தையே! ஒரு தகப்பனுக்குப் பிறந்த ஆணும் பெண்ணும் காதலனும் காதலியுமாக வாழலாமென்று தர்ம சாஸ்திரங்களில் எங்காவது கூறப்பட்டுள்ளதா? அச் செய்கையை உலகம் பழிக்காதா? ஆகவே, அக்காரியத்திற்கு என்னை வற்புறுத்தாதிருக்க வேண்டுகிறேன்" என்று கூறினான். (படம் 7.)

அப்பொழுது சிவருத்ரர் அவனை உட்காரச் சொல்லி, "தருமகூத்தனே! மக்களே! கேளுங்கள்; நதி மூலமோ ரிஷி மூலமோ விசாரிக்கக் கூடாதென்பார் பெரியோர்; அவற்றின் உற்பத்தி ஸ்தானங்களை ஆராய்வது அனாவசியம்; ஆரம்பத்தில் அசுத்தமான சதுப்பு நிலத்தில் உண்டான சிற்றூரல்தான் கடந்து செல்லச் செல்ல ஸ்படிகம் போன்ற தெண்ணீர் நிறைந்த பரிசுத்த நதியாக விளங்குகிறது; அதுபோலவே, இன்று எம்மால் ஆரம்பிக்கப்படும் தனிச்சமுதாயம் உங்களுக்குத் தற்போது உவர்ப்பாகத் தோன்றலாம்; அடுத்த தலைமுறையிலிருந்து அதன் பெருமை வெளிப்படும்; பிரமதேவன் ஆதியில் உலகைச் சிருஷ்டித்தபோது ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாகவே சிருஷ்டித்தான்; இன்று உலகத்தில் காணப்படும் ஏராளமான குலங்கள்டங்கிய மானிடவர்க்கம் அவர்கள் இருவரின்மூலமாகவே ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு குல உற்பத்தியின் மூலத்தையும் ஆராய்ந்துபார்த்தால் அதன் ஆதி பிதா ஒருவர் தான் ஏற்பட்டிருப்பதாகச்

சரித்திரங்கள் கூறுகின்றன; மேலும், உங்களால் சிற்றன்னை பெரியன்னை என்று அழைக்கப்படுகிற இந் நான்கு ஸ்திரீகளும் கூடிப்பிறந்த சகோதரிகளல்ல; வெவ்வேறு குலத்தைச் சார்ந்தவர்களல்லவா? சம்பந்தங்களில் ஸ்திரீகளின் வழி வம்சம் கிளை கோத்திரம் என்பவைகளைத்தான் முக்கியமாகக் கவனித்தல் நலமென்றும், புருஷ குலங்களைப்பற்றி விசேஷித்துச் சிந்திக்கவேண்டியதில்லை எனவும் ஆகம சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. மழை ஜலம் ஒரே நிறமாயிருந்தாலும் அது விழுகின்ற நிலத்தைப் பொறுத்து அதன் நிறமும் மாறுவது போன்று, நீங்கள் எனக்குப் பிறந்த பிள்ளைகளாயினும் உங்கள் தாய்மார்களின் தன்மையைப்பற்றி வேறுபட்ட குணநலம், ரூபலாவண்யம் ஆகியவைகளுடன் விளங்கிக்காணப்படுகிறீர்களல்லவா? அறுசுவை பதார்த்தங்களும் ஒரே பூமியில் உண்டானாலும், ஒரே தண்ணீரில் சமைக்கப்பட்டாலும், தாவரங்களின் தன்மையைப் பொறுத்து அவற்றிற்கு வெவ்வேறு சுவையும் குணமும ஏற்படுகிறது போன்று, என்னால் உற்பத்தி செய்யப்பட்ட நீங்களும் உங்கள் தாய்மார்களின் வேற்றுமையால் வெவ்வேறு தன்மையுடையவர்களாய்த் திகழ்கின்றீர்கள்; தவிரவும், தாய்மார் என்று சொல்லிக் கொள்கிற இந் நால்வரையும் ஒருவரையொருவர் அறியாத வேற்றிடங்களில் நான் வாழும்படியாகச் செய்து இன்றுதான் முதல் தடவையாக உங்களுக்குள் சந்திப்பு ஏற்படச் செய்திருந்தால், ஸ்திரீ புருஷர்களாகிய உங்களுக்குள் இயற்கையாகவே என்னுடைய தூண்டுதல் இல்லாதபடி காதல் ஏற்பட்டிருக்குமன்றோ? மேலும், இன்று உங்களுக்குள் வகுக்கப்பட்ட இல்லங்களுக்குள் மாற்றுச் சம்பந்தங்கள் செய்துகொள்ளாமல், வேறு குலங்களில் தற்போது சம்பந்தம் செய்துகொள்ளும்படி ஏற்படுமானால், எமது குலத்தின் தனிப் பெருமை எவ்வாறு விளங்கும்? அதன்

முக்கியத்துவத்தை நீங்கள் சிந்தனை செய்து பார்க்க வேண்டியது அவசியமல்லவா? ஆகவே, உண்மை உணர்ந்து குலவிருத்தியையும், பெருமையையும் எண்ணி, தன்னில்லம் நீக்கிப் பிற இல்லங்களில் மனதிற்கிசைந்த காதலிகளைத் தேர்ந்து கொள்ளுங்கள்; அல்லது இன்னமும் சந்தேகம் இருந்தால் கேளுங்கள்; அதற்குத் தக்க சமாதானம் கூறுகிறேன்'' என்று உரைத்தார்.

அவரது பேச்சைக் கேட்ட சபையோர் அனைவரும் அவர் சொல்வது சரியென்பதாக ஒப்புக்கொண்டனர். மனைவி மக்களின் கருத்திலும் அது சரியெனப்பட்டது. மறுத்துப்பேச அவர்களுக்கு யாதொரு காரணமும் புலப் படவில்லை. தருமகூத்தன், தான் அறியாமற் கூறியதைப் பொறுத்தருளும்படி தந்தையை வேண்டினான்.

பின்னர் மூட்டில்லத் தருமகூத்தன் சோழியில்ல இந்திரையையும், மஞ்ச நாட்டில்லத் தருமன், மூட்டில்லக் காந்திமதியையும், பளிங்கில்லக் கலுழன் மஞ்சநாட்டில்ல மந்திரையையும், சோழியில்ல இலவன் பளிங்கில்லச் சுதையையும் தெரிந்து கொள்ளவே, அக்கணமே நிச்சயதார்த்தம் நடைபெற்றது. குறிப்பிட்ட முகூர்த்தத்தில் திருமண வைபவங்கள் சிறப்பாக நடைபெற்றன. ஊர்வலங்களும் வெகு ஆடம்பரமாக நடந்தேறின. பவனி வைபவத்தில் சிவருத்ரர் யானைமீதேறி முன் செல்ல, தம்பதிகள் நால்வரும் முத்துச் சிவிகைகளில் அமர்ந்து, ராஜமேளங்களும் நடன கீதங்களும், வாண வேடிக்கைகளும் மக்களை மகிழ்விக்க வெகு ஆடம்பரமாக ஊர்வலம் நடைபெற்றது.

பின்னர் நள்ளியரசர் யாவரையும் தஞ்சை நகருக்கு அழைத்துச்சென்று, ராஜோபசாரங்களுடன் வரவேற்று விருந்துகள் செய்து, நகர்வல விழாவையும் வெகு சிறப்பாக நடத்திவைத்தார். ஏராளமான வெகுமதிகள் அளிக்கப்பட்டன. சிலநாட்கள் தஞ்சையில் தங்கிய பின்னர்

யாவரும் சிறுவை நகர் திரும்பி வந்தனர். மணமகன் இல்லத்தில் மணமகள் வாழும்படிச் சிவருத்ரர் ஏற்பாடு செய்தார். பிள்ளைகள் யாவரும் சகல கலைகளிலும் கல்வி கேள்விகளிலும் தேர்ச்சியடைந்து படைக்கலப் பயிற்சியும் பெற்று, முருகனைப் போன்ற வீரர்களாகப் புகழ்பெற்று விளங்கி வந்தனர்.

பொறாமைகொண்ட பூமிபாலர் சிவருத்ரர்மீது குற்றஞ் சாட்டி அவரை அவமானப்படுத்த எண்ணினர். தாழ்ந்த குலத்தவர்கூடச் செய்யத்துணியாத, சாஸ்திர விரோதமான காரியங்களைச் சிவருத்ரர் செய்து விட்டதாக நள்ளி யரசரிடம் சென்று முறையிட்டனர். நள்ளியரசர் அவர்களை நோக்கி, "பூமிபாலரே! எல்லாம் தெரிந்த அறிஞர்களாயிருந்தும், அறிவிலிகளைப்போல நடக்கிறீர்களே; சிவருத்ரரின் உபதேசங்களைக் கேட்டபின்னரும் அவர்மீது பழி சுமத்துவது அழகல்ல; தெய்வ குலத்தவரான சிவருத்ரர்மீது குறை கூறுவது பாவம்; ஞானவானாகிய அவரைச் சற் குருவாக மதித்து நடப்பதே உங்களுக்கு நன்மை பயக்கும்" என்று வேத நூல்களிலிருந்து நீதி நெறி ஒழுங்கங்களைப் புத்திமதியாகக் கூறியனுப்பினர். தங்களுடைய முயற்சி வெற்றி யடையாதது கண்டு ஏமாற்றம் அடைந்த பூமிபாலர்கள் நள்ளியரசரை நமஸ்கரித்து முகவாட்டத்துடன் தம் ஊர் திரும்பினர். நாடு செழிக்க, நல்லறம் ஓங்க, மக்கள் மனம் மகிழ, சீரும் சிறப்புடனும் சிவருத்தரர் செங்கோல் செலுத்தி வந்தார். நல்லாட்சிக்கு அடிப்படையான நிலம், குடி, படை, உணவு, அமைச்சு, நட்பு ஆகிய ஆறு நலங்களும் அந் நாட்டில் அமைந்திருந்தன. இவ்வாறு சிறுவைப் பிராந்தியம் இந்திரலோகம்போல் பெருஞ் சிறப்புற்று விளங்கியது.

## அத்தியாயம் 10. (செய்யுள் 134--144)

## ஈழ நாட்டில் காளகேது மன்னரின் அரசாட்சியும், அவரது புதல்வியின் சுயம்வரமும்.

ஈழநாட்டில் சிவருத்ரர் ஒரு வயதுப் பாலகனாய் இருந்த காலத்தில் அவரது தந்தையான வீரபத்திரர் ஓர் நடுச் சாமத்தில் துறவறம் பூண்டு அரண்மனையிலிருந்து கயிலையை நோக்கி வெளிக் கிளம்பினர் (படம்2,) அதைக் கண்ணுற்ற கயல்மணிதேவி, கையில் குழந்தையுடன் அக்கணமே அரண்மனை துறந்து கணவரைப் பின்தொடர்ந்தாள்.

கயல்மணிதேவியும் அவளது குழந்தையும், கணவரும் நள்ளிரவில் காணமற்போனதால், இராமராஜர் அருமணி யிழந்த நாகம்போல் மிகத்துயருற்ருர். எட்டுத் திக்கிலும் தூதுவர்களை அனுப்பியும், யாதொரு தகவலும் கிட்டவில்லை. புத்திரியைப் பிரிந்த சோகத்தால் மனமுடைந்த இராமராஜர், இவ்வுலக வாழ்க்கையை நீத்து விண்ணுலகடைந்தார். இராமராஜரின் ஏகபுதல்வரான காளகேது மன்னர் ஈழ நாட்டின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்தி வரலானர். அவர் தமக்குப் புத்திரப் பேறில்லாக் குறையை எண்ணி, இராஜ்யபாரத்தைப் பிரதம மந்திரியிடம் ஒப்படைத்து விட்டுத் தமது மனைவியுடன் கானகத்திற்குச் சென்று, கந்த மூலாதிகளைப் புசித்துக் கடுந்தவம் புரிந்தனர். ஸ்ரீமந்நாராயணனாகிய மகாவிஷ்ணுவைப் பிரார்த்தித்துத் தமக்கு ஓர் குழந்தையை அளிக்கும்படி வேண்டினர். அவர்களது பக்திக்கிரங்கி மகாவிஷ்ணு பிரத்தியக்ஷமாகி, "சகல லக்ஷணங்களுடனும் கூடிய ஓர் பெண் மகவைப் பெறுவீர்" என்று வரமளித்தார்.

கடவுளின் ஆசீர்வாதம் பெற்ற காளகேது அரசர், அரண்மனை திரும்பி மனமகிழ்ச்சியுடன் இராஜ்யபாரம் நடத்தி வருங்காலையில் அவருடைய மனைவி கருப்பமுற்று

உரியகாலத்தில் சகல சாமுத்ரிகா லட்சணங்களுடன் கூடிய ரதிபோன்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அருந்தவப் பயனாய்க் கிட்டிய அக்குழந்தைக்கு மித்திரசேனை என்னும் நாமம் இடப்பட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த அப்புதல்வி விவாக வயதை அடைந்தாள். சகல கலா வல்லவளான அந்நங்கைக்கு ஏற்ற வரன் கண்டு பிடிப்பது காளகேது அரசனுக்குக் கஷ்டமாயிருந்தது.

ஆகவே மித்திரசேனைக்குச் சுயம்வரம் நடத்தி அவளுக்குத் தகுந்த கணவனை அவளே தேர்ந்தெடுத்துக் கொள்ளச் செய்யவேண்டுமென்று அரசர் விழைந்தார். பரத கண்டத்திலுள்ள ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களுக்கும் சுயம்வர அழைப்பு அனுப்பப்பட்டது. சுயம்வரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றன. நள்ளியரசரும், சிவருத்ரரும், ஏனைய தேசத்திலுள்ள மன்னர்களும் குறிப்பிட்ட தினத்திற்கு முந்தியே தங்கள் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தனர். பெரியோர்களும், மறையவர்களும், மகரிஷிகளும் விஜயம் செய்திருந்தனர். காளகேது மன்னர் அவர்கள் யாவரையும் தக்க மரியாதையுடன் வரவேற்றுத் தனித்தனி ஜாகைகளில் அமர்த்தி வேண்டிய உபசாரங்கள் செய்வித்தார். நகரத்தின் வீதிகளெல்லாம் மகர தோரணங்களாலும், பச்சிலைகளாலும், பந்தல்களாலும் அலங்கரிக்கப்பட்டு இந்திரலோகம்போல் விளங்கியது. தங்கத்தாலும், நவரத்னங்களாலும், பட்டுப் பீதாம்பரங்களாலும் அலங்கரிக்கப்பட்டச் சுயம்வர மண்டபம் இந்திரன் சபையை நிகர்த்திருந்தது. சுயம்வர தினத்தன்று அதிகாலையிலே வந்துசேர்ந்த விருந்தினரைக் காளகேது மன்னர் ராஜோபசாரங்களுடன் வரவேற்று, அவரவர்க்குரிய ஆசனங்களிலமர்த்தினார்.

குறிப்பிட்ட சுப முகூர்த்தத்தில் மித்திரசேனையாள் மின்னொளிபோன்று அரண்மனை அந்தப்புரத்திலிருந்து முத்துரத்னக் கற்கள் இழைத்த பொற்சிவிகையில் சுயம் வரமண்டபத்திற்கு வந்திறங்கினாள். ரதியைநிகர்த்த அழகுடன் விளங்கிய மித்திரசேனை திவ்யாபரண பூஷிதையாய்ப் பட்டுப்பீதாம்பரங்களையுடுத்தி, முத்தாபரணங்கள் அணிந்து, அன்னம்போன்று மெதுவாக அடிமேலடி வைத்துச் சேடியர் புடைசூழச் சுயம்வரமண்டபத்தினுள் பிரவேசித்தாள். கோடி சூரியப் பிரகாசம்போன்ற அதி சோபையுடன் ஜொலித்த சுயம்வரமண்டபத்தில் கூடியிருந்த மன்னர்கள் வைத்தகண் மாறாமல் அரசகுமாரியை பார்த்துக்கொண்டிருந்தனர். சேடியர்கள் மித்திரசேனையின் கையில் தோரண மணமாலையைக் கொடுத்து வரிசைக் கிரமமாக ஒவ்வொரு அரசரின் முன்னின்று அவரவரின்பிரதாபங்களையும் குணவிசேஷங்களையும் எடுத்துக் கூறினர். அவைகளைச் செவியில் ஏற்றுக்கொள்ளாது மான்போன்ற தன் விழிகளால் சபாமண்டபத்திலுள்ள அனைவரையும் உற்று நோக்கினாள். அவளது திருஷ்டி சிவருத்ரரின்மேல் விழுந்தது. சிவருத்ரரும் மித்திர சேனையின் பேரெழிலை உற்று நோக்கினார். கண்ணொடு கண் நோக்க இருவருக்குமிடையே காதல் ஜெனித்தது (படம் 9.) தன் கையிலிருந்த தோரண மணமாலையை மித்திரசேனை சிவருத்ரரின் கழுத்தில் அணிவித்து நாணத்தால் தலைகுனிந்து நின்றாள். மங்கையர் மங்கள கீதம் பாடினர். மறையவர் வேதம் ஓதினர். காளகேது மன்னர் மனமகிழ்ச்சி கொண்டார்.

ஏமாற்றமடைந்த ஏனையதேசத்து மன்னர்கள் அதிக கோபத்துடன் சபா மண்டபத்தினின்றும் வெளியேறி சிவருத்ரரைப் போருக்கு வரும்படி அழைத்தனர். சிவருத்ரர் மித்திரசேனையைச் சிவிகையில் ஜாக்கிரதையாக ஏற்றி அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு, காளகேது

மன்னரையும், மறையோர் பெரியோரையும் அடிவணங்கி ஆசீர்வாதம் பெற்றூர். பின்பு வெஞ்சினங் கொண்ட புலிபோன்று சிவருத்ரர் வீராவேசத்துடன் வெளியே சென்றுமாதவன் அளித்த மந்திர வாளைக் கையிலேந்தித் தம்மை எதிர்த்த மன்னர் குழாத்தைத் தாக்கினூர். சிங்கத்தைக் கண்ட ஆடுகள்போன்று, அவ் வரசர்களும் அவர்களின் சேனுவீரர்களும் ஓட்டமெடுத்தனர். அதைக் கண்ட சேர சோழ பாண்டிய மூவேந்தர்கள் மற்ற வேந்தர்களைக் கடிந்து, போரை நிறுத்திச் சிவருத்ரரைச் சமாதானப்படுத்தினூர்கள். சிவருத்ரரின் போர்த்திறமையைச் சபையோருக்கு எடுத்துரைத்து, "தெய்வாம்சம் பொருந்திய சிவருத்ரருடன் போர்புரிவது புத்திசாலித்தனமல்ல" என்று கூறிப் போரில் சம்பந்தப்பட்ட மன்னர்களை அவரிடம் மன்னிப்புக் கோரும்படி செய்தனர். பெருந்தன்மை வாய்ந்த சிவருத்ரர் அதனைப் பொருட்படுத்தாது அவர்கள் யாவருடனும் நட்புச் செய்துகொண்டார்.

மித்திரசேனைக்கும், சிவருத்ரருக்கும் அச் சபாமண்டபத்தில்வைத்துத் திருமணவைபவம் யாதொரு விக்கினமுமின்றிச் சுபமாக நடந்தேறியது. விருந்தினர் யாவருக்கும் ராஜோபசாரத்துடன் நல்விருந்து அளிக்கப்பட்டது. ஏழைகளுக்கு அறுசுவை யுண்டியும், தான தர்மங்களும் செய்யப்பட்டன. திருமண வைபவங்கள் முடிவடைந்த பின் ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் தம்பதிகளுக்கு ஆசிகூறி விடைபெற்றுத் தத்தம் தேசங்களுக்குத் திரும்பிச் சென்றனர். சில தினங்கள்வரை சிவருத்ர தம்பதிகள் அந் நாட்டிலேயே தங்கிக் காளகேது மன்னரை மகிழ்வித்தனர். பின்னர் சிவருத்ரர் தமது தேசம் போக விடை கோரினூர். ஆனூல் அவர் தமது பெற்றோரின் பெயர்களைக் காளகேது அரசரிடம் தெரிவித்துக் கொள்ளவில்லை.

## அத்தியாயம் 11. (செய்யுள் 145 — 152)
## காளகேது அரசர் கயல்மணிதேவியைச் சந்தித்தலும், ஐந்தில்ல நிறைவும்.

காளகேது அரசர் மனவருத்தத்துடன் சிவருத்ரரைத் தழுவி, "அன்பார்ந்த மருகரே! ஆண் மகவில்லாத என் ராஜ்யத்தை ஆளத் தகுதியுடையவர் தாமேயன்றோ? ஆகவே, தாம் இங்கேயே இருந்து இந்த நாட்டின் ராஜ்ய பாரத்தை ஏற்று நடத்திவர வேண்டுகிறேன்; அதுவே எமது பிரஜைகளின் விருப்பமுமாகும்" என்று கேட்டுக் கொண்டார். சிவருத்ரர் தமது மாமனாரின் அடிபணிந்து, "மன்னர் மன்னரே! தாங்கள் கூறியது நியாயமே; ஆயினும், எனது நாட்டிற்கு நான் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன; அவைகளை நான் ஒழுங்குபடுத்தி விட்டு இவ்விடம் வருகிறேன்" என்று கூறவே, காளகேது மன்னர் அதற்கிசைந்து ஏராளமான சீர் வரிசைகளுடனும், பரிஜனங்களுடனும் மித்திரசேனையை அழைத்துக்கொண்டு, கப்பலில் ஏறிச் சிறுவை நாடு சென்றார். சிறுவை நாட்டு மந்திரி பிரதானிகள் காளகேது மன்னரையும், சிவருத்ர தம்பதிகளையும் அன்புடனும், ஆரவாரத்துடனும் வரவேற்றனர். அனைவரும் அரண்மனையை அடைந்ததும், கயல்மணிதேவியால் அன்புடன் வரவேற்கப்பட்டனர். தம்பதிகள் தேவியாரை அடிபணிந்துநின்றனர். அவள் அவர்களை ஆசீர்வதித்தாள். மற்ற நான்கு மாதரும் மித்திரசேனையை மிகக் கண்ணியமான முறையில் உபசரித்தனர்.

காளகேது மன்னர் கயல்மணிதேவியாரைக் கண்டுத் திகைப்புற்றார். காணாமற்போன தங்கையைத் திரும்பவும் கண்டதும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார். ஆனந்தக்

கண்ணீர் சொரிந்தார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? "தங்காய்! ஈசன் செயலை என்னென்று கூறுவது? புதையலெடுத்த தனம்போல, உன்னை மறுபடியும் காணப்பெற்றது என் பாக்கியமே; வீர சிங்கமாக விளங்கும் நினது குமாரனை எனது குமாரி மாலையிட்டதும் நாம் செய்த தவப்பயனே" என்று கூறினார். சகோதரனும் சகோதரியும் அதுவரை நடந்த விருத்தாந்தங்களை அளவளாவிப் பேசினார்கள். சில தினங்களுக்குப் பின் காளகேது மன்னர் எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு ஈழ நாடு திரும்பினார்.

சிவருத்ரர் தமது ஐந்தாவது மனைவியுடன் இன்பமாக நடு இல்லத்தில் இல்லறமென்னும் நல்லறம் நடத்தி வருங்காலையில் அவள் கருப்பந்தரித்துக் கோடி சூரியப் பிரகாசம் போன்ற ஓர் ஆண் மகவைப் பெற்றாள். கயல் மணிதேவியும், சிவருத்ரரின் மற்ற நான்கு மனைவியாரும் பேரானந்தம் அடைந்தனர். இரண்டாவது கருப்பத்தில் மாணிக்க விக்ரகம் போன்று ஓர் ஆண் குழந்தை பெற்றெடுத்தாள். மூன்றாவது பிரசவத்தில் அதி ரூபவதியான ஒரு பெண் குழந்தை பிறந்தது. மூன்று குழந்தைகளுக்கும் நாமகரண வைபவம் சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சிவருத்ரர் செய்தார். மருமகனின் அழைப்பைப் பெற்ற காளகேது மன்னர் தமது குமாரிக்கு அளிக்கவேண்டிய சீர் வரிசைகளுடனும் குழந்தைகளுக்கு அணிவிக்க வேண்டிய ஆடையாபரணங்களுடனும் கப்பலேறிச் சிறுவை நகர் வந்து சேர்ந்தார். காளகேது மன்னர் தமது ஜேஷ்ட பௌத்திரனுக்குப் புரந்தரசிங்கன் என்றும், கனிஷ்ட பௌத்திரனுக்குக் காரணச்சாமி என்றும், பௌத்திரிக்கு மதி என்றும் பெயரிட்டார். சில தினங்களுக்குப்பின் காளகேது மன்னர் தம் நாடு திரும்பினார்.

மற்ற நான்கு மனைவியாருக்கும் இல்லம் வகுத்துக் கொடுத்ததுபோன்று மித்திரசேனையின் இல்லத்துக்குத் தோரணத்தில்லம் என்ற பெயரைச் சிவருத்ரர் சூட்டினார். சுயம்வர மண்டபம் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்ததாலும், தோரணமாலையைத் தமது கழுத்தில் மித்திரசேனை அணிவித்துத் தம்மை மணந்துகொண்ட தாலும், தோரண இல்லம் என்ற காரணப் பெயர் அவள் இல்லத்திற்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு ஐந்து இல்லங்களும் பூர்த்தியடைந்தன. உரிய காலத்தில் குழந்தைகளுக்குச் சகல கலைகளும் கற்பிக்கப்பட்டன. அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண் ணமுமாக வளர்ந்து யௌவனப் பருவம் எய்தினர்.

## அத்தியாயம் 12. (செய்யுள் 153--176)

## புரந்தரசிங்கன் ஈழ நாட்டின் அரசனாதலும், நான்கு மக்களின் திக்கு விஜயமும்.

காளகேது அரசர் விருத்தாப்பியத் தசையடைந்து விட்டபடியால் சிறுவை நகருக்கு வந்து, ஈழ நாட்டை ஆளுவதற்குத் தமது பௌத்ரர்களில் ஒருவனைச் சுவீ காரமாகத் தரும்படி மருகரை வேண்டிக் கொண்டார். அவர் அதற்கிணங்கி, மித்திரசேனையின் இரு புத்திரரை அவர்முன் நிறுத்தினார். காளகேது மன்னர், தம் ஜேஷ்ட பௌத்திரனாகிய புரந்தரசிங்கனைச் சுவீகாரமாக எடுத் துக் கொண்டார் (படம் 9.) அனைவரும் புரந்தரசிங்க னின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக ஈழ நாடு சென்றனர். கயல்மணிதேவியார் தமது தாய் நாட் டைத் திரும்பவும் காணும் பாக்கியம் கிடைத்தபொழுது அவள் அன்றுஅடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ழ நாட்டு மக்கள் தங்கள் புதிய அரசரை அன்புடன்

வரவேற்றனர். மகுடாபிஷேக வைபவம் மங்களகரமாக நடைபெற்றது. அரசனுன புரந்தரசிங்கனுக்கு ஆசிகூறி அனைவரும் சிறுவை நாடு திரும்பினர். பின்னர் காளகேது மன்னர் புரந்தரசிங்கனிடம் ராஜ்யபாரம் முழுவதையும் ஒப்படைத்துவிட்டுத் தவக்கோலம் பூண்டு தபோவனம் சென்றுர். கந்த மூலாதிகளை யுண்டு கடுந்தவம் புரிந்து நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்தார். இயற்கை வளங்கள் நிறைந்த ஈழ நாட்டைப் புரந்தரசிங்கன் மனுநீதி தவருமல் திறமையுடன் ஆண்டுவந்தான்.

கண்டிகையாளின் குமாரி காந்திமதிக்கும், தத்தையாளின் புதல்வி சுதைக்கும் பிறந்த இரு பெண்கள் மங்கைப் பருவம் தாண்டி மணப் பருவம் அடைந்திருந்தனர். அவர்களை மணம் செய்துகொள்ளப் புரந்தரசிங்கனும் காரணச்சாமியும் விருப்பமுற்றிருந்தபடியால் சிவருத்ரர் அதற்கிசைந்தார். ஆகவே, புரந்தரசிங்கனுக்குக் காந்திமதியின் செல்வியையும் காரணச்சாமிக்குச் சுதை என்பவரின் மகளையும் தம்பதிகளாகத் திருமண வைபவங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. மித்திரசேனையின் மகளான் மதியம்மாளை இலவன் இரண்டாம் தாரமாக மணம் செய்துகொண்டான்.

இவ்வாறு மக்களுக்கெல்லாம் மணமுடித்து ஓர் தனிச் சமுதாயமாக ஆக்கிவைத்த பின்னர், சிவருத்ரர் ஒரு நாள் குடும்பத்தினர் யாவரையும் ஒன்றுகூட்டி நல்லுபதேசங்கள் செய்தார். 'அன்பே சிவம்,' 'ஜீவகாருண்யம்' என்னும் செம்பொருள் சித்தாந்தங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார். பிற்காலக் குடும்ப வாழ்க்கையைப்பற்றிய விஷயங்களில் பெண் மக்கள் மனதில் தோன்றிய பற்பல சந்தேகங்களுக்குச் சிவருத்ரர் தக்க பதிலளித்து அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்தார். இல்லற வாழ்க்கையில் ஸ்திரீகளின் பொறுப்பு, ஈசுவர வழிபாட்டில் அவர்களின் கடமை ஆகிய அரிய விஷயங்களைப்பற்றியும்

அவர் உபதேசித்தார். பின்னர் அவர்களைப் பிற தேசங்களில் சென்று குடியேறித் தங்களின் கலைத்திறனும், கல்வித்திறனும், நல்லுபதேசங்களும் உலகினருக்குப் பயன் படும்படியான நல்வாழ்க்கை நடத்தும்படி புத்தி புகட்டினார். தாம் காசி யாத்திரை சென்று, திருத் தலங்களைத் தரிசித்துவர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

அப்பொழுது தருமகூத்தன் தந்தையை யணுகி, தான் சேர நாடு சென்று வாழ்க்கை நடத்த விரும்புவதாகத் தெரிவித்தான். சிவருத்ரர் அதை ஆமோதித்து அவனுக்கு ஏராளமான திரவியமும் கொடுத்து ஆசீர்வதித்தார். அனைவரிடமும் தருமகூத்தன் தம்பதிகள் ஆசி பெற்றுச் சேர நாட்டின் தலை நகராகிய வஞ்சி மா நகர் சேர்ந்தனர். தருமகூத்தன் அரசர் சபாமண்டபத்திற்குச் சென்றான். மன்மதன் போன்ற கெம்பீரத் தோற்றத்துடனே தோன்றிய தருமகூத்தனைச் சேர மன்னன் "நீ யார்?" என வினவினர். "இந்திரலோகம் போன்ற தஞ்சாபுரியின் சூரிய குல அரச வம்சத்தாருக்கு யான் குலகுரு; என் பெயர் தருமகூத்தன்" என்றான். "அப்படியானால் ஈசனான பரமசிவன் வழியில் தோன்றிய சிவருத்ரருடைய குமாரனோ?" என்றார் சேர அரசர். அதற்குத் தருமகூத்தன், "ஆம்; முன்னாளிலே சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களோடும் போர் புரிந்து ஜெயங் கொண்ட சிவருத்ரரின் குமாரன் தான் யான்" என்றான். அதைக் கேட்ட சேர மன்னவன் அகமகிழ்ந்து அவனருகிற் சென்று, மாணிக்க ரத்னாபரணங்கள் அணிந்திருந்த அவன் கரங்கள் பற்றித் தழுவித் தமது வலப்பக்கத்தில் சிம்மாசனத்தில் அமர்த்தினார். "எம்மோடு சமாதானமாக இருந்து எமது ராஜ்யத்திலேயே வாழ்வீராக" என்று அரசர் கூறி, கொழுமம் என்ற ஊர் வட்டாரத்தையும் எல்லைவகுத்து அவனுக்குக் கொடுத்தார். தருமகூத்தன்

அங்கு சென்று மகா விசித்திரமாக மாடமாளிகை, கூட கோபுரங்கள் நிர்மாணித்து, மன்னர் குல மக்கட்குச் சகல கலைகளும் மற்றும் படைத்தொழில் வல்லபமும் கற்றுக் கொடுத்து, வெகு கம்பீரமாக வாழ்க்கை நடத்திவந்தான். சேர மன்னர் மனமகிழ்ந்து, அவனைத் தமது சேனைக்குத் தலைவனாக்கினர்.

அவ்வாறே தருமன் என்பவன் தன் குடும்பத்துடன் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுராபுரி போய்ச்சேர்ந் தான். பாண்டிய மன்னன் தருமனை நோக்கி "நீயார்?" என வினவினர். அதற்குத் தருமன், "புகழுறும் தஞ்சை மா நகரைச் சேர்ந்த சிறுகுடி என்பது என் ஊர்; முக்கண்ண னாகிய பரமசிவனின் புத்திரன் வீரபத்திரருடைய மைந்த னாகிய சிவருத்ரர் எனது பிதா; என் பெயர் தருமன்; படைத் தொழில் வல்லபம் யாவும் கற்றவன்; நுமது குல மக்கட்குக் குருவாக இருந்து சகல கலைகளும் கற்பிப் போம்" என்றான். அதைக் கேட்ட சந்திர குலத்து வழுதி மன்னன் அகமகிழ்ந்து நல்வரவு கூறி, அவன் நற்கரங்கள் பற்றித் தழுவி தம்முடன் சரிசமானமாக சிம்மாசனத்தில் அமர்த்தி, "எமது ராஜ்யத்திலே அன்போடுங்கூட வாழ் வீராக" என்று கூறி, ஆப்பனூர் வட்டாரத்தையும் எல்லை வகுத்து அவனுக்குக் கொடுத்தார். தருமன் அங்கு சென்று, சகல சுக போக பாக்கியங்களுடனும் வாழ்க்கை நடத்திவந்தான். சந்திர குலவம்சத்தின் நூற்றெட்டுச் சிறுவர்களுக்குச் சேந்தனுக் கொப்பான படைத் தொழில் வல்லபம் பயிற்றுவித்து, மதுரை மா நகருக்குக் கூட்டிவந்து, அரசர் கொலு மண்டபத்தில் மகா சபையின்முன் தான் கற்பித்த கலைகளையெல்லாம் அரங்கேற்றிக் காண்பித்தான். அதைக் கண்டதும், பாண்டிய அரசன் அளவில்லா மகிழ்ச்சியடைந்து, மதுரை மா நகரத்தில் அவன் கண்ணியம் அடையும் படி நகர பவனி வைபவம் வெகு சிறப்பாக நடத்தினர்.

தருமனை வெள்ளை யானைமீது ஆரோகணிக்கச் செய்து, பட்டுக் குடைகள் விரித்து நடன கீதங்களுடனும் சங்கீத மேள தாள வாத்தியங்களுடனும், ராஜோபசாரங்களுடனும் மரியாதை செய்து உபசரித்தார் அதன்பின் ஆப்பனூரில் மாட மாளிகைளும் நிர்மாணித்துக் கொள்ளச் செய்து அவனைத் தமது நாட்டின் சேனாதிபதியுமாக்கினார்.

அவ்விதமே கலுழன் தம்பதிகள் சோழ நாட்டின் தலை நகரான ராஜகெம்பீரம் என்னும் வட்டாரம் போய்ச் சேர்ந்தனர். அந்த நாட்டரசன் "நீ யார்? உன் குலம் யாது" என வினவினார். அதற்கு அவன் "முன்னொரு காலத்தில் தக்கனுடைய வேள்வியை அழித்த வீரபத்திருடைய மைந்தனான சிவருத்ருடைய கோத்திரத்தவன்; என்பெயர் கலுழன்; படைத்தொழில்பதினெட்டும் கற்றவன்" என்றான். சிவருத்ரருடைய மைந்தன் என்று அறிந்த சோழமன்னன் மனமகிழ்ந்து, அவனைத் தழுவித் தனது வலது பக்கத்தில் சிம்மாசனத்தில் அமர்த்தினார். "எமது அரசகுல மக்கட்குக் குருவாக இருந்து இந்த ராஜ்யத்திலே வாழ்வீராக" என்று கூறி மாங்குடி என்னும் எயினனூரைக் கொடுத்துத் தமது சேனைத் தலைவனாக்கினார். அதைப்போலவே, காரணச்சாமிக்குக் கோளரி ராஜன் என்பவர் இடபனூர் பட்டணத்தைக் கொடுத்தார். காளமேகம்போன்ற புஜபலத்தையுடைய காரணச்சாமி அவ்வரச குல மக்கட்குக் குருவாக இருந்து யாவரும் புகழத் தகுந்த முறையில் வாழ்ந்து வந்தான்.

சிவருத்ரரும், அவரது அன்னையார் கயல்மணிதேவியாரும், மனைவிகள் ஐவரும், இலவன் தம்பதிகளும் சிறுவை நகர் அரண்மனையில் வசித்து வந்தனர். ஏனைய புதல்வர்கள் தத்தம் தம்பதிகளுடன் வெவ்வேறு நாடுகளில் வெகு கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தனர். சில காலம் சென்றபின் சிவருத்ரர் சிறுவை நாட்டின் இராஜ்ய பாரத்தைத் தமது சிரேஷ்ட புதல்வன் இலவனிடம்

ஒப்படைக்க விழைந்தார். அவ் வைபவத்துக்குத் தமது மக்கள் அனைவரையும் குடும்பங்களுடன் வரவழைத்தார்.

மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய அலங்காரங்களுடன் மாளிகைகளும் மண்டபங்களும் நிருவப்பட்டன. சிறுவை நகரின் வீதிகளெல்லாம் மகர தோரணங்களால் சிங்காரிக்கப்பட்டன. மகுடாபிஷேக மண்டபம் இந்திரன் சபையை நிகர்த்திருந்தது. அழைக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் சகல ராஜோபசாரங்களுடன் வரவேற்கப்பட்டு, அவரவர்களுக்கு உரிய ஜாகைகளில் அமர்த்தப்பட்டனர். மறையோர்களும், பெரியோர்களும், மன்னர்களும், மந்திரி பிரதானிகளும் சபா மண்டபத்தில் குழுமியிருந்தனர், வெகு விமரிசையாகச் சகல ஆடம்பரங்களுடன் குறித்த சுப முகூர்த்த வேளையில் இலவனுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்றது. பல தான தர்மங்களும் வெகுமதிகளும் அளிக்கப்பட்டன. பெரியோர்களும், மன்னர்களும் ஆசி கூறித் தத்தம் நாடு சென்றனர். சிவருத்ரர் தம் மக்கள் தம்பதிகளை அன்புடன் உபசரித்துச் சில தினங்களுக்குப் பின் அவரவர் நாடுகளுக்கு அனுப்பிவைத்தார்.

சில மாதங்கள் சென்றபின் சிவருத்ரர் தமது தாயாருடன் தீர்த்த யாத்திரை செல்ல உத்தேசித்திருப்பதை அறிவித்து அவரது ஐந்து மனைவிகளுக்கும் ஆசி கூறினார். இலவன் தம்பதிகளையும் மனமுவந்து ஆசீர்வதித்தார். 'ஓம்' என்னும் சிவ மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்தருளினார். பின்னர் அனைவரிடமும் பிரியாவிடை பெற்றுக்கொண்டுத் தமது தாயாருடன் கூட முதன் முதலாகத் தஞ்சை மா நகருக்கு விஜயம் செய்தார். நள்ளியரசரிடமும் உக்கிர இளவரசரிடமும் விடை பெற்றுக் கொண்டு, கொழுமம் நகரை யடைந்தார். அங்கு தரும கூத்தன் தம்பதிகளுக்கு மந்திரோபதேசங்களை உபதேசித்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு ஆப்பனூர்

சென்றார். அங்கு வசித்துவந்த தருமன் தம்பதிகளை மனமுவந்து ஆசிர்வதித்து உபதேசங்கள் செய்தருளிய பின்னர் எயினனூர் பயணமானார். அங்கு கலுழன் தம்பதிகளையும், இடபனூர் சென்று காரணச்சாமி தம்பதிகளையும் ஆசிர்வதித்து மந்திரோபதேசங்களும் அருளினார். பின்னர் ஈழநாடு சென்றார். புரந்தரசிங்கன் தம்பதிகளால் அக மகிழ்வுடன் வரவேற்கப்பட்டார். அவர்களை ஆசிர்வதித்து மந்திரோபதேசங்கள் செய்த பின்னர், விடைபெற்றுக்கொண்டு, காசி யாத்திரையை ஆரம்பித்தனர். வழியிலுள்ள பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் மனமகிழ்ச்சியடைந்தனர். பின்னர் காசி மாநகரையடைந்து, புனித கங்கையில் நீராடிக் காசிவிசுவநாதரைத் தரிசனம் செய்து, தான தர்மங்கள் நடத்தி, தாயும் மகனும் பக்தி பரவசமடைந்தனர்.

கடைசியாக, அவர்கள் திரிவேணிசங்கம க்ஷேத்திரமாகிய பிரயாகையை அடைந்தனர். பரிசுத்த கங்கையில் ஸ்நானம் செய்தனர். பின்னர் சிவருத்ரர் இவ்வுலகில் தாம் செய்து முடிக்கவேண்டிய காரியங்கள் பூர்த்தியடைந்துவிட்டது என்பதற் கறிந்தறியாக, ஈசுவர கடாக்ஷம் பெற்ற அஸ்திர சஸ்திரங்களைப் புனித கங்கையில் அர்ப்பணம் செய்தார். அமைதியான நிலையில் ஆசனத்தி லமர்ந்து மனோ சாந்தியுடன் சமாதியில் ஆழ்ந்தார். ஈசுவர கிருபையால் தாயும் தனயனுமாக ஜீவன் முக்தியடைந்தனர்.

சிவருத்ரரும் கயல்மணிதேவியும் பூரணநிலையடைந்த செய்தி அறிந்த ஐந்தில்ல மாதரும் மக்களும் மண்டல பூஜைகள் செய்து, பிரார்த்தனை வழிபாடுகளும் தான தர்மங்களும் நடத்தினர். சிவருத்ரர் வகுத்த ஐந்தில்ல மக்களும் சந்ததியாரும் முறைப்படி மணங்கள் நடத்திப் பெற்றுப் பெருகி நாடெங்கும் பரவிப் பேர் புகழுடன் வாழ்ந்து வருவாராயினர்.

சிவருத்ர புராணம்

# அநுபந்தம்

*1.* ஆப்பனூர்:- இஃது 'கூடல் புனல் வாசம் குற்றாலம் ஆப்பனூர்' எனப் பாடல்பெற்ற புண்ணிய சிவக்ஷேத்திரம். சோழாந்தகன் என்னும் பாண்டியன் பொருட்டு மதுரைக்கு அருகே வைகை யாற்றங்கரையில் அவன் குதிரை கட்டியிருந்த ஆப்பிலே தோன்றிய ஈசன் ஆப்பன் எனப் பெயர் பெற்றார். அவர் அமர்ந்த இடம் ஆப்பனூர் ஆயிற்று. இப்பொழுது ஆப்பனூர் திருவாப்புடையார் கோயில் என்று குறிக்கப்படுகிறது. ஸ்தல புராணமும் பதிகமும் உடையது. கயல்மணி தேவியார் பூஜித்த ஸ்தலம். சிவருத்ரர் வளர்ந்த ஊர். இப்பகுதியைப் பாடினார் திருஞானசம்பந்தர்:-

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்று நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை யணியாப்ப னூரானைப்
பகரும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே- பதிகம் 5.

2. தமிழ்நாடு:- பழந் தமிழ் நாடு என்பதைச் சேர சோழ, பாண்டிய நாடுகள் மட்டும் அடங்கியிருந்தன என்று கூறுவது சரியன்று. கொங்கு நாடு, நடுநாடு, தொண்டை நாடு, மலைநாடு, துளுவ நாடு; என்னும் மற்றும் பெரிய நாடுகளையும் பெற்றிருந்தது என்பதற்குச் சான்று உள. அந் நாடுகள் ஒவ்வொன்றிற்குள்ளும், பல்வேறு சிறிய நாடுகள் அடங்கியிருந்தன. பெரிய நாடுகளின் எல்லைகளில் காலாகாலங்களில் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்ததுபோன்று, சிறு நாடுகளின் எல்லைகளிலும் பல் வேறு காலங்களில் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பெரிய நாடுகளின் வேந்தர்கள் வெற்றி பெற்றும் தோல்வி அடைந்தும் வந்திருப்பது போன்று, சிறிய நாடுகளின் மன்னர்களும் சில காலங்களில் சிற்றரசர்களாகவும் ,சில காலங்களில் சுயேச்சை

பெற்றும் அரசாண்டு வந்திருக்கின்றனர். உதாரணமாக, கருரை இராஜதானியாகக்கொண்ட கொங்கு நாட்டினில் தகடூர் நாடு, முதிரமலை நாடு, கொல்லி மலைநாடு என்ற உட்பிரிவுகள் அடங்கியிருந்தன. அவற்றைப் பல அரசர்கள் கைப்பற்றிச் சில காலங்களில் சுயேச்சை பெற்றும் ஆண்டுவந்திருக்கின்றனர். இவ்விதமே சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குள்ளும் அங்ஙக மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன.

3. நடு நாடு;- இது ஓர் காலத்தில் மகதநாடு என்றும் அழைக்கப்பட்டது. (1) இதன் வடபாகத்தை மலையமான்கள் என்னும் மரபினர் திருக்கோவிலூரை இராஜதானியாகக்கொண்டு அரசாண்டு வந்ததால், அப்பகுதிக்கு மலையமாநாடு என்று ஏற்பட்டது. (2) இதன் மத்தியபாகத்தைப் பாணர் என்னும் மரபினர் அரசாண்டு வந்தனர். அதனால் அப் பகுதிக்குப் பெரும்பாணப்பாடி நாடு என்று குறிப்பிடப்பட்டது. நிவாநிக் கரையிலுள்ள வாணபுரம் இந்நாட்டிற்குத் தலை நகராக விளங்கியது. இந் நகரின் அருகே பாண மன்னர் வெட்டிய ஏரியும் அதைச் சார்ந்த ஊரும் வாண சமுத்திரம் எனப் பெயர் பெற்றன. பாண மன்னர்கட்குள் சிறந்தவர்கள் மஹாபலி பாணன், பாணவித்தியாதரன் என்பவர்களே. மணிமேகலை காலத்தில் சோழ மன்னனாக இருந்த நெடுமுடிக் கிள்ளி அரசனுக்குப் பாண அரசன் மகளாகிய கோப் பெருந்தேவியார் மணம் செய்து கொடுக்கப்பட்டாள். புகழ்பெற்ற உதயகுமாரன் என்ற அரசன் இவர்களுக்குப் பிறந்தவன். பாண மரபினர் கவி பாடும் ஆற்றல் பெற்று மிக்க அறிவுடையோரென விளங்கி வந்தனர். அவருட் சிறந்தவர் பாணபத்திரர் என்ற திருநீலகண்ட யாழ்ப் பாண நாயனார். இவர் யாழ் வல்ல பாணர் எனப் புகழ் பெற்றார். இவருக்கு ஈழ நாட்டின் வடபகுதி தானமாகக்

கொடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே அதற்கு யாழ்ப்பாணம் எனப்பெயர் வழங்கி வருகிறது. (3) நடு நாட்டின் தென் பகுதியை நள்ளி நாடு எனக் கூறப்பட்டிருக்கிறது. நள்ளி என்பது இப்பொழுது நன்னிலம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. நள்ளி நாட்டிற்குத் தஞ்சை மா நகர் தலைநகராக விளங்கி வந்தது. இந்நாட்டு அரசர் மகளைச் சிவருத்ரர் மணம் செய்து கொண்டதால் சிறுவை என்ற சிறுகுடிப் பிராந்தியத்திற்கு அவர் அரசனானார். அவருக்குப்பின் அவரது சிரேஷ்ட புதல்வன் அரசனானான். சிறுகுடியானது செவ்வாய் கருடன் பூஜித்த மங்கள தீர்த்த ஸ்தலம்எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர் இப்பகுதியைப் பாடியிருக்கின்றார். (4) தென் மேற்குப் பகுதி திருமுனைப் பாடி நாடு எனக் கூறப்பட்டது. திருவாலூர் இதற்குத் தலை நகராக விளங்கியது. பல சிற்றரசர்களால் இப்பகுதி ஆளப்பட்டு வந்திருக்கிறது.

4. ஈழ நாடு - இது இப்பரத கண்டத்தின் தென்கீழ்ப் பாகமாக அமைந்துள்ள தீவு. 760 மைல் சுற்றளவுள்ளது. இந் நாடு இலங்கை, ஈழம், வீரை, சிங்களம், சிலோன், யாழ்ப்பாணம், சேரன் தீவு என்னும் பல காரணப் பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது. பின்னும் இஃது பிரகாசித்ததால் இலங்கை எனவும், பொன் பெற்ற நாடாதலின் ஈழம் எனவும், வீரவாகுவால் அரசாளப்பட்டதால் வீரை எனவும், சிங்கவாகு காலத்தில் சிங்களம் எனவும், அதன் மருவாய்ச் சிலோன் எனவும், யாழ்வல்லபாணருக்குத் தானம் செய்யப்பட்டதால் யாழ்ப்பாணம் எனவும் இயற்கை யன்னை எழில் பெற விளங்கிய செல்வம் நிறைந்த நாடாதலின் சேரன் தீவு எனவும் கூறப்பட்டன. பூர்வீகத்தில் இந் நாடு இராவணனால் ஆளப்பட்டது. சேர, சோழ, பாண்டிய நாட்டு மன்னர்களுக்கும் ஈழநாட்டு மன்னர்களுக்கும் காலாகாலங்களில் கடுமையான போரும், நெருங்கிய தொடர்பும் நேரிட்டிருக்கின்றன. ஈழநாட்

டரசர்களுள் சிறந்தவனான காம்போஜராஜன் சோழ பாண்டிய அரசர்களைத் தோற்கடித்து இராமேஸ்வரம் முதலிய இடங்களை ஈழ நாட்டோடு சேர்த்து ஆண்டான். நரேந்திரசிங்கன் என்னும் ஈழநாட்டரசன் மதுரையில் பாண்டிய அரசகுமாரியை மணந்தவன், மிகுந்து என்பவன் கலிங்க குமாரியை மணந்தான். கயல்மணி தேவி ஈழநாட்டரசன் மகள். வீரபத்திரர் அவளை மணந்தார். அவர்களுக்குப் பிறந்தவர் சிவருத்ரர். புரந்தரசிங்கன் என்னும ஈழ நாட்டரசன் சிவருத்ரருடைய குமாரன்.

5. **வீரபத்திரர்.**- திருக்கைலாயநாதரான பரமசிவனுடைய புதல்வன், சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலின்று தோன்றிய சிவ அம்சமானவர். விநாயகருக்கு இளையவர், இறைவனை மதியாத தக்கனின் வேள்வியை சிதைத்ததினால் வீரபத்திரர் எனத் திருநாமம் சூட்டப் பெற்றார். பிரகலாதனைத் துன்புறுத்திய இரணியனை வதம் செய்ய நரசிம்மமாக அவதரித்த மகாவிஷ்ணு, அதன் பின்னரும் கோபங்கொண்டு அதிக்கிரமித்து நின்றதால், வீரபத்திரர் சரப உருக்கொண்டு அவர் கோபத்தை அடக்கினார். அதன் பின் இராமராஜரின் புதல்வி கயல்மணி தேவியை மணந்தார். அவர்களுக்குச் சிவருத்ரர் பிறந்தார். வீரபத்திரருக்குப் பல நாமங்கள் இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன: உக்கிரன், அழற்கண் வந்தோன், உமை மகன், சிபுளாயோன், முக்கண்ணன், சடையோன், யானை முகவனுக் கிளையோன், வில்லி, செக்கர் வானிறத்தன், சிறுவிதிமகளு சிதைத்தோன், சிவனுடைய ருத்திர அவதாரம, சகல உலகங்களிலும் ஒப்பற்ற வீரன், மூன்று உலகங்களிலும் வணங்கப்படுவன், அக்கினிப் பிழம்பு போன்ற பிரகாசம் பொருந்தியவன், எட்டு ஆயுதங்களை உடையவன், புலித்தோலுடுத்தவன், வேதாளத்தின் மேல் அமர்ந்திருப்பவன், பாதிப்பூ நிறமுள்ள சடையில் சந்திரக்கலையை அலங்காரமாக வைத்திருப்பவன், வீரபத்ரம் நமாமி.

---

110748

பத்திரர்




படம் 11. 'இந்து மத வழக்க ஆசாரங்கள்' என்ற ஆங்கிலப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

(COURTESY OF MESSRS. TARAPOREVALA, SONS & CO. LTD.)

# சிவருத்ர புராணம்

## மேற்கோள் விவரங்கள்

1. அநேக ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட சிவருத்ர புராணம் ஏட்டுச்சுவடி. (எழுதப்பட்ட தேதி இல்லாதது)
2. ஷை ஷை ஷை 1025ஆ ஆவணி எழுதப்பட்டது.
3. ஷை ஷை ஷை 1070ஆ சித்திரை 25 எழுதப்பட்டது.
4. அபிதான சிந்தாமணி — ஆ. சிங்காரவேலு முதலியார்.
5. இந்துமத பழக்கமும் ஆசாரங்களும் (ஆங்கிலத்தில்) பம்பாய் தாரபொரிவாலா அன் சன்ஸ் வெளியீடு.
6. கந்தபுராணம் (செய்யுட்களும் வசனமும்)
7. சூடாமணி நிகண்டு — ஆறுமுகநாவலர் பதிப்பு.
8. சூதசங்கிதை — தேவராஜ பிள்ளை.
9. சேக்கிழார் ஆராய்ச்சி நூல் — வித்வான் மா. இராசமாணிக்கம்.
10. சோழன் இராஜ சோழன் — A. பாலசுந்தரம்.
11. தமிழகம் ஊரும் பேரும் — ரா. பி. சேதுப்பிள்ளை.
12. தல யாத்திரைப் படம் — சைவசித்தாந்த மகாசமாஜம்.
13. தல யாத்திரை விளக்கம் — ஷை ஷை.
14. திருக்கயிலாகிரி யாத்திரை — ஸ்ரீ சித்பவானந்த சுவாமிகள்.
15. திருஞானசம்பந்தர் தேவாரம் —
16. திருவாப்பனூர் புராணம் — கந்தசாமிப் புலவர்.
17. திருவிளையாடற் புராணம் — செய்யுட்களும் வசனமும்.
18. பழந்தமிழ் புலவர் — வித்வான் க. நயினார் முகமது.
19. பிரமோத்திரகாண்டம் — வ. த. சுப்பிரமணிய பிள்ளை.
20. பெரிய புராணம் — செய்யுட்களும் வசனமும்.
21. ரிக்வேதம் — பஞ்சாங்கம் புக்டிப்போ, குன்னங்குளம்.

8B
2-32



கயல்மணி தேவியின் பிரார்த்தனை

SCANNED

ரிக்வேதம்-புருஷ ஸூக்தம்

ஓம் ஸஹஸ்ர ஸீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்
ஸ பூமிம் விஸ்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத் தசாங்குலம் (1)

❖ ❖ ❖ ❖ ❖

யஜ்ஞேன யஜ்ஞ மயஜந்த தேவா ஸ்தானி தர்ம்மாணி ப்ரதமான்
யாஸன்
தேஹ நாகம் மஹிமான ஸ்ஸசந்த யத்ர பூர்வ்வே ஸாத்யா
ஸ்ஸந்தி தேவா: (16)